கோவைத் தமிழ்ச்சங்கப் பதிப்பு, இலக்கம், 49.

பாரதம் பாடிய

# ஸ்ரீ வில்லிபுத்தூரார் : :

# : : : சரிதம்.


வாதாவி சாளுக்கிய மன்னர்கள் வரலாறுகள்,
மகாத்மா கபீரடிகள் சரிதம், அதிவீரராமபாண்டியன் சரிதம்,
முதலியவற்றை எழுதிய

கோயமுத்தூர்
சி. கு. நாராயணசாமி முதலியார்
தொகுத்தெழுதியது.

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1933.

[பதிப்புரிமை பெற்றது] [விலை 0—10—0



சி. கு. நாராயணசாமி முதலியார். (4-3-32)

# முகவுரை.

செந்தமிழ்ப் புலவர்களில் திலகமாகத் திகழ்ந்தவரும் செங்கண்மாலின் பங்கயத்தாளில் சிந்தைவைத்த செவ்வியருமாகிய பாரதம் பாடிய ஸ்ரீ வில்லிபுத்தூரரது உண்மை வரலாற்றை இதற்குமுன் அறிஞர் பலர் எழுதியிருந்தும், யானும் எழுதத்துணிந்தேன்.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற வள்ளுவனாரது ஆணையைக் கைக்கொண்டு, எனக்கு முன் எழுதியோர் கூறும் செய்திகளிலும், இந்நூலிற் காணப்படும் செய்திகளிலும், பொதிந்துள்ள உண்மைச் சரிதங்களை அன்பர்கள் ஓர்ந்துணர்வார்களென்பது எனது நம்பிக்கை.

இவ்வரலாற்றை எழுதுவதற்கு எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தவை, 1904–1914-ஆம் ஆண்டுகளில் வெளிவந்த வில்லிபுத்தூரர் சரித்திரச் சுருக்கங்களும், திருவாளர்கள் T. இரங்காசாரியாரவர்கள், T S. நடராஜபிள்ளையவர்கள், B. A., B. L., க. ப. சந்தோஷம், B. A., L. T. அவர்கள், சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர், முதலிய பேரறிஞர்கள் வில்லிபுத்தூரரையும், அவரது பாரதத்தையும் பற்றி அவ்வப்போது ஆங்கிலத்திலும், அருந்தமிழிலும் எழுதிய கட்டுரைகளுமாம்.

முன்னோர் மொழிபொருள்களைப் பொன்னேபோற் போற்றுதல் பொருத்தமானதேயன்றோ! அம்முன்னோர் தொகுத்த பொருண் மலர்களோடு, எனது சிற்றறிவுக்கெட்டிய சிற்சில அரும்புகளும் சேர்த்து எனது புன்சொல் நாரால் புனைந்திருக்கிறேன். இவ்வாறு புனைவதற்கு வேண்டிய உழைப்பின் அளவை இச்சரிதத்தை ஓதுவார் உணராமல் இரார்.

வேடிக்கைக் கதைகள், கற்பனைப்புதினம் முதலியவற்றில் மக்கள் கருத்தூன்றி வரும் இக்காலத்தில் இத்தகைய முயற்சியில் யான் இறங்கியது என்னெனின், நம் தமிழ் மக்கள், தமிழ் மொழியின் அருமை பெருமைகளையும், அம்மொழிகளைப் பெருகச்செய்து பெருங்கவிஞராது புலமை மாண்பையும் உள்ளவாறுணர்ந்து மொழிக்கும், நாட்டுக்கும், ஆக்கத்தைத் தேடுவதில் கருத்துடையாராக வேண்டுமென்றேயாம்.

அச்சுயந்திரங்கள் முதலிய சாதனங்கள் மிகமலிந்து, மாதப் பத்திரிகைகளும், புத்தகங்களும் நாடோறும் நமது தமிழகத்தில் வெள்ளம்போல் பெருகிக்கொண்டிருப்பினும், நான் முன்னே கூறியபடி அவற்றுள் பெரும்பாலும் விநோதக் கற்பிதங்களும், வெருங்கதைப் புனைவுகளுமாக விருப்பதேயன்றி, புலவர் பெருமக்களைப் பற்றிய ஆராய்ச்சியுரைகள் சிற்சில காணப்படினும், அவை பெரும்பான்மையும் தமிழகத்தோடு தொடர்புடையன அல்லவாகக் காணப்படுகின்றன. நமது தண்டமிழ் நாட்டுப் பெரியோர்களைப்பற்றிய வரலாறுகள் மிகுதியாகத் தோன்றாமைக்குக் காரணம் ஒன்றிரண்டு தோன்றியவற்றையும், ஆதரிக்கக் கடமைப்பட்டோரும், தமது கடமையை உணராமல் புறக்கணித்திருப்பதனாலேயாம். இனியேனும் இத்துறையில் உழைப்பவர்களுக்கு இயன்ற உதவியும், ஊக்கமும், அளிப்பதில் தமிழர்கள் தண்ணருள் கொள்ளும்படி வல்லான் முற்றுமுணர்ந்த முதல்வனைச் சொல்லால் உளத்தாற் செயலால் தொழுகின்றேன்.

நமக்கேற்ற ஒழுக்கத்தையும், நமது நாட்டுக்குப் பெருமையையும், நமது மொழியின் வளர்ச்சியையும் தருவன நமது தமிழகத்துச் சான்றோர்களின் நல்வரலாறுகளேயாம்.

நமது ஒழுக்க நலத்திற்குரிய விதிகளைப் பன்னிப்பன்னிப் போதிப்பதைக் காட்டிலும், அவ்விதிகளில் வழுவாது ஒழுகிய நல்லோர்களின் சரிதங்களைப் போதித்தல் மக்கள் எளிதில் திருந்துவர் என்பதில் ஐயமில்லை.

ஆதலால், நமது தமிழ் நாட்டில், அதிலும் மணம் நிரம்பிய கொங்ககத்தில் புகழ் சிறக்கத் தோன்றித் தமிழை வளர்த்துத் தமிழருக்கு வழிகாட்டியாயிருந்து பெருமையளித்த வில்லியாரது மேதக்க வரலாறு தமிழகத்திற்குச் சிறந்த நன்மை தருமென்று நம்புகிறேன். தமிழ் கற்றோர் இதனை ஆதரிக்க முந்துவாராக.

நான் இச்சரிதத்தை அச்சிடும்போது, எனக்குதவியாயிருநது அச்சுப்பிழை திருத்திக் கொடுத்ததோடு நூலமைப்பிற்கு வேண்டிய யோசனையையும், உரிய கருத்துக்களையும், அன்புடன் கூறிய எனது தமிழறி நண்பரும், கோயமுத்தூர் முனிசிபல் உயர்தரக் கலாசாலைத் தமிழாசிரியருமாகிய வித்துவான் திரு C. K. நடேச கவுண்டரவர்களுக்கும், சுருங்கிய கால அளவிற்குள் நூல் அச்சேறி முடிவதற்குப் பெருமுயற்சியைச் சலியாது மேற்கொண்டதுடன் அச்சுப்பிழைகளை என்னுடனிருந்து ஒத்திட்டுத் திருத்துவதிலும் உபகாரம் புரிந்த கோயமுத்தூர் ஸ்டார் அச்சுக்கூடச் சொந்தக்காரர், திரு. N. A. நடராஜஞ் செட்டியார், அவர்களுக்கும், எனது அன்பார்ந்த வணக்கமும், மறவா நன்றியும் என்றும் உரியதாகுக.

கலைமகள் தமிழகம்
ஆனித் திங்கள்
30-ஆம் நாள்
கோயமுத்தூர்.

சி. கு. நாராயணசாமி முதலியார்.

கோவை ஜில்லா கல்விச் சபைத் தலைவரும்
கோவைத் தமிழ்ச்சங்க அமைச்சரும்,
'கொங்கு நாடும் சுந்தர மூர்த்திகளும்'
'மருதமலை மான்மியம்'
'இளைஞர் பாடல்கள்' முதலிய நூல்களின்
ஆசிரியருமாகிய
ராவ்சாகிப் திரு.
C. M. இராமசந்திரஞ் செட்டியார் B.A., B.L.
அவர்கள் கூறிய

# சிறப்புப் பாயிரம்.

———:():———

பொன்னே போலும் போற்றத் தகும் நம் செந்தமிழ் மொழிக்கு அன்பின் மிகுதியால் அருந் தொண்டு புரிபவர்கள் சிறு தொகையினராவர். இச் சிறு தொகையினருள்ளும் தம் வாழ் நாள் முழுதும் திருத்தொண்டு புரிவதில் ஈடுபடுகிறவர் மிகச் சிலரே. அத்திருத் தொண்டையும் ஆராய்ச்சி முறையில் செய்கின்றவர் அரிதானவர். அவ் வரிதானவர்களுள், நமது நண்பர் திரு. சி. கு. நாராயணசாமி முதலியா ரவர்கள் ஒருவராவர். ஆங்கில முதலிய மேனாட்டு மொழிகளில் இயற்றப்பட்டுள்ள புலவர் பெருமக்கள் சரிதங்களைப் போலவே தமிழ் மொழியிலும் ஏற்பட வேண்டுமென்பது அவர்கள் கருத்து. அவர்கள் இதுவரை கவிச் சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தர், புகழேந்தியார், அருணகிரி நாதர், இரட்டையர், படிக் காசுப் புலவர், பொய்யா மொழியார் முதலிய பெரும் புலவர்களுடைய வரலாறுகளை வெளியிட்டதுபோல் தற்போது ஸ்ரீவில்லிபுத்தூராருடைய சரிதத்தையும் பல வகையினும்

ஆராய்ச்சி செய்து வெளியிட்டிருக்கின்றார்கள். இவ் வரலாறு மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மிகவும் பயன் தரு மென்று நம்புகிறேன்.

தமிழ் மொழியில் புலவர் சரிதங்கள் எழுதுவது மிகவும் கடினம். அவ்வப் புலவர் காலங்களில் அவ்வப் புலவர்க ளுடைய வாழ்க்கைச் செய்திகளை எவரும் எழுதிவைக்காத வகையினால் அவர்களைப் பற்றிப் பிற் காலத்தில் பல கட்டுக் கதைகளும், கன்ன பாரம்பரைக் கதைகளும் ஏற்பட்டு விட் டன. அவைகளை ஆய்ந்து உண்மைகளைத் தொகுத்துப் பொய் யுரைகளையும், கற்பனைகளையும் போக்கி ஒரு மெய்ச் சரித மாக் குவதென்றால், மிகவும் கஷ்டமான காரியம்.

இந்நிலையானது நமது மக்கள் அடைந்துள்ள துர்ப் பாக் கியத்தினால் ஏற்பட்டதாகும். பொய்யைப் பிரித்து, உண்மை யை வகுத்து எடுத்து எழுதுவதற்குத் தகுந்த உதவி புரிபவர் களும் இல்லை. ஆகவே, பல இடுமபைகளுக்கு இடையில் நமது முதலியாரவர்கள் இத்தகைய பெருங் கைங்கரியத் தைச் செய்தது அவர்களுக்குத் தமிழின்பாலுள்ள தணியாக் காதலை விளக்குவதாகும்.

ஸ்ரீ வில்லிபுத்தூரரது வரலாற்றை வாசிக்கின்றவர்கள், முதலியாரவர்களது சரித்திர ஆராய்ச்சியை அறிந்து கொள் ளுவர். வில்லிபுத்தூரர் பாரதம் பாடியதுபற்றி வழங்கப்படும் பலவித வரலாறுகளையும் எடுத்துக் கூறி அவைகளில் உண்மை யானதைத் தகுந்த ஆதாரங்களோடு விளக்கி, ஏனையவை களையுமேன் ஆராயக்கூடா தென்பதற்கு தகுந்த நியாயங் களை எடுத்துக் காட்டி நிரூபித்துள்ளார்கள். இத்தகைய ஆராய்ச்சி, தமிழ் வரலாறுகளுக்கு மிகவும் அவசியமானது. வில்லியாரது வாழ்நாட் செய்திகள் நமக்கு வெகுவாகத் தெரி யாது. அதனை நமது முதலியாரவர்கள் தெளிவுபட ஆராய்ச்சி யுடன் விளக்கியது போற்றத் தக்கதாம். புலவர் பெருமா னுடைய தந்தை பெயர் 'வீரராகவன்' என்றும், புதல்வன் பெயர் 'வரந்தருவார்' என்ற மரூஉப் பெயர் வாய்த்த பாதாச் சாரியர் என்றும் கன்ன பரம்பரை உண்டு. நமது வில்லியார்

தொகுப்பாசிரியர், தந்தை பெயரைக் கையாண்டு, மகனார் பெயரை விடுத்திருக்கின்றார்கள். பாயிரம் பாடியது வரந்தரு வாரென்று மாத்திரம் ஆதாரங் கிடைக்கின்றது. ஆனால், அது அவர் மகன் பெயரோவென ஐயுற்று அவரது சம காலத்துப் புலவர் என்று கொண்டிருக்கின்றார்கள். உண்மையான ஆதாரம் கிடைக்கு மட்டும் முதலியாரவர் கூற்றுக்கு ஆட்சேபனை கூற முடியாது. வில்லிபுத்தூராரது சமரஸக் கொள்கையினை வற்புறுத்துவதற்கு சைவ சமய குரவர்களாகிய சம்பந்தர், சுந்தரர் இவர்களைப் பற்றிப் பாராட்டினது மன்றி அவ்வுதாரணச் செய்யுட்களையும் எடுத்தாண்டிருப்பது இன்புறுதற்குரியது. இதுவரையில பிறநூலாசிரியர்கள் இத்துணை தெளிவாக இச் செய்தியை எடுத்துக் கூறினார்களில்லை. பிரபுடதேவராயன் அவையில் வில்லியாருக்கும், அருணகிரியாருக்கும் நடந்த சம்வாதத்தை வெகு திறமையுடன் முதலியாரவர்கள் எடுத்தாண்டிருக்கின்றார்கள். வில்லிபுத்தூராரது தோல்வியை ஒப்புக்கொண்டும், தான் கதாநாயகன் என்ற அபிப்பிராயத்தினாலே அவருக்கு ஒரு பெருமை தந்து சமாளப்படுத்தி வருணித்திருக்கின்றார்கள். வில்லிபுத்தூரரை ஆதரித்த சிற்றரசன் ஆட்கொண்ட நாயனைக் குறித்துள்ள பகுதிகள் மிகுந்த ஆராய்ச்சியின் பாற் பட்டவை. ஆட்கொண்ட நாடன் நடுநாட்டில் வக்கபாகை என்ற ஊரில் ஆண்ட ஒரு சிற்றரசனாகவிருந்தும் அவனுக்குக் 'கோங்கர் கோன்' என்ற பெயர் வந்ததன் காரணம் மிகவும் தேர்ந்த அறிவைக் கொண்டு ஊகிக்கப் பெற்றதென்னலாம். எந்த நாட்டில் எவர் பிறந்தாலும் பின் வேறு நாட்டில் குடி சென்றால் பழைய நாட்டின் பெயரைக் கொண்டே அழைப்பது நமது தமிழரின் வழக்கம். உதாரணம்:—சோழிய வேளாளர், தொண்டை மண்டல வேளாளர் முதலியன. (பக்கம் 31) அதே போல் தனிக் குடும்பங்களும், மக்களும் பெயர் கொள்வார்கள். இவ் வழக்கத்தை அநுசரித்தே ஆட்கொண்டானும், நடுநாட்டிற் சென்று குடியேறி அரசு செய்த போதிலும் அங்கே 'கோங்கர் கோன்' என்று அழைக்கப்பட்டான். இவ் வபிப்பிராயத்திற்குக் கொங்குமண்டல சதகச் செய்யுள் (பக்கம் 31) சான்றாகும். அச் செய்யுளில், "பாரதத்தைத் தமிழ் மொழியில் பாடச்

செய்த ஆட்கொண்டான் என்ற அரசனுடைய முன்னோர்கள் கொங்குமண்டலம்" என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆட்கொண்டான் கொங்குமண்டலத்தில் அப்பொழுதில்லை யென்பது தெளிவிடை. இதனால், 'நடு நாடு' கொங்கு மண்டலத்தில் சேரவில்லையெனப் பொருள்படும். ஆனால், நமது முதலியாரவர்கள் இவ்வரிய அபிப்பிராயத்தை எடுத்தாளுவதோடு இவர் கூறுகிற அபிப்பிராயமாகிற நடுநாடும் ஒரு காலத்தில் கொங்கு நாட்டைச் சார்ந்திருக்கலாம் என்றும் கூறுகின்றனர். இதனை வேறு ஆதாரங்கள் கிடைக்கு மட்டும் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளத் தயங்க வேண்டும். வெக்கபாகை என்ற ஊர் எது என்பது இன்னமும் முடிவாகத் தெரியாத செய்தி. அதைப்பற்றி ஆராய்ச்சியாளர்கள் இன்னமும் ஆராய்ச்சி செய்தல் நலம். பிரபுட தேவராயனைப் பற்றிய பல குறிப்புகள் முதலியாரவர்கள் குறித்திருக்கின்றார்கள். இன்னமும் அவனுடைய வமிசாவழி முதலியன அடுத்த பதிப்பில் வெளி வருமென்று நம்புகிறேன். காவிய ஆராய்ச்சியில் முதலியார் எடுத்தாண்டுள்ள வடமொழிக் கலப்பு, பொருட்சுவை, மொழிச்சுவை முதலியன மாணவர்களுக்கு மிகவும் பயன்படும். இவைகளைப் படிப்போர்களுடைய ஒவ்வொருவர் நெஞ்சிலும் வில்லி பாரதத்தைப் படிக்க வேண்டுமென்ற ஆர்வம் ஏற்படும் என்னலாம்.

இத்தகைய மேம்பாடுகளைக் கொண்ட ஒரு சரிதத்தை நமது அன்பர் முதலியாரவர்கள் வெளியிட்டதைக் குறித்து நம் தமிழ் நாடு அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கின்றது. இதைக் கவனித்து நம் தமிழ் மக்கள் அவர்களிடத்தில் அன்பு கூர்ந்து அவர்களை உற்சாகப் படுத்துவது முக்கியமான கடமையாகும். தமிழாசிரியர்களும், இந்நூலைப் பிள்ளைகளுக்குப் போதிப்பதற்குத் தகுந்த சாதனமாக ஏற்றுக் கொள்ளுவார்களென்று நம்புகிறேன்.

கோவை.
21-7-33.

ம. ரா.

# மதிப்புரை.

---

"கம்பநாடர்" என்னும் இதழாசிரியரும்
"வில்லி பாரத வசனம்"
என்னும் நூலாசிரியருமான
**மோ. வே. கோவிந்தராஜ ஐயங்கா ரவர்கள்**
எழுதியது.

"நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று" உயர்ந்தோராற் போற்றப் பெற்று நிலவுவது மாபாரதப் பெரும் பனுவலே. இது நுதலும் பொருளினாலும் அமைந்த அமைப்பினாலும் இதிஹாஸங்களி னொன்றாகப் பெரியோராற் போற்றப்பட் டிருக்கின்றது. இதிஹாஸ மென்பது, பண்டைச் சரித மொன்றைச் சரித்திர வுண்மை நிகழ்ச்சிகளைப் பிரகிருதி தத்வ - ஜீவதத்வ - பரதத்வ வுண்மைகளுடன் பொருத்திக் காட்டிப் படிப்போரும் கேட்போரும், படித்தபடியே கேட்டபடியே நின்று ஒழுகித் திருந்துமாறு அமைக்கும் பனுவற் கதியாகும். சரிதத்துக் குரிய முன்னலங்களும் ஒழுக்கத்துக் குரிய எந் நலங்களும் மிகப் பொருந்துப்படியாக, பாரதர் சரி தத்தினை ஆரியத்தில் அழகுபெற ஆக்கியோர், தவ வொழுக்கங்களில் மிகச் சிறந்து, திரிகாணங்களினுந் தேறிச் சொன் வன்மை வாய்க்கப் பெற்ற வியாத மாமுனிவ ராவார். முனிவர், அம்மொழியில் பல புராணங்களைப் புனைந்துள்ளவரென்று பெரியோர் குறிக்கின்றனர். இப் பெரியார், சிக்குண்டு கிடந்த

வேதத் தொகுதியை இருக்காதி நான்காக வகுத்த முறை யால் "வியாதர்" என்னும் காரணப் பெயர் பெற்ருரென்பது பிரஸித்தமாக வழங்கப் பெறுகின்றது. இவரைப், பாதராயண ரென்றும் த்வைபாயன ரென்றும் பிறவுமான பெயர்களாற் சொல்லி யழைப்ப துண்டு.

மாபாரதப் பெரும் பனுவலில், பகவற் கீதையானது. முடியரதனமாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. கீதை பாரத நூலின் உயிர்ப் பொருளென்றே கூறத்தக்க தொரு மாண்புடையது. இதன் பொருள், வேதாந்தக் குறிப்பினைத் தெற்றெனத் தெரிவித்து, உள்ளத்தைத் தெளிவிக்கும் ஒழுக்க முறை, வினு விடையி லமைந்துள்ள பெருமை யுடையது.

இங்ஙனம் எவ் வகையினும் உயர்வு பெற்றதொரு பெரும் பனுவலை எம் மொழியினரும் 'இஃதோர் செம்மொழி' யெனப் போற்றிக் கொள்வா ரெனின், ஆரியக் கதைகளை - ஆரிய வொழுக்கங்களை - ஆரியக் கூத்துக்களை - என் ? ஆரி யம் காட்டும் எம் முறைகளையும் தன்னதாக்கிக் கொள்ளும் தன்மையைப் பண்டை யொழுக்கமாக் கொண்டதொரு தண் டமிழ் மொழியில், பாரதப் பனுவல் வெளிவந்து ஒளிர வேண்டுவது ஆக்கத்தினும் ஆக்கம் பயப்ப தொன்ருகும்.

பாரதப் பெரும் பனுவலைத் தண்டமிழ் மொழியில், மொழிக்குரிய விலக்கணங்களுடன் புனைந்து தொகுத்துள்ள வர்கள் பல்லோர்; எனினும், படிப்போரது உள்ளத்திற் சரித நிகழ்ச்சி நன்கு பதியும் வண்ணம் நடைப் போக்கும், நிகழ்ச்சி களைக் கேட்போரது உள்ளத்தில் எழுச்சி தோன்றும்படி யாகச் சந்தக் குழிப்பமையும் வண்ணத் தொடைப் போக்கும் கொண்டு விருத்தப் பாவிலமைக்கப் பெற்றுச் "சவியுறத்

தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவி" யொரு ஜீவநதி யாங்கு ஆன்மப் புலங்கட்கு ஜீவனமாகத் தண்டமிழுலகிற் சில நூற்றாண்டுகளாக (ப் பாரத சரிதத்தைப் பெருக) ச் செய்த பெருமை, சனியூர் வீரராகவன் திருக்குமாரராம் வில்லி புத்தூரர்க்கே யுரிமையாயிற்று.

வில்லிபுத்தூரர் வட மொழியிலும் தென் மொழியிலும் முறைப்படி பயின்ற மூதறிவாளர். பகரும் கூற்றுக்களைப் பண்ணுடனலமக்கும் பண்பறி கோளர், தெள்ளிய நடையி லொள்ளிய துணர்த்துந் தென்மொழியாளர். இப்பெரியார் பெருமை ஒப்பிலா துயர்ந்தது. தென்றமி ழுலகத்தென்றும் மறையாதது. வில்லியார் பெருமை ஒருவர் சொல்லி யாதல் வேண்டா. தானே மலருந் தன்மையது. படிப்போர் போற்றும் பான்மையது. கேட்போர் வேட்கும் கேண்மையது.

இங்ஙனம் சொல்வளனும் பொருட்டெளிவும் உயிர்க் குறுதியும் குழீஇக் கொண்டு பனுவ லியற்றிப் பெருமை வாய்ந்த ஆசிரியப் பெரியார்களைப் போற்றி, யாண்டு விழாக் களும் - அயன வோலக்கங்களும் - திங்கட் பொங்கலும் - பக்ஷோத்ஸவங்களும் - வாரச் சாறும் - கிழமைப் பழைமையும், கொண்டாடாத நாடு, நன்றி மறந்த தொன்று கும்; நாட்டார், தேட்டம் மறந்த தெளிவற்றவரென மதிக்கப் பெறுவார்; நாட்டுச்சிறார், நாட்டுக்குரிய நல்லிணக்கத்திற் காட்டப் பெறார்.

ஆன்றோரைப் போற்றிப் புனித மென்னுஞ் செயல், அவர் தம் பெருமைகளை யுள்ளத் தமைத்த போதல்லாது நிகழாது. ஒரு நாட்டின், கற்றாரும், மற்றாரும், ஆசிரியரும், மாணவரும், அறிஞரும், தெரிஞரும் படித்துக் கேட்டு உள்ளத் தமைக்கும்படி, ஆன்றோர்களது - ஆசிரியர்களது சரிதக் கலன்களை ஒழுக்க நலன்களை - அறிவுக் கூட்டங்களைத் தெளி

வுத் தேட்டங்களை, உள்ளவா றுணர்த்தக் கூடிய - கொள்ளு மாறு கொடுக்கக் கூடிய எழுத்தாசிரியர்கள் நாட்டுக்கு நன்கு அமைதல் வேண்டும்.

சரிதக் குறிப்புக்களை மயங்க வைத்துச் சாற்றுதலோ - ஒழுக்க முறைகளை யுயர்வு காட்டிப் புனைதலோ - அநுபவ வுண்மைகளை யதிசயங் காட்டி யமைத்தலோ ஆன எழுத் துக்கள், ஆன்ற ஆசிரியர்களது பெருமையைக் குறைத்து, ஏன்ற எழுத்தாசிரியர்களது சிறுமையைத் தெரித்துப், படிப் போர் - கேட்போர் உள்ளத்தைத் தெளியா திருக்கும்படி செய்யுந் தன்மையன. இங்ஙனம் எழுதும் எழுத்தாசிரியர் என்னும் ஈனர்கள் - சொல்விலைஞ ரென்னும் பாணர்கள் - எழுத்து வணிக ரென்னும் வீணர்கள் எல்லா நாட்டினும் பொல்லாப் புலிகளாக நில்லா நிலவுகின்றனர் என்பர். நம் தமிழ் நாட்டிலோ, இத்தகையார் பெரும் பகுதியினராக மின் மினி போல மிளிர்ந் துலவுகின்றன ரென்பது உண்மையினு முண்மையாகும்.

நமது எழுத்தாசிரியர், ஸ்ரீமான். சி. கு. நாராயணசாமி முதலியா ரவர்கள், நூலாசிரியர், உரையாசிரியர், போதகா சிரிய ரென்னும் ஆசிரியன்மார்களுடையவும், பூவலர்ந்து பொலியச் செய்யும் புகழுடை நாவலர் காவலர்க ளுடையவும் சரிதங்களை, உண்மை விளங்க எழுதக் கூடிய உரிமை வாய்ந்த வர்கள். பொய்ம்மை கலந்து கலங்கித் தேங்கி நிற்கும் சரித நிலயங்களில் மூழ்கி, அடைபட்டுக்கிடந்த மெய்ம்மை யூற்றுக் கண்களைத் துலக்கிச் சரித நிலயங்களைத் தெளிந்து அருந்து வார் அநுபவித் தருந்தும் படியாகத் துருவி யமைக்குந் தோலா அறிவினர். முப்பா ணுண்டுகளாக இவ்வரிய துறையி லிறங்கி விடா முயற்சியுடன் உழைத்துப் பொறுமையுட னும

ரிய பெருமை வாய்ந்தவர்கள். தண்டமிழ் மொழியின் இலக்
கிய இலக்கணங்களை நல்லாசிரியன்மா ருடனிருந்து ஆய்ந்த
வர்கள். கடமை நலனே யன்றி வேறு உடைமை நலங்களின்
பேரவாவினின்றும் வெளியே பெயர்ந்தவர்கள் ஒழுக்க நலங்
களில் உயர்ந்தவர்கள். எம்முடன் பல்லாண்டுகளாகப் பழ
கினவர்கள்.

இப் பெரியார், தம் மியல்பினதான ஆராய்ச்சி முறை
யில் வெளியிட்டிருக்கும் பனுவல்கள் பலவாம். அவற்றுள்,
கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் வரலாறும், பொய்யா
மொழிப் புலவர் சரிதப் பனுவலும், தொண்டை மண்டலச்
சதகத் தொகுப்பும், பழனித்தல மகத்துவப் பகுப்பும், புக
ழேந்திப் புலவர் பெருமானது வரலாற்றுப் பெருமையும் பிற
நூல்களின் அருமையும், ஆன்றோர் பலராலும் ஏன்று கொள்
ளப் பெற்றுள்ளன. இன்னும் பன்னூல்கள் இவர்களா லெழு
தப் பெற்றிருக்கின்றன; பின்னும் நன்னூல்கள் எழுதப் பெறு
வனவாக அவர்கள் உள்ளத்தில் ஒளிர்ந்து கொண்டிருக்கின்
றன. விரைவில் வெளிவரல் கூடும்.

இன்று நமது கையில் நின்று நிலவும், "பாரதம் பாடிய
வில்லிபுத்தூரார் சரிதம்" என்னும் இவ்வுயரிய பனுவல் மிகத்
தெள்ளிய நடையில் அமைக்கப் பெற்றிருக்கின்றது. எள்ளி
நகையாடற்குரிய - இருட் பள்ளத்திற் றேங்கக்கூடிய - கள்
ளத்தின் விளைவு கலவாது, தெள்ளியோர் உயர்வாகக் கொள்
ளும்படியாக்கப் பெற்றுள்ளது. பள்ளி மாணவர்க்குப் பயன்
படு முறையில் வசன வகுப்பும் பாடற் பகுப்பும் தனித்தனி
யமைந்த சிறப்புடையது. சிறிய உருவில் பெரிய மணிகளை
யுள்ளடக்கிய கருவூலத் திறப்புடையது. ஆசிரியப் பெருமக்க
ளது ஆசு இரியும்படி யமைக்கப் பெற்ற அருமையுடையது.

அறவோரும் பொருளோரும் அன்பினரும் என்புறப் பொருந்திப் பெற்றோமெனக் கொள்ளும் பெருமையுடையது.

இவ்வரிய பனுவலைத் தம் உரிமை நூலெனக் கொண்டு தம் உடைமையாப் போற்ற வேண்டுவது நம் நாட்டினர் கடமையாகுமென்பது மிகையாக மாட்டாது. மாணவரைப் பயிற்றும் மாண்புடைப் பெரியார், இவ்வருநூலினையும் இது போன்ற பெருநூல்களையும் ஆதரித்து, ஆசிரியர்களை யூக்கி, நாட்டின் இலக்கிய வளங்களைச் செழுமை பெறக் காண்பார் களாக என்பது எமது உள்ளத்தமைந்துள்ள தொரு கொள் கையா மென்பதை மிக விநயத்துடன் தெரிவித்துக் கொள் கின்றேம்.

எமது உழுவலன்பிற்குரிய ஆசிரியர் ஸ்ரீமான் முதலி யாரவர்கட்கு நீண்ட வாயுளும், பூண்ட புகழும், மாண்ட கலை யறிவும், ஆண்ட வொழுக்கமும் பெருகி யோங்கச் செய்திடு மாறு எமதுள்ளம் பிரியாத மெய்ப் பொருளாகும் - சீதா லக்ஷ்மண பரத சத்ருக்ந ஹநுமத்சமேத ஸ்ரீராமசந்த்ர பரப் பிரம்மத்தினை யுள்ள உரை செயலால் வழுத்துகின்றோம் சுபம்.

——:():——

# மதிப்புரை.

கோயமுத்தூர் நியாயவாதியும், 'ஸ்ரீ மாணிக்க வாசகர்' 'கருவூர்த்தேவர்' 'சேக்கிழார் ஆராய்ச்சி' 'மாதிருக்கும்பாதியான்' 'அவநாசி கருணாம்பிகையார் பிள்ளைத் தமிழ்' முதலிய நூல்களின் ஆசிரியரும் தமிழ் வித்துவானுமாகிய, திருவாளர்
**சி. கே. சுப்பிரமணிய முதலியார் B. A. அவர்கள்** கூறியது.

கோயமுத்தூர் **திருவாளர்** சி. கு. **நாராயண சாமி முதலியார்** அவர்கள் தொகுத்தெழுதிய "**ஸ்ரீ வில்லிபுத்தூரார் சரிதம்**" என்ற நூலின் பிரதி ஒன்றை அவர்களால் அன்புடன்தரப்பெற்று வாசித்தேன். ஸ்ரீமான் முதலியாரவர்களையும், அவரது தமிழ்த்திறம், ஆராய்ச்சித்திறம் முதலியவற்றையும் தமிழுலகம் நன்கறியும். அவர் வாதாவிசாளுக்கிய மன்னர்கள் வரலாறுகள், அருணகிரியார் வரலாறு-பொய்யாமொழிப் புலவர் சரிதம்-முதலிய பல அரிய நூல்களைஎளிய தமிழ் நடையிற் செய்து தமிழுக்கு அருந்தொண்டாற்றி யுள்ளார்கள். "ஸ்ரீ வில்லிபுத்தூரார் சரிதம்" என்ற இந்நூலும் அவரது வழக்கம் போலப் பல உண்மைச்சரிதவரலாறுகளை ஆராய்ந்து தொகுத்து எழுதப்பெற்றுள்ளது. இது "**தோற்று**

வர்ப் "ஊரும்-நாடும்"-"பெயரும்-காரணமும்" என்பனவாகிய இருபத்தைந்து பகுதிகளைக் கொண்டது. இதனுட் பொதிந்த பொருள்கள் ஆசிரியர் தமிழ்க்கவிவல்லார்களின் சரிதங்களிலேயே மிகஆராய்ந்துள்ள ஆராய்ச்சித் திறத்தை நன்கு விளக்குகின்றன. இவற்றுள்ளே 'சமயமும் சமரச் நோக்கமும்'(1)'அருணகிரிநாதரும்-வில்லிபுத்தூராரும்' (2)'வல்லிபாரதமும்-வடசொல்லாட்சியும்' (3) என்ற பகுதிகள் நுட்பங்கள் செறிந்து படிப்போர்க்குத் தமிழ்ச் சுவையை ஊட்டுகின்றன. வில்லிபுத்தூரர் வைணவர்களிற் கொடிய வைணவர் என்று பலரும் கொண்டுள்ள பொது எண்ணம் தவறென்பது மேலே சொன்ன சமயப் பகுதி நன்கு விளக்குகின்றது. வில்லியர் பாரதத்திலே ஆசிரியர் நன்கு பயின்று அதனுட்படு பொருள்களைத் திறம்பட எடுத்துத் தமது சரிதப் பகுதிகளுக்கு ஆதாரமாகக் கொண்டமை பெரிதும் பாராட்டத்தக்க மாண்பாம். இதுவே உண்மைச் சரிதம் காணும் இயலுமாம். இந்நூலைத் தமிழுலகம் இனிது ஏற்று ஆதரிப்பதாக. இந்நூல் தமிழ் மாணவர்களுக்குப் பாடப்புத்தகமாக அமைக்கப்பெறின் பெரும்பயன் தரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கோவை<br>
ஸ்ரீ சேக்கிழார் நிலயம்<br>
17-7-1933

C. K. SUBRAMANAM.

# பொருளடக்கம்.


விஷயம் பக்கம்.

முகவுரை.

1. தோற்றுவாய் ... ... 1—2

2. ஊரும்-நாடும் .... .... 2—4

3. பெயரும்-காரணமும் ... ... 4—5

4. தந்தைபெயரும்-தண்டமிழ் கற்றதும் .... 5—7

5. சமயமும்-சமரஸ நோக்கமும் ... 8—12

6. கவியரசுத்தன்மையும்-புவியரசர் போற்றலும் 12—14

7. தேசயாத்திரையும்-செந்தமிழ் சீர்பெறச் செய்ததும் .... ... 14—17

8. அனந்தரது தோல்வியும்-அவரது சாதுர்யமொழியும் .... ... 17—20

9. அருணகிரிநாதரும்-வில்லிபுத்தூரரும் ... 20—28

10. கோங்கர்கோனும்-தமிழ்வளர்ப்பும் .... 28—35

11. வில்லிபுத்தூரர் சனியூர்வருகையும்-பாரதம் பாட வேண்டுகையும். .... 36—39

12. பாரதமும் அதுபற்றி வளங்கும் கதைகளும் 39—44

13. பாரதத் தமிழ்மொழி பெயர்ப்பும்
அதன் உயர்வும் ... ... 44—46

14. வில்லிபுத்தூராரும்-அவரதுநன்றியறிதலும் .... 46—50

15. பாரதமும்-அதன் சொற்பொருளும் ... 50—54

16. பெருங்காப்பியமும்-அதன் முறையும் .... 54—58

17, வில்லிபாரதமும்-அதன் முதல்நூல்களும்... 58—65

18. பாரதமும்-அதன் பாராட்டுதலும் .... 65—66

19. பாரதப்பாடல்களின் தொகையும்-
பருவங்கள் பத்தும் ... ... 66—70

20. பாரதமும்-அதுபுகட்டும் நீதிகளும் .... 70—71

21. வில்லியாரும்-அவர் இயற்றிய நூல்களும் .... 71—72

22. பாரதகாலமும்-ஆராய்ச்சியும் .... .... 72—78

23. வில்லியார்காலமும்-நிர்ணயமும் ... 78—85

24. வில்லிபாரதமும்—வடசொல்லாட்சியும் .... 85—97

25. இறுவாய் .... ...

பாரதம் பாடிய

# ஸ்ரீ வில்லிபுத்தூரார் சரிதம்.

## காப்பு வெண்பா.

*வேதம் வகுத்த வியாசமா பாரதநூல்*
*நாதஞ் சிறக்க நறுந்தமிழின்—ஓதியசீர்*
*வில்லிபுத்தூ ரார்சரிதம் விள்ளுதற்குச் செங்கமல*
*வல்லியுறு மால்கழலை வாழ்த்து.*

## தோற்றுவாய்.

ஆன்ற கல்வியும், சான்ற வொழுக்கமும் நிரம்பித் திருந்திய நடையும், செவ்விய நோக்கமும் தழுவித் தெய்வ சிந்தையும், அமுதமொழியும் அடைவே கொண்டு, அகிலத்தோர் போற்றப் புகழ் சிறந்து விளங்கிய புலவர் பெருமக்கள் வாழ் நாட்சரிதம், மாணவர்கட்கு ஒழுக்கஞ் சிறந்து உயர்வதற்கு உத்தம சாதனமாமென்பது அறிஞர் துணிபு.

கருவிலேயே கல்வியழகு பெறுதவர்கள் கவிபாடும் திறமையுடையாரல்லர். கமனசக்தி யுள்ளவர்க ளிடத்தில் கவிகள் தாமே சுரந்து பெருகும். தெய்வகவிக்கு நா உணர்வும், ஓவிய வல்லானுக்குக் கை உணர்வும் இயற்கையாய் அமைந்த இனிய செயலாம்.

இவ்வரிய செயலை எளிதாகப் பெற்ற புலவர் பெருமக்களுள், நமது பாவலர்பெருந்தகை வில்லிபுத்தூராரும் ஒருவராவர். இவரது சுவை ஞானமும், சுதந்தர கற்பனு சக்தியும் விற்பன விளைவும் அற்புதமானவை. வித்தகம் நிரம்பிய இவரது கவித்துவம் தன்னாற்றலே ஆற்றலாக விளங்கும் சிறப்புடையது. இத்தகைய கவிவல்லாரது கவினுறு சரிதம் இதுகாறும் விரிந்தவகையில் ஆராய்ச்சி முறையில் நல்லமைப்பில் வெளிவரவேயில்லை. இப்புதிய வழிவகையில் புலவர் வாலாறு வெளிவர வேண்டுமென்று வெகுநாள் முயன்றும் முற்றுப் பெருது இப்பொழுது முற்றுப் பெறுவித்த மூவா முதல்வரின் பொன்னர் திருவடியைப் போற்றி வணங்குகின்றேம்.

இனி வில்லிபுத்தூரார் வரலாறு வருமாறு :—

## ஊரும்—நாடும்.

சீர் சான்ற செந்தமிழிலும், தேவபாஷையெனும் வடமொழியிலும், தனிப் பெரும்புலமை சிறந்த ஸ்ரீ வில்லிபுத்தூராரது பிறப்பகம், "திருவருட்டுறை" என்னும் சிவாலயம் சிறந்து திகழ்வதும், "தேன்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையும் அத்தா." "வெண்ணெய் நல்லூரில் அற்புதப்பழ ஆவணங்காட்டி அடியனுமென்னை யாளது கொண்டு நற்பதத்தை நல்கிய நாதா" என்ற ஸ்ரீ சுந்தர மூர்த்திகளது திருத் தேவாரப்பண்களைக் கொண்டதும்; நடு நாட்டுத் திருத்தலங்களில் ஓர் எண்ணை யுடையதுமான திருவெண்ணெய் நல்லூரையும்; அட்டவீர தலத்துள்ளொன்றும், மெய்ப் பொருளுயனருடைய ஜனனதலமும், அறையணி நல்லூரை யடுத்த பெண்ணையாற்றின் தென்கரையில் விளங்குவதுமாகிய திருக்கோவலூரையும்; நினைக்க முத்தியளிக்கும் நிர்மலப்பதி

யாகிய திருவண்ணுமலையையும் தன்னுட் கொண்டதும், "வெண்ணெய் உருகுமுன் பெண்ணை பெருகும்" என்ற அதிசய நதிப் பெருக்குடையதும், செந்தமிழ் மூதாட்டி அவ்வையார் அரும் பாடலை யுவந்து தண்ணீரொழித்து நெய்யும் பாலும் தலைப்பெய்து பெருகிய பெண்ணையாற்றங் கரையுடையதும், நீண்ட நகத்தினையுடைய வெள்ளிய கொக்கின் மூக்குப் போன்ற ஆழ்ந்த நீரின் முளைத்துள்ள ஆம்பற் பூவையுடைய தண்ணிய துறையை அடுத்ததுமான * சனியூராம். இச் சீரூர், பண்டைக் காலத்தில் "மகதநாடு" எனவும் "சேதிநாடு" எனவும், "திருமுனைப்பாடி நாடு" எனவும் பெயர் விளங்கித் தற்காலம் "நடுநாடு" என்ற பெயரில் வழங்கப்படுவதும், நீர் நலத்தால் நிலவளஞ் சிறந்து, அதனுல் நெற்கதிரோங்கி நிதிப்பெருக்குற்று மற்றும் நாடென்பதற்கிருக்க வேண்டிய நலன்களெல்லாம் நன்கமைந்து,

"பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற் கிவ்வைந்து"

என்ற பெருமைக் குரியதுமான திருநாட்டின் ஓர் பகுதியாக விளங்கியது. இச் சனியூரும், நடு நாடும் செய்த தவப்பயனுக நமது பாவலர் தோன்றினர். இவ்வூரில் வில்லிபுத்தூரார் தோன்றினுர் என்பதற்குப் பாரதப்பாயிரத்துள், "பிறந்துய்ய" என்ற முதலடியுடைய செய்யுளில், "நிறைந்த புகழ்ச் சனி நகர்வாழ் வில்லிபுத்தூரனை நோக்கி" எனவும், "தாரகாயண

* சனியூர். இது தற்காலம் கொங்கு நாட்டு எல்லைக்குள் அடங்கிய கோயமுத்தூர் பக்கத்தில் இருப்பதாகச் சிலர் கூறுகின்றனர். அதுதவறு. சனியூர் நடுநாட்டின் கண்ணதேயாம். ஆயின், இப்பொழுது அப்பெயர் மறைந்து வேறு பெயர் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

வண்டலை தண்டலைச் சனியூர்" எனவும் வரும் பாடல்களின் அடிகள் போதிய சான்றாம்.

## பெயரும்—காரணமும்.

புலவரது இயற்பெயர் "வில்லிபுத்தூரர்". இப்பெயரை இவரது பெற்றோர்கள், வைணவ மெய்யடியார் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரும், "ஸ்ரீ பட்டர்பிரான்" "ஸ்ரீவிஷ்ணு சித்தர்" என்ற சிறப்புப் பெயர்களையும், "பெரியாழ்வார்" என்ற இயற் பெயரையுமுடைய பெரியாரிடத்துவைத்த பேரன்பினால், அவர்க்குக் காரணச் சிறப்புப் பெயராகவுடைய வில்லிபுத்தூரார் என்னும் பெயரைத் தமது தவமகனுக்குப் பெயரிடுவதென்று பெரிதும் விரும்பி, அதன்படியே நன்னாளொன்றில் தமது பிள்ளைக்கு "வில்லிபுத்தூரார்" என்ற பெரியார் பெயரையே பெயராகயிட்டு வழங்கினர். வேறு சிலர் கருதுவதுபோல், புலவரது பெற்றோர் பலநாள் வைணவத் திருத்தலமாகிய வில்லிபுத்தூர் சென்று, திருமாலிடத்துப் பக்தி செலுத்தியதனாலோ; அல்லது தமது சுற்றத்தாருடன் அப்பதியில் அமர்ந்திருந்ததனாலோ, ஆழ்வார் அருட்பிரசாதத்தால் தமக்குப் பிள்ளைப்பேறு வாய்த்ததனாலோ வில்லிபுத்தூரார் என்ற பெயரைத் தமது பிள்ளைக்கு இட்டிருப்பினும் இருக்கலாம்.

நமது நாட்டுமக்கள், அவ்வத்தலக் கடவுளின் பெயர்களைத் தமது புதல்வர்களுக்கு இட்டு வழங்கிவருவது தொன்று தொட்டவழக்கம். நாகூரன், சென்னிமலையான், செங்கோடன், அருணகிரியான், பழனியப்பன் என வழங்கும் பெயர்கள் உதாரணங்களாம்.

நமது பாவலர் வளர்ந்து பெருகிக் கல்வியில் ஒப்பாரும் மிக்காருமின்றி ஓங்கு புகழ்பெற்ற பின்னரேயே "வில்லி புத்தூராழ்வார்," "கவிதா சார்வபௌமன்" என்ற காரணச் சிறப்புப் பெயர்கள் இவரை மருவி வழங்குவதற்காயின. "ஆழ்வார்" என்னும் பெயர் தமிழ் வேதம் பாடியவர்களுக் கன்றிப் பிற்காலத்தில் ஏனையோர்க்கும் இட்டு வழங்குவது உபசார வழக்கு. இது ஆழ்வார் ஐயங்கார், ஆழ்வார் செட்டியார், ஆழ்வார் நாயுடு என்பவற்றால் அறியப்படும். "கோமின்துழாய் முடியாதியஞ் சோதி குணங்களே" என்கிற படி செங்கண்மால் குணக்கடலிலே அழுந்தி நெஞ்சுருகிக் கரைந்து தம்மை மறந்து தியான கோசரமாகிய அவ்வெம் பெருமானது வடிவத்திலே ஈடு படுவர் என்பதே ஆழ்வார் என்னும் பதத்தின் பொருள். கவிதா சார்வபௌமன் என் பதற்குக் கவிபாடுவதில் முதன்மை பெற்று விளங்கியதால் வந்த பெயராம். "புலவர் கோமான்" எனினும் பொருந்தும். இது வடமொழித் தொடர்மொழியின் தமிழ்மொழி பெயர்ப் பாக வந்த தமிழ்த்தொடர் மொழி.

## தந்தைபெயரும்-தண்டமிழ் கற்றதும்.

வில்லிபுத்தூரார், திருத்துழாய் மாலை அணியும் திருநெடு மாலை நியமந்தவறாது வழிபட்டுவந்த "வீரராகவன்" என் னும் பெயரிய அந்தணருக்கு அவரும், அவர்குலமுஞ் செய்த தவப்பயனாகத் தோன்றிய உத்தமப் புதல்வராவர். இவர் கருவிலே திருவாய்ந்து கலைமகளார் கருணைவாய்க்கப் பெற்ற புண்ணிய சீலர் என்பது நன்கு அறியப்படுகிறது. "இளமையிற் கல்வி சிலையிலெழுத்து" "ஆரியமோத அறிவுண் டாமே" என்பவற்றைத் தமது அநுபவத்தால் அறிந்துணர்ந்த

தந்தை "வீராகவன்" தமது புதல்வர் ஐந்து வயது அடைந்தவுடனே அவரை ஒரு நல்லாசிரியரிடம் கொண்டு விடுத்து முறையாய்க் கல்வி போதிக்கும்படி ஏற்பாடு செய்தனர். வில்லிபுத்தூரர் ஆசிரியர் ஆணைக்கடங்கி, வழிபாடு தண்டாமல் அவர் மனமுவப்ப நடந்து, ஏவியவழி நின்று, கற்பிப்பதைக் கவனமாய்க் கேட்டுச் சித்திரத்துத் தீட்டிய ஓவியம்போல் அசைவற்றிருந்து செவியைக் கல்வியாகிய நீரைப் பருகும் வாயாகவும், மனதைக் கொள்ளும் இடமாகிய வயிறாகவும் கொண்டு, ஆசானிடத்துப் பலமுறை கேட்ட நூற்பொருள்களை விடாது நெஞ்சகத்து நிறுத்தி இனிமை மிகுந்த அருந் தமிழைக் கற்க வேண்டிய விதிப்படி சந்தேக விபரீதமறக் காதலுடன் கற்றுப் பூரணப் புலமை பெற்றுப் புலவரேறு எனப் புகழ்ந்தோதுமாறு மேம்பட விளங்கினர்.

வில்லியார் விளங்கு தமிழில் மிகுதியான பேரறிவும், பெரும்புலமையும் பெற்றிருந்ததுபோலவே, சம்ஸ்கிருத பாஷையில் மொழியறிவும், மூதுணர்வும் முதன்மையாகக் கொண்டிருந்தார். இவ்வுண்மை நமது புலவர் வடமொழி வியாச பாரதத்தைத் தமிழ்ப் பாஷையில் இனிமையும் திறமையும் பெற மொழிபெயர்த்து முதனூல் என யாவரும் புகழ்ந்து பாராட்டும்படி பாடியதனால் நன்கறியப்படும். பாவலர் தமது இளமைக் காலத்தில் தாம் ஓதுவதற்கு எடுத்துக்கொண்ட நூல்களுள் முக்கியமானவை சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, மணிமேகலை, முதலிய பஞ்ச காவியங்களும்; தொல்காப்பியம், யாப்பருங்கலம் முதலிய இலக்கண நூல்களும்; சங்கமருவிய செந்தமிழ் இலக்கியங்களும்; சைவத்திருமுறைகள்; நாலாயிரப்பிரபந்தங்கள்;

திருவாய்மொழி முதலிய வைணவநூல்களும் அவற்றின் உரைகளும்; சைவசித்தாந்த சாத்திரங்களும்; திருக்குறள், நாலடியார் முதலிய நீதி நூல்களும், கம்பராமாயணமும் பிறவுமாம். இந் நூல்களின் சொற்களும், பொருள்களும், கருத்துக்களும், பின்னர் இவர் பாடிய பாரத காவியத்தில் ஆங்காங்கு மிளிர்வதைக் காணலாம். இவ்வரும் பெரும் நூல்களை நமது பாவலர் பெருந்தகை மெய் வருந்திக் கற்றதனாலேயே இவர் பாரத காவியத்தை ஓதியுணர்ந்த தமிழ் வல்லார்கள், திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணி, கவியரசாகிய கம்பர் பாடிய இராமாயணம், கச்சியப்ப சிவாசாரியார் இசைத்த கந்தபுராணம் ஆகிய இவைகளைத் தவிர்த்தால் செம்பாகம், சொல்லணி, பொருளணி, அலங்காரம், உவமை, கற்பனை முதலியவைகளில் பாரத காவியத்திற்கு மேலான நூல் காண்பதரிது என வியந்து பாராட்டிக் கூறியிருக்கின்றனர். அன்றியும், வில்லிபுத்தூரரது அரும் பெரும் புலமையின் திறம் பெருந்தன்மையை விதம்பெற அவரது சமகாலத்து அருகிருந்துணர்ந்த "வரந்தருவார்" என்ற புலவர், தாம் பாடிய பாரதப் பாயிரச் செய்யுட்களில் பரக்க விளக்கியிருக்கின்றனர் அவை:-

"முன்ன ரெண்ணிய முத்தமிழ்ப் பாவல ரெவரும்
பின்னர் வந்தொரு வடிவுகொண்டன ரெனப் பிறந்தோன்"

"ஐந்து பாவுடை நால்வகைக் கவிக்கதி பதியாய்
வந்து வட்டமா மணியினன் மணிமுடி புனைந்து
பைந் துழாய்முடிப் பரமனைப் பலகவித் துறையுஞ்
சிந்தை யான்மொழிந் தன்பர்தந் திருவுளம் பெற்றோன்"

என்பனவாம்.

## சமயமும்—சமரஸ நோக்கமும்

வீறுபுலமையுடைய வித்தகச் செல்வர் வில்லிபுத்தூரார் சாதியில் செந்தண்மை பூண்ட அந்தணர். சமயா சாரத்தில் வைணவர். வைணவ மதத்திற்குரிய தெய்வமாகிய செங்கண் மாலின் செம்பொற் கழலிணைகளில் தினையளவும் அன்பு மறவாத சிந்தையுடையவர். இவ்வுண்மை இவர்பாடிய பாரத காவியத்தின் ஒவ்வொரு சருக்கத்தின் தொடக்கத்திலும், காப்புச் செய்யுள்களின் முதலிலும், திருமாலுக்குச் சிந்தையுருக வணக்கமும், வாழ்த்தும் கூறியிருப்பதனால் தெளிவுறும். மற்றும், நூற்போக்கில் பலவிடங்களிலும் விண்டுவுக்கே கடவுட்டன்மை தோன்றப் பாடுதலாலும் இவர் வைணவரே யெனக் கொள்ளக்கிடக்கின்றது. வில்லியார் வைணவர் என்பதற்கும் திருமாலையே சிந்தையுவக்கத் துதித்து வணங்கும் செய்கையுடையாரென்பதற்கும் இவர் பாடிய பாரத காவியத்தின் பல விடங்களிலும் பரந்த சான்றுகள் விரிந்து கிடக்கின்றன. அவற்றுள் சில அடியில் வருமாறு:—

"பைந்து ழாய்முடிப் பரமனைப் பலகவித் துறையுஞ்
சிந்தை யான்மொழிந் தன்பர்தந் திருவுளம் பெற்றோன்"
பாயிரம்.

"எங்கண் மாதவன்" ஆதிபருவத் தொடக்கம்.

" சென்றெடுத் திறுத்து நின்ற செங்கண்மா லெங்கள் கோவே'
களப்பலியூட்டு சருக்கம்.

யாவரும் யாவுமாகி யிறைஞ்சுவா ரிறைஞ்சப் பற்ப
றேவரும் மாகி நின்ற செங்கண்மா லெங்கள் கோவே"
முதற்போர்ச்சருக்கம்.

"கண்ணனல்லாற் றெய்வமில்லை"

"மற்றுமோர் தெய்வ முண்டே மதியிலா மானுடங்காள்"

"கற்றின மேய்த்த வெந்தை கழலிணை பணிமினீரே"

"படர்ந்த கானகந்திரிந்து மீண்டன்புடன் பணிந்த பஞ்சவர்க்காகக்
கடந்த ஞானியர் கடவுளர் காண்கலாக் கழலிணை சிவப்பேறத்
தொடர்ந்த நான்மறை பின்செலப் பன்னகத் துவசன்மா நகர்த்தூது
நடந்த நாயகன் கருமுகில் வண்ணமென் னயனம் விட்டகலாதே"

படையெழச்சிச்சருக்கம்.

இங்ஙனம் திருமாலிடத்துப் பேரன்புகொண்டு அவர் தம் பொன்னார் திருவடி வணங்கும் பெற்றியாரெனினும், சைவ சமயத்திலும், அச்சமயத்தின் தலைவராகிய சிவ பெருமானிடத்தும், அவரது மெய்யடியாரிடத்தும் பக்தி வணக்கம் குன்றாது உள நெகிழ்ந்துருகி உறை குழறிப்பாடிய துதி கவிகள் மிகுதியானவை யென்றே கூறலாம். அக்கவிகளில் புலவரது சமநோக்கமே யன்றித் தெய்வ பேதமும் மதவேறுபாடாதிய மாற்சர்யமும் தோன்றாதிருப்பது கவனித்தற் குரியது. இவற்றால் இவர் சிவனிடத்துப் பகைமை பாராட்டுகிற வீர வைணர் அல்ல என்பது தெளிவாகிறது.

புலவர் பாடிய சிவ சம்பந்தத்துதி கவிகள் கீழ்வருமாறு:-

"மான்புரிந்த திருக்கரத்து மதியிருந்த நதிவேணி மங்கைபாகன்"

"பையராவணி மணிப் பவள மேனியாய்
செய்யவாய் மாரகதச் செல்விபாகனே"

பையரவினுடி புருகூதனிவர் சூழ்தரப் பச்சைமயில் பாதியுடனே
துய்யவிடைமீதொரு செழுஞ்சுடரொழுந்தது தொழுந்தகைய
தாகுமனவோ'

"ஓரேனந்தனைத்தேட வொளித்தருளு மிருபாதத் தொருவனந்தப்
போரேனந்தனைத் தேடிக் கணங்களுடன் புறப்பட்டான்"

"வெள்ளிக் குன்றுடைப் புனிதன்" எனச் சிவபிரானையும்,

"ஏடாக மாமேரு வெற்பாக வங்கூரெழுத்தாணி தன்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ"

"முருகார் மலர்த்தாம முடியோனை யடியார் முயற்சித்திறந்
திருகாமல் விளைவிக்கு மதயானை வதனச் செழுங்குன்றினை"

என்று யானைமுகப் பிள்ளையாரையும்,

"ஐயானன னியல் வாணனை யடிமைக்கொள மெய்யே
பொய்யாவண மெழுதும்பதி................."

எனச் சமய குரவராகிய சுந்தரமூர்த்திகளையும்,

"இளவண்டமிழ் எழுதேடு முன்னெதிரேறிய துறை சூழ்"

என ஞான சம்பந்தப் பெருந்தகையையும்,

குழைந்த அன்பில் நெஞ்சுருகி நாவாரப் பாராட்டிப் பாடியிருக்கின்றனர்.

இங்ஙனம் புலவர் இரு கடவுளர்களையும், அவர்தம் மெய்யடியார்களையும், அன்பின் மிகுதியால் மனமுருகத் துதித்திருப்பதை ஊன்றி நோக்கினால், ஒன்றில் உயர்வும், மற்றொன்றில் தாழ்வும் கொள்ளாத உத்தம நோக்கமுடைய உயர்ந்தோர்களில் உயர்ந்தோராயிருந்தனரென்பது உறுதிப்படுகின்றது.

இவ்வாறு ஆசிரியர், பாரத காவியத்துள் தெய்வ பேதக் கொள்கையை நீக்கிக் கடவுள் ஒன்றே என்பதைப் பசுமரத் தாணிபோல் மனதில் பதியும் வண்ணம் விவரித்திருக்கின்றனர். இவ்வுண்மை பாரதக்கதையை ஊன்றி ஆராய்கின்ற

வர்கட்கு விளங்காமலிராது. எனினும் பாரத காவ்யத்தைப் பக்திசிரத்தையுடன் படிப்பவர்களுள் பெரும்பாலோர் தெய்வ பேதத்தைக் கற்பித்துத் தெய்வநிந்தை செய்வோராயிருப்பது மிகவும் வருந்தத் தக்க செயலென்பதை அறிவுடையார் எவருமே கருதாதிரார்.

சித்திக்கோர் வித்தாக விளங்கிய நமது செந்தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் நிரம்பிய கீர்த்தியுடன் திகழ்ந்த மதங்கள் சைவம், வைணவம் என்பனவாம். இவ்விரு சமயங்களும் பாரத காவியத்தை வேற்றுமை தினையளவுமின்றிச் சிறப்பித்துக் கொண்டாடி வந்தன; வருகின்றன. ஆனால், பாரதம் வைணவ நூலேயாகும். ஆகவே வைணவர்கள் பாரதக்கதையை நுண்ணறிவு கொண்டு நுனித்தறிந்தவர்களாகவேயிருத்தல் கூடுமென்பது நமது நம்பிக்கை. எனினும், தெய்வம் ஒன்றே, சிவன், விண்டு என்றிருவேறு தெய்வங்களில்லை. வழக்கத்தின் பொருட்டு இருவராக நூல்களில் கூறப்பட்டுள்ள அரியும், அரனும் தம்முள் பேதமில்லாதவரே என்னும் மெய்ம்மையை அவர்கள் உணர்ந்தார்களென்றோ! உணர்ந்தவாறு ஒழுகுகின்றனரென்றோ! சிவநிந்தனை செய்யாதிருக்கின்றனரென்றோ! நாம் கூறத்துணிகின்றோமில்லை. வைணவாபிமானிகள் மிகப்பலர் அவ்வாறு இருத்தற்குக் காரணம் இவ்வுண்மையை உணராமல் இருத்தலே யாமொன்றும், அல்லது விஷயத்தை அறிந்திருந்தும் அதன்படி நடக்க மனம் கொள்ளாதிருத்தல் தானென்றும் கூறுவதைத் தவிர நாம் சொல்வது யாதுளது? அல்லாமல் போக மூர்த்தியாகிய விஷ்ணுவும் யோகநாதனாகிய சிவனும் ஒன்றே யென்றும், பேதர் என்பதற்குப் பிரபல சுருதிகளில் சிறிதும் ஆதாரமில்லை யென்றும், அங்ஙனம்

நிந்திப்போர் தம்மை அறியாமலே தாம் வணங்கும் தெய்வத்தையே பழிப்பவராவர் என்றும், "ஒன்றேன்றிரு தெய்வம் உண்டேன்றிரு" என்றருளிய பட்டினத்தடிகளின் திருவாக்கைத் தம்மனத்துள் பதித்துத் தமது காவியத்துள் ஆங்காங்கு ஈசுவரன் ஒருவனே பல்வேறு பெயர்களைக் கொண்டிருக்கின்றான்; அவன் ஒரு நாமம், ஒருருவம் ஒன்றுமில்லான்; குறியிலான், குணமிலான், ஊரிலான், பேரிலான், முன்னிலான், பின்னிலான்; போக்குவரவில்லான் உலகம் (ஆன்றோர்) அவனை ஆயிரம் பெயரிட்டழைக்கும்; பலவுருவங்களாகப் பாவிக்கும்; யார் எப்பெயரால் அழைப்பினும், எவ்வடிவாகப் பாவிக்கினும் எல்லாம் அவனையே சென்றடையும்; பல்வேறு தேயங்களில் பல்வேறு மலைகளில் தோன்றினும், நதிகளனைத்தும் கடலையே சாரும் என்ற உண்மைகளை நமக்குக் காதலாமலகம்போற் காட்டியிருக்கின்றனர்.

இதுகாறுங் கூறியவாற்றால் இவர், "அானதிகம் உலகளந்த அரி அதிகம்" என்றுரைக்கும் திருக்கூட்டத்துட் சேராது, சமயப்பித்தும் தெய்வப்பகைமையும் கொள்ளாது சமரச வழியொழுகும் செந்நெறியின் பெரியாரென்பது ஒருவாறு தெளிவாம்.

## கவியரசுத் தன்மையும்—புவியரசர் போற்றலும்.

கணக்காயர் கருணைமிக்கூர்ந்து கல்வியை விளக்க முறை போதித்ததனாலும், அவர் மனமுவந்து 'நீ பிற்காலத்தில் பேரறிவு படைத்துப் பெரும்புலவனாய்ப் பீடுபெறப் பிறங்கிப் புகழ்சிறந்து வாழ்வாயாக' என்று வாயார வாழ்த்தியதனாலும், வில்லிபுத்தூராரும் சோர்வின்றிக் கருமமே கண்ணாய்ப்

பெரிதும் முயன்று கருத்தொன்றிக் காதலுடன் கற்றதனுலும் கல்வியில் தமக்கொப்பாரும் மிக்காருமின்றி யாவரும் பரவும் மேவருஞ் சிறப்புடன் புகழ்பெருகத் திகழ்ந்தனராவர். இவர் இங்ஙனம் தண்டமிழில் தலை சிறந்து கல்விக்கோர் வைப்பு நிதியாகவும், சந்தக் கவிகளை அந்தமொடு விந்தையுடன் விரைந்த கதியில் பாடுவதில் வீறுடையாராகவும் விளங்கியதனுல் கற்ருரும், கல்லாதாரும் ஒருங்கே வில்லிபுத்தூரரை "கல்விக்கடல்" என்றும், "கலாமேகம்" என்றும், "விற்பன விளைவு" என்றும், "விதரணைச் சமர்த்தர்" என்றும், வியந்துரைத்ததோடு, கவிப்பகுப் பைந்திலும், நால்வகைக் கவிகளிலும், கற்பனை பொலிய, விற்பத்தி விளங்க, பொற்புறு கருத்துக்கள் பூரித்துத் தோன்ற, அற்புதப் பொருள்கள் அழகமைந்தோங்க, இனிய கவிதைகளை எளிதில் பாடுவதில் இணையற்ருரென்றும்; வடமொழி தென்மொழி என்னும் இருவகை மொழிகளின் நிலைகண்டுணர்ந்த பெரியாரென்றும்; பல் காப்பியக் கடலையுழக்கிச் சங்க நூல்களில் ஊறித் தொல் காப்பிய எப்பமிடும் ஏற்றமுடையாரென்றும், பற்பலவாறு பாராட்டிப் புகழ்ந்தோதுவாராயினர். இவற்ருல் இவரது மெய்ப்புகழ் தமிழ் நாடெங்கணும் விரைந்து பரவி யாவருக்கும் அதிசயத்தையும், இன்பத்தையும் உண்டாக்கின. அக்காலத்தில் அருந்தமிழுணர்ந்து பெருங்கவிப் புலவர்களாய்ப் புகழ்பெற விளங்கிய புலவர் பெருமக்களை, அவர்கள் தகுதியறிந்து ஆதரிக்கும், அரசர்களும், வள்ளல்களும், பிரபுக்களும், அறவே மறைந்திருப்பினும், சிற்சில சிற்றரசர்களும், தமிழருமையுணர்ந்த செல்வர்களும், கொடைக் குணம் வாய்ந்தவர்களும் ஆங்காங்கு விளங்கியிருந்தனர். அவர்களுள் சிலரேனும் இவரது அருமை பெருமைகளை யுணர்ந்து இவரை

ஆதரித்திருக்கலாம். அது இப்பொழுது தெளிவிலதெனினும் உள்ளவாறே தண்டமிழ் வல்ல இவரின் தகுதி கண்டு அதற் கேற்ப மதித்து உபசரித்து வரிசைபல வழங்கியவன், புலவர் சமகாலத்தில் சனியூரில் தோன்றி "வக்கைபாகையில்" "ஆட்கொண்டான்" "கொங்கர்கோன்" என்ற பெயருடன் சாமந்த அரசர்களில் பெயர் சிறந்தும், கீர்த்திபெருகவும் விளங்கியவன் வரபதியே ஆவன் என்பதற்கு ஐயமின்று. இதற்குப் பாரத காவியத்தில் பலமான ஆதாரங்கள் இருக்கின்றன. இவற்றை "வில்லிபுத்தூரரும்—அவரது நன்றியறிதலும்" என்றதலைப்பில் விளக்கம்பெற விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டு கண்டுகொள்க. இங்ஙனம் வரபதிஆட் கொண்டானல் வில்லிபுத்தூரர் வரிசை பல பெற்றதனுல், யாவரும் ஒரு முகமாய் இவரை வித்துவ சிரேஷ்டர் என்றும், தமிழ்ப் புலவர் வரிசையில் முதலில் வைத்தெண்ணக் கூடிய பெருமைமிக்கார் என்றும் புகழ்ந்து கொண்டாடினர். இவ்வுண்மை பாரதத்தின் சிறப்புப்பாயிரத்தில்:—

"ஊராராமுடி மண்மிசை யுயர் புகழ் நிறுத்தித்
தீரகாகளம் பெறுதலின் யாரினுஞ் சிறந்தோன்" (17)

"எங்குமிவனிசை பரப்பி வருநாளில்" (18)

என்ற செய்யுளடிகளால் இனிதுணரப்படும்.

## தேசயாத்திரையும்—செந்தமிழைச் சீர்பெறச் செய்ததும்.

இங்ஙனம் வித்துவ சிரேஷ்டராகிய வில்லிபுத்தூரர் விருது வரிசையிலும், புகழிலும், பெருமையிலும் தலை சிறந்து விளங்கியபோது செந்தமிழ் நாட்டில் தெய்வத் தமிழ் மடந்தை

தனது பொலிவிழந்து செல்வ நலங்குன்றி, செவ்விய மணத்தையும் இழந்து வளர்நிலை தவிர்ந்து தளர்நிலையில் தாடுமாற்ற முற்றிருப்பதை நன்கறிந்தனர். அந்தோ ! தன்னிகரில்லாத் தனிப்பெருஞ் சிறப்பும், உவமையற்ற தெய்வமணமும், ஒப்பற்ற புகழும் ஒருங்கே பெற்ற இளந்தமிழரசி இவ்வாறு கனங்குறைந்து கவனிப்பாரின்மைக்குக் காரணம் யாதாயிருக்கலாமெனச் சிந்தித்தனர். இவர் சிந்தையில் தெளிவான செய்தி—'அக்காலத்தில் அருந்தமிழ்ச் சுவையை அறியவும், அதன் அருமை பெருமைகளை ஆராய்ந்துணரவும் போதிய நுண்ணறிவுடைய புலவர்கள் இல்லாதிருந்ததும், பேருக்குப் புலவர்களாயிருந்த பெரும்பாலார் ஆசிரியரையடுத்து முறையாகவும், சந்தேக விபரீதமறவும் கல்வியைக் கற்காமலும்; மேற்போக்காகச் சமயத்திற்கும் தேவைக்கும் அவசியத்திற்கும்வேண்டுவதான இலக்கணத்தில் சிலசூத்திரங்களையும் இலக்கியத்தில் சிலவற்றையும், யாப்பில் சிறு பகுதிகளையுங் கற்று நெட்டுருச் செய்து கொண்டும், புராணக்கதைகளையும் காவியப் பகுதிகளையும் படித்தும், கோவை, உலா, அந்தாதி, மடல், தூது, காதல் முதலியவற்றை மேற் போக்காக நுனிப்புல் மேய்வதைப்போல் அங்கும் இங்குமாகச் சிலவற்றை அவதானம் பண்ணிக் கொண்டும் தான்தோன்றிகளாய்த் தாம் பண்டிதர், மகாபண்டிதர், வித்துவான், கவிக்குஞ்சரம், கவிராஜன், கவிராஜகண்டீரவம், வரகவி, பாலபாரதி, சகலகலாவல்லவன் என்பது முதலிய பட்டப் பெயர்களை எவரும் விரும்பிக் கொடுக்காமல் தாமே தம் சொந்தத்தில் வைத்துக்கொண்டு திரிந்தார்கள் என்பதுமேயாம்' அந்தோ! இப்பேதையர்கள் செய்கை, தங்கள் ஜீவனார்த்தத்திற்கு ஒருவகை யார்க்கமெனினும், அது தமிழின்

வளர்ச்சிக்கும் அதன் உயர்ந்த தன்மைக்கும், தமிழ்கற்ருர் பெயருக்கும் பெருங்கேடாய்; புகழிற்கும், பெருமைக்கும் தடைகல்லாய்; தமிழரசி தலைநாணி மனம் வருந்தக் கூடிய ஏதுவாயுமிருப்பதற்குப் பெரிதும் வருந்தினர். தமிழில் தனிப்பெரும் புலமைவல்லார் பலர் இல்லாமையினாலும், அவர்கள் அருமை பெருமைகளை அறிந்து ஆதரிக்கவல்ல தமிழறி வள்ளல்களும், செல்வர்களும், கொடைமடம் மிக்கார் பலர் மாய்ந்தொழிந்ததனாலு மன்றோ! பாண்டியனதுபாரித்த புகழிலே வளர்ந்து அவன் வளர்த்த தெய்வசங்கப் பலகையில் இனிதிருந்து, ஸ்ரீ ஞான சம்பந்தனூர் பேணிய தண்டமிழ்க்கு இத்தகைய தாழ்நிலை வாய்த்தது; தமிழை நல்லபடி கற்று புலமை யறிவு பெருத போலிப்புலவர்களால் தமிழுக்கு நேர்ந்துள்ள தீமையை நம்போல்வார் நிவர்த்திக்க இப்பொழுதே முந்தாவிடில் மேலும் கேடே சூழும். ஆதலால், இத்துஷ்ட பரம்பரையை அடியோடு தொலைக்க வேண்டுமென்ற எண்ணம் உள்ளத்தைப் பிளக்கவும், தமிழ்மொழி முன்னைப்போல் பெருமை சிறக்கவேண்டுமென்ற பேரவா முந்தவும், நன்கவியும், நற்புலவரும் நாடெங்கும் பரவிப் பெருகவும் "புலவர் வேண்டுவதுலகம்" என்று யாவரும் விரும்பவுமாக வேருெருவர் கற்பியாமல் தாமே சொந்தமாக கொடியதோர் உபாயத்தைக் கைக்கொண்டார். அது 'தமிழ்வழங்கும் நாடெங்கும் யாத்திரை சென்று, போலிப்புலவர்களை வலுவில் வாதுக்கழைத்து, கல்விப்போரில் தோற்பவரின் செவியொன்றைக் கொய்வதென்பதைக் கடைப்பிடியாகக் கொள்வதென்பது.' இங்ஙனம் மனோநிச்சயம் செய்துகொண்டு தென்னாடனைத்தினும் சுற்றித்திரிந்தனர். இத்தகைய இவரது சுற்றுப்பிரயாணத்தில் பெரும்பாகம் வெற்றி வில்லிபுத்தூரார் பங்கா

யிருந்தது. தெய்வத் தமிழுக்குத் தீயர்களால் இழைத்து வந்த தீங்குகள் ஒருவாறு பரிகாரம் பெற்றன. இரவென்னும்மாது, தனது காரிருள் வண்ணத்தைக் கவிந்து உலகத்தை இருண்மயமாக்கித் தன்னாதிக்கத்தைச் செலுத்தி வருவதைக் கண்டாற்றாது கதிரவன் தனது பொன்னிறக் கதிர்களை இப்பூமியெங்கணும் பரப்ப, அதுகண்டஞ்சிய இருட்படலம் இருந்தவிடம் அறியாது மறைந்தோடியதுபோலப் பொய்க் கவிகளும், போலிப் புலவர்களும் வில்லியாரின் வீரப் புலமைக்காற்றாது வாய் சோர்ந்து செயலற்றதோடு,

> காணாமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன்
> கோணாமல் வாய்திறக்கக் கூடாதே—நாணாமல்
> பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தாக்கால்
> கீச்சுக்கீச் சென்னுங் கிளி.

என்ற வெண்பாவின் இலக்கியத்திற்கு இலக்காயினர். அல்லாமல் இவர்கள் யதேச்சாதிகாரங்களும், எண்ணங்களும் இருந்தவிடமறியாது மறைந்தன. மறையவே, நற்கவிகள் ஆங்காங்கே சிறிது சிறிதாகத் தோன்றித் தங்கள் மெய்க் கவிகளை மேன்மைப்படுத்தினர்.

## அனந்தரது தோல்வியும்-அவரது சாதுர்யமொழியும்.

வித்தகம் நிரம்பி விளங்குபுகழ்படைத்த நமது வில்லிபுத்தூரார், செந்தமிழ் நாட்டுத் தமது திருத்தல யாத்திரையில் சோழநாடு, பாண்டியநாடு, கொங்குநாடு முதலியவற்றில் வெற்றி கண்டு, தொண்டைநாட்டின் தொல்பதியும், சான்றோர் நிரம்பியதும், பல்லவ மன்னர்களது தலைநகரமும், அவர் புகழிற்கே ஓரெல்லையுமாக விளங்கும் காஞ்சிமா நகரத்திற்குச் சென்று தங்கினர். அப்பொழுது அவ்வரும்பதியில் அநந்

தமிழ்ப்புலமையில் பெரும் பெயர் சிறந்த "அனந்தபட்டர்" எனப்பெயரிய அந்தணப்புலவர் ஒருவர் விளங்கினர். அக்கவி வல்லாரிடத்துக் கவிப்பகுப் பைந்திலும் கவிமாரிபொழியும் கலாமேகமும், உரைசெய்வதில் ஒப்புயர்வின்மையும், சொற் போர்புரிவதில் மெய்ப்புயர் தன்மையும், மேவி விளங்கும் விறற்புலவர் வில்லியார், வலியச்சென்று கல்விப்போர் தொடுத்தனர். அந்தணப் புலவரும் செந்தமிழ் பாடுவதிலும், திறமையாக மொழிவாதம் புரிவதிலும், சமர்த்தரானதால் வில்லியார் விடுத்த வினாக்களுக்கெல்லாம் விரைந்தே பதி லளித்து வந்தார். அதுகண்ட வில்லியார் வியந்து அனந்தரை வேறொரு வகையால் வெல்ல நினைந்து புதை பொருளும், விளங்காத சொல்லடுக்கும், பாடுவதற்கு மிகவும் கஷ்டமுடையதுமான சந்தநிரைவுடைய நீண்ட குழிப் பொன்று குறித்து அதன்படி பொருளமைதி பொருந்தப் பாடுமாறு புகன்றனர். அனந்தரும் அவ்வாறே பாடினர். ஆயின், வில்லிபுத்தூரர் அப்பாட்டில் பிழையுளதாகக் கூறி அதனை அவர் ஆமென்று ஒப்புமாறு விளக்கிக் காட்டினர். அனந்தபட்டர் தாம் தோல்வி அடைந்தது மெய்தான் என ஒப்புக்கொண்டார். வில்லிபுத்தூரர் ஒப்பந்தப்படி அனந்தரது அருஞ் செவியைக் கொய்யத் தமது "துறடு" என்னும் ஆயுதத்தைத் தூக்கினர். அதுகண்ட அனந்தப்புலவர், ஓர் அருஞ் சூழ்ச்சியை மனதினுள் கற்பித்து அதனைமிகச் சமத் காரமாய், "காதற்றபிராணியாகிய * அனந்தனது காதை அறுக்க முயல்வது வீண்வேலை" என எடுத்து மொழிந்தனர்.

* அனந்தன் என்பது ஆதிசேடனுக்கு ஒரு பெயர். ஆதிசேடன் பாம்பாதலாலும், பாம்புக்குக் காதில்லை யென்பது யாவரும் அறிந்தது. கண்ணே செவியாக உபயோகப்படுவதால் பாம் புக்கு, "கட்செவி" என்று பெயர்.

அனந்தர் சூழ்ச்சிமொழியாவது—"பாம்பென்னும் பொருள் தரும் அனந்தனுக்குக் காதில்லை; காதில்லாததன் காதைக் கொய்ய முற்படுவது சிரிப்புக்கு இடம்" என்பது. அனந்தரது மொழிவிளையாட்டயர்வை வில்லிபுத்தூரார் கேட்டு அகமிக மகிழ்ந்து, அவரை நோக்கி "அருந்தமிழுணர்ந்த அறிவுடைப் புலவீர்! நீவிர் சமத்காரமாக மொழிந்த சீர்மைக்கு வெகுமதியாக நாம் உமது செவியைக் கொய்யாது விடுகின்றோம்" என்றுகூறிக் கருணைகூர்ந்தனர். புலவர்கள் தோல்வியுற்ற காலத்தும் தமது மானத்தைக் காத்துக்கொள்வதற்குச் சமத்கார மொழிகளை உபயோகிக்கும் மதியூகமான மதிப்புக்கும் வியப்புக்கும் இடந்தருவது போற்றத்தக்கதாம். அனந்த பட்டரது மொழிவிளையாட்டயர்வைப்போல் வேறு பல புலவர்களின்வியப்புறும் மொழிவிளையாட்டுக்களின் வித்தகங்களை இவ்வரலாற்றில் நாம் அறிவதற்கு வில்லிப்புத்தூரார் தமது தமிழ் நாட்டு யாத்திரையில் இன்னின்ன புலவர்களிடத்து இன்னின்ன இடங்களில் கல்விப்போர் நிகழ்த்தி வெற்றி பெற்றார்; அவ்வெற்றியின் நிகழ்ச்சி விசேடம் இன்னன என்பது விளக்கம் பெறாமல் விடுபட்டிருப்பதற்கு நாம் பெரிதும் வருந்தக்கூடியவர்களாயிருக்கிறோம். நாகரிக வளர்ச்சியில் மிக்குயர்ந்து மொழி முன்னேற்றத்தில் மேலோங்கி விரிந்து வியாபித்து விளங்கும் ஆங்கில மொழியும், அம்மொழி வல்ல அறிஞர்கள், புலவர்கள், தேசாபிமானிகள் முதலியவர்கள் வரலாறுகளும், அவர்கள், உலகத்தில் நிகழ்த்திய அருஞ்செயல்கள், மதிக்கத்தக்க மாண்புக்கள், வியக்கத்தக்க வித்தகங்கள், மற்றும்பல சிறப்புக்களும்; இடம், பெயர், காலம், முதலியவற்றுடன் விளக்கம்பெற்றுத் திகழ்வதுபோல், நமது தென்மொழி வடமொழிப்புலமை வல்லார்கள், அரசர்கள்,

ஆசாரிய சிரேஷ்டர்கள், உபகாரிகள், வீரர்கள் முதலினோர் சரிதங்கள் விளக்கம் பெற்றிருக்கவில்லை. நமது நாட்டுப் பேரறிஞர் வரலாறுகள் பெரும்பாகம் குறைவுற்ற சரிதம், காலக்கணக்கின்மை, பெற்றோர்கள், பிறந்த இடம், வாழ்ந்த ஸ்தலம், ஜனன விசேடம் முதலியன மறைவுற்றே காண்கின் றன. அக்குறைவுற்ற வரலாறுகளும் செப்பணிட்டு வெளிப் படுத்துவதில் நமது தமிழகத்தார் விருப்பங்கொள்ளாமல் வாளாவிருப்பது விசனிக்கத் தக்கதாம். இனியேனும், நமது நகராண்மை, நாட்டாண்மை, ஊராண்மை முதலிய பதவிக ளின்தலைவர்களும், பாஷாபிமானிகளும், பட்டதாரிகளும், செல்வர்களும் சற்று தங்கள் திருக்கண்களைத் திறந்து திருநோக்கம் பாலிப்பார்களாயின், மேற்காட்டிய குறைகள் ஒருவாறு நீங்கிச் சிறப்படைந்து திகழும். அந் நன்னாளாகிய பொன்னாள் என்று சமீபிக்குமோ வென்று ஏங்கி எதிர்பார்த் துக் கொண்டிருக்கிறோம்.

## அருணகிரிநாதரும்—வில்லிபுத்தூரரும்.

இங்ஙனம் அனந்தபட்டரை வில்லிபுத்தூரார் வெற்றி கண்டபின்னர், தம்முடன் எதிர்த்து வாதுபுரியும் தமிழ் வல்லார் யாருமே அந்நாட்டில் இல்லாதிருப்பதை யுணர்ந்து, தமது தண்டமிழ்ச் சீர்திருத்த யாத்திரையை நடுநாட்டுக்குத் திருப்பினர். அப்பொழுது ஆங்கு அன்பைப் பெருக்கி ஆருயிரைக் கொள்ளை கொள்ளும் இன்பப்பெருக்கின் இறை வனாகிய ஏறுமயிலானிடத்துக் காதல்மிகச் செய்யும் கவி னுடையதும், சந்தக்கவிக்கோர் தனிச்சிறப்பு வாய்ந்ததும், புதுமுறையிலமைந்த பண்ணமைப்பின் சந்தநலம் கற்போர் கேட்போர் சிந்தையையுருக்கிப் புத்துயிரையும், புதிய உணர்ச்

சியையும் உண்டாக்கவல்ல திறமை வாய்ந்ததுமான திருப்புகழ்ப்பாடல்களைத் தேனோ! பாகோ! செங்கரும்பின் தீஞ்சுவையோ! என்று வியந்து கூறும்படி பலப்படப்பாடிய செந்தமிழ்ப் பாவலர் ஸ்ரீ அருணகிரிநாதர் வெற்றிவேற் பெருமானுக்கு மெய்த் தொண்டராய் விளங்கினர். அவருடன் கல்விப்போர் நிகழ்த்தி வெற்றிகொள்ள வேண்டுமென்ற விருப்பங்கொண்டார் வில்லியார். அத்தருணம் ஆந்திர தேசத்து விஜயநகர வேந்தன் ஸ்ரீ கிருஷ்ணதேவராயனது சிற்றரசர்களில் ஒருவனும், அவ்வமிசத்துத் தோன்றலும், தமிழ் வளர்ச்சியில் மிகுந்த பற்றுள்ளவனும், தெய்வபக்தி மிக்கானுமாகிய "பிரபுடதேவராயன்," தன்னாட்சிக்குட்பட்ட அண்ணாமலைக்கு அரசகாரியமாக விஜயமாயிருந்தான். இவ்வண்ணாமலை, அப்பொழுது நடுநாட்டின் நாயகமாக எல்லா நலனும் சிறக்க இனிது புகழ்பெற விளங்கியது. நமது வில்லிபுத்தூரார் அருணகிரிப்பாவலருடன் வலுவில் கல்விப்போர் தொடுத்து அவரை வென்றுவிட வேண்டுமென்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தனர். அருணகிரிநாதர் ஆந்திரநாட்டரசன் ஆதிக்கத்திலிருந்ததால், அரசனது ஆணைபெறாமல் எதுவும் செய்ய வில்லியாரால் இயலாமலிருந்தது. பின்னர் வில்லிபுத்தூரார் பிரபுடதேவராயனைப் பேட்டிகண்டு, தமது கருத்தையுணர்த்தித், தமது ஆதீனத்துள்ள அரும்புலவர் அருணகிரிநாதருடன் கவிப்போர் தொடுக்கக் கட்டளையிட்டருள வேண்டுமென்று கேட்டனர். வில்லிபுத்தூரார், "திடங்கொண்ட பாவலருக்கு இடியேறு போன்றவர்" என்பதைப் பிரபுடதேவராயன் முன்னமே தக்கோரால் நன்கறிந்திருந்தான் ஆனதால், வில்லியார் தொடுக்கும் தண்டமிழ்ச்சமரில் தமிழ்ப்பாவலர்க்கு ஏதேனும் ஏதம் நேரிடுமோவென

ஐயுற்று, தான் ஆழ்ந்து சிந்தித்தபின் அறிவிப்பதாகக் கூறி அவரைப்போக வழி விடுத்தான்.

ஒரு பற்றுமின்றி உடையவன் பற்றே உறுதுணை யென்பதை உளத்தில் ஊன்றக்கொண்டு, அவனது திருவடி மறவாது தொழுது, அவன் மெய்ப்புகழை மனமாரப் பாடுவதே சிறந்த தொண்டெனக் கருதிப் பசிவந்தபோது அண்ணுமலையின் இல்லங்களில் இரந்துண்டு, தமது வாழ்க்கையை இனிது நடாத்தும் அருணகிரிப் பாவலனுக்கு இவ்விடுக்கண் வந்ததே யென்று அவரது அளப்பரிய பாவன்மையையும், பாடுந்திறமையையும், ஊன்றியறியாமலேயே பிரபுடதேவ ராயன் மனந்தளர்ந்து மிக வருந்தித் தனது ஆஸ்தானத்துப் புலவர்களுள், தக்கார் ஒருவரைத் தனது அருகழைத்து, அந்தரங்கமாக அவரிடம், 'தற்போது இங்கு வலுவில் வாதுபுரிய வந்திருக்கும் வில்லிபுத்தூராரது தமிழ்த்திறமையாது? நீர் அறிந்தவரை கூறுக' என்றுவினவினன். அப்புலவர், 'அரசே! வில்லியார், விரைந்த கதியில் சிறந்த முறையில் பாவாணர் நெஞ்சம் திடுக்கிடப்பாடும் சமர்த்தர்; போலிப்புலவர்களின் காலிச் செயல்களின் கேலிக்கூற்றுக்களை அறவே களைந்து அவர்கள் தமிழ்நாட்டில் தலை காட்டாவண்ணம் துரத்தித் தமிழின் உண்மைத் தன்மையை நிலைநாட்டும் நெறியினர், இவ்வளவே நாம் அவரைப்பற்றிப் பலர் கூறக் கேட்டவை' என்றனர். நமது அருணகிரிப்பாவலர் தன்மையாது? என்று அரசன் மேலும் கேட்டனன். அதற்குப் புலவர், அருணகிரிநாதர் அந்தமிழும் சந்தக்கவிகளை இன்ப நிறைவில் ஈடும் எடுப்புமின்றிக் கலாமேகம் எனச் சொரியும் இசைத்தமிழ் வாணர் பண்ணிசை நிரம்பிய இவர் சந்தக்கவிக்கு முன் எந்தக்கவியும்

சூரியன் முன் மின்மினி போலாம்; செந்தமிழ்க் கடவுளாகிய திருமுருகனின் திருக்கருணையும் நிரம்பப் பெற்றவர் இருவரும் எளியரல்லர், தென்மொழி வடமொழிக் கடல்களின் நிலைகண்டுணர்ந்த பென்னம் பெரியர், ஆயின், வெற்றி தோல்வியென்பது ஒருவர் பங்காயிராமல் தெய்வ நியதின் பாற்பட்டுள்ளது, என்றுரைத்தார். அதுகேட்ட அரசன் ஒருவாறு தெளிந்து அப்புலவருடன் தனது அமைச்சர் ஒருவரையும் உடன்கூட்டி அயில்வேற் கடவுளின் அடியாராகிய அருணகிரிநாதரிடம் அனுப்பி வில்லிபுத்தூரரது வருகையையும், அவரது கருத்தையும், உணர்த்தித் தன்னாலாக வேண்டிய உதவியும், காரியமும் யாதெனக் கேட்டுவருமாறு சொல்லினன்.

அரசனது ஆணைபெற்ற அவ்விருவர்களும் அருணகிரிநாதர் அருகிற்சென்று விஷயத்தை விளம்பினர். அது கேட்ட அடிகள், "எந்தையாகிய கந்தபிரானுக்கும், அவனது முன்னவன் யானைமுகவற்கும், உண்ணாமுலையாருடன் கூடிய அண்ணாமலையார்க்கும் விசேட அலங்கார தீப தூபங்களைச் செய்வித்து இருவர் பங்கிலும் பட்சபாதமின்றி நடுநிலைமை வகித்து விவாதத்தை நேர்மை முறையில் முடிவதில் கண்ணோட்டங் கொள்வதே கர்மம்" என்று கழறினர். அரசனும் அவ்வாறே ஆண்டவர்கட்கு அபிஷேகாதிகள் செய்வித்தான். இது தெய்வத்தின் திருவருள்பெறச் செய்யப்பட்டது.

பின்னர், பிரபுடதேவராயன் பெருஞ்சபை யொன்று கூட்டி அதில் காலமொன்றைக் குறிப்பிட்டு வில்லிபுத்தூரரை அருணகிரியாருடன் தமிழ்ப்போர் புரிய வருமாறு அழைத்தனன். சரபத்தைத் தும்பிக்கையுடைய யானையென்று

எளிதாக வெண்ணிய சிங்கத்தைப்போல வில்லிபுத்தூராரும் தமது விருது வரிசைகளுடன் பரிசனர்கள் சூழ அவையை அடைந்தார். அங்ஙனம் வந்த புலவர் பெருந்தகையாரது போாடம்பரத்தையும், பெருமிதகோலத்தையும்; அருணகிரி நாதரின் துறவையும், எளிமைத்தன்மையும்; அரசனையும், வினையையும், காலத்தையும் கருதி ஆங்குக் கூடியிருந்த அறிஞர் பலரும் பலவாறு பேசுவாராயினர்.

அப்போவையில் இரு பெரும்புலவர்களும் கல்வியின் கரைகண்ட கலா விற்பன்னர்களும், கவிமாரிபொழியும் காள மேகங்களுமாய் விளங்கினர். ஒருவர் அகத்துறவுடன் புறத் துறவும் பூண்ட பெரியார்; மற்றவர் இல்லறத்தை நல்லற மாக்கும் நன்னெறி நின்று தமிழ்மடந்தையைச் செந்தமிழ் நாட்டில் செழிக்கச் செய்வதில் உலையா முயற்சியும், கருமே கண்ணுயினர் செய்கையையும் மேற்கொண்ட செந்தமிழ்ச் சீரியர். ஒருவர் சைவரும், கௌமார சமயத்தரும், செவ்வேளை எவ்வேளையும் போற்றும் இயல்பினரும்; மற்றவர் வைண வரும், திருமண் தீட்டும் திருமால் மதத்தினரும், செங்கண் மாலின் செம்பொற் சீரடி சிறிதும் மறவாச் சிந்தையரும் ஆவர். இவ்விரு வித்வான்களுள், நமது வில்லிபுத்தூராரே அருணகிரிநாதரை வெற்றிகொள்ள வேண்டுமென்ற விருப் பமும், முனைப்பும் மிக்காராய்த் திகழ்ந்தனர். ஆனல், கல்விப் போரைத் தம்முள் எவர் முன்னல் தொடங்குவது என்பதில் சிறிதுநேரம் சிந்தை செலுத்தினர். இறுதியாக ஆந்திர வேந்தன் பிரபுடதேவராயன் ஓர் முடிவுகண்டு, முதலில் ஒருவர் நூறுகவிகள் பாடுவதென்றும், அக்கவிகட்கு மற்றவர் விரைந்து பொருள் கூறுவதென்றும், இடையில்பாடுவதிலும்,

பொருள் கூறுவதிலும் தடைபட்டு எவர் தயக்க முறுகின்ருர்களோ அவர்களே தோல்வித் தானத்தை யுடையவராவர் என்ற ஓர் ஒப்பந்தத்தை விதித்தனர். இருவர்களும் அதற்கிணங்கி அருணகிரிநாதர் கவிபாடுவதென்றும்,வில்லிபுத்தூரார் பொருள் உரைப்பதென்றும் முடிவுக்கு வந்தனர். வில்லியார், அருணகிரிநாதரைக் கவிபாடத் தூண்டினர். பிரபுடதேவ ராயன் அவைத்தலைமை பூண்டு நடுக்கண்ட நியாயம் வழங்க உரியவிடத்தில் திருவீற்றிருந்தனன். அக்கணமே அருணகிரிநாதர் அயில்வேலண்ணலை அகத்துள்ளிருத்தித் தனக்குறு துணையாயிருந்து உதவுமாறு உள்ளத்தில் தியானித்து, அவனது அளப்பரிய ஆற்றலும், அரும் பெரும்புகழும் அகிலத்தோர் அறிந்தானந்த மெய்தவெண்ணிக் "கந்தரந்தாதி" என்னும் அரிய பிரபந்தத்தை யமகமாகக் கட்டளைக் கலித்துறைப் பாவினத்தில் ஆசு கவியாகப் பாடத்தொடங்கினர். அரிதற்கரிய நுண்பொருள்களைத் தனது அகத்துட்கொண்ட அவ்வரிய கவிகட்கு வெகு எளிதாகவும், திறமையாகவும், விரைவாகவும் உரைகூறி வந்தனர்நமதுவில்லிபுத்தூரர். அவையிலிருந்த அறிஞர் பலரும், அவரது அரிய புலமைக்கும், உரைவகுக்குந் திறமைக்கும் மிக வியந்து மகிழ்ந்தனர். 'கற்ருரைக்கற்ருரே காமுறுவர்' என்பது இயல்பானதால், அம்முறைப்படி அருணகிரியாரும், வில்லியாரது அரும்பெரும் புலமைக்கு அகமிகமகிழ்ந்தனர். எனினும், வில்லியாரைத் தோல்வியுறச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் தோன்றியதால், தகாவல்லொற்றில் " தி த த் த " என்ற செய்யுளைப் பாடினர். வில்லியார்க்கு எப்பொழுதும் தமது பக்கத்தில் வெற்றிமாதும், புகழ்த்தேவியும், நாமகளும், உறுதுணையாயிருந்து தமக்கு வெற்றியையும், விளங்குபுகழையும் அளித்து

வருபவர், அன்று, அப்பொழுது, அரிதின் தம்மைவிட்ட கன்றனர். காரணமின்றித் தம்மைவிட்டு நீங்கியது, அவர்கள் யாரிடத்தும் நிலையாயிருப்பதைப் பழகியறியாதவர்களென் பதை உணர்த்திற்று. அதனால், வில்லிபுத்தூராருக்கு வாக்குத் தடைபட்டுப் பொருள் மயக்கமுண்டாயிற்று. உடனாக உரை கூறத் தோன்றவில்லை. சற்றுத் தயங்கி அப்பாடலை மற் றொருமுறை பாடுமாறு கேட்டனர். அருணகிரிநாதர், அது வல்ல பொதுக் கொண்டவாக்கு என்றனர். வில்லிபுத்தூரார் உறையற்றவராகி ஒப்பந்தமுறைக்கு உள்ளாகித் தோல்வியை உளமாற ஒப்புக்கொண்டார்.

வெற்றியானது எப்பொழுதும் ஒருவர் பங்காயிருப்ப தில்லை. எப்பொழுதேனும் ஓரிடத்தில் தோல்வியுண்டாயே தீருகின்றது. பலவிடத்தும் வெற்றியேபெற்று விளங்கு புகழ்படைத்த வில்லியார், இப்பொழுது தோல்வியுற்றது வியப்பல்ல. இது உலகத்தின் விசித்திரச் செய்கைகளில் ஒன்று, மேலெழுந்தவாரியாகக் கவனித்தால், தோல்வியா கத் தோன்றினும், உற்றுநோக்கினால், காலத்தின் மாற்றம் என்பது புலனாகும். வெற்றிபெற்ற வேற்குமான் அடியார் அருணகிரிநாதர், அகந்தை கொண்டாரில்லை. அந்நிறை குணச் செல்வரது வள்ளற்றன்மையானது, வில்லியாரது நாணத்தைக் காத்ததுமன்றிப் புலமையுலகின் கண்ணியத்தை யுங்கூடக் காத்ததென்றுதான் கூறவேண்டும். எவ்வாறெ னின், தோல்வியடைந்த வில்லிபுத்தூரரை அருணகிரியார் தமது அருகழைத்து அன்புறு மொழிகளால் உபசரித்துப் 'புலமைவல்லீர்! அருந்தமிழ் நலத்திற்காகத் தாங்கள் கொண்ட பெருந்தொண்டு பெரிதும் போற்றத்தக்கது; இத்தகைய

நல்லன்பும், அருமுயற்சியும் தாங்கள் எப்பொழுதுமே கொண்டிருந்தல் இன்றியமையாததென்பது எமது விருப்பம்; இதனைவற்புறுத்தும் உரிமையையும் நாம் மேற்கொள்ளுகின்றோம். ஆயின், தோல்வியுற்றார் செவியை, வெற்றி பெற்றார் கொய்வதென்ற உரிமையை நம்பால் கொள்ளாமல் கன்னதானம் செய்கின்றோம்' என்று கூறி வில்லியாரது வீரவாளாகிய துறட்டையும் அவரிடத்தே ஈந்தனர்

நன்றியறிதலோடும், பக்தியுடனும் அருணகிரியார் கூறிய உரையை வில்லிபுத்தூரார் கேட்டு உவகையடைந்து, அவர் விரும்பியவாறே செய்வதாக வாக்களித்து எஞ்சியகவிகளையும் அருணகிரியார் பாடும்வரை உடனிருந்து கேட்டு, அவற்றிற்கும் முன்போலவே உரைகூறி நூலைப் பூர்த்தி பெறுவித்துப் புலவர் பாலும், புரவலர்பாலும் பிரியாவிடைபெற்றுத் தம்மூர்க்கு வழிகொண்டார்.

இச்சம்பவத்தினைப் பிற்காலக் கவியொருவர், தனிநிலைக் கவியாகப்பாடி யிருக்கின்றனர் அது—

"காசுக்குக் கம்பன் கருணைக் கருணகிரி"

என்ற தலைப்புடையது.

கந்தரந்தாதியின் 54-ஆம் கவியும் அதன் பொழிப்புரையும் அடியில் வருமாறு.

## கந்தரந்தாதி.

"திதத் தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத் தத்தத் தித்த தித்த தித்த தேதுதது தித்திதத்தா
திதத் தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத் தத்தத் தித்தித்த தீதீ திதி தீதொத்த தே"

## பொழிப்புரை.

"திதத்தத்த தத்தித்த" என்னும் தாள அளவைத் தமது திரு நடனத்தில் நடிக்கின்ற பரமசிவனும், பிரமனும், படத்தையும் பாம்பின்மேலுள்ள இடத்தையும், நிலைபெற்றுத் ததும்புகின்ற சமுத்திரத்தையும் பாயலாகக்கொண்டு தித்திக்கின்ற தயிரை உண்ணும் திருமாலும் வணங்குகின்ற முதல்வனே! தந்தங்களையுடைய ஐராவதத்தால் வளர்க்கப்பெற்ற கிளிபோன்றவளாகிய தெய்வானையின் தாசனே! தீமையே நெருங்கிய எழு தாதுக்களால் நிறைந்து மாணத்திற்கென்றே பிறந்து பல ஆபத்துக்கள் அமைவுற்ற எலும்புகளையுடைய பையாகிய இவ்வுடல் எரியப்போகின்ற அந் நாளில் உன்னை இப்பொழுது துதிக்கும் எமது புத்தியை உனது அடியிணைக்கு ஆட்படுத்த வேண்டும்" தீ-என்பதாம். தித் தத்த தித்த இம் மூன்றும் - பிற தாளமானங்களுக்குமெழுவாய், தொத்தது, பயனிலை. உபலட்சணம்

## கொங்கர்கோனும்—தமிழ்வளர்ப்பும்.

"கோசலர்" ஆட்சியில் மிக்குயர்ந்த கொங்குநாடு மற்றைய சேர—சோழ—பாண்டிய நாடுகளின் வரிசையில் வைத்தெண்ணக் கூடிய பெருமைமிக்கதென்பது பழைமை மிக்க சில நூல்களின் சான்றுகளால் நன்கு அறியப்படுகின்றது. அவை விரிக்கிற்பெருகும். இத்தகைய பெருமைக்கு உறைவிடமான திருநாட்டின் அரசர்கள் பல்லோர்களில் "கோங்கர் கோன்" என்னும் பெயரிய குறுநில மன்னனும் ஒருவன். இவன் கி. பி. 15-ஆம் நூற்றூண்டில் வடகொங்கின் நிலப்பகுதியொன்றில் சீர் சிறக்கச் செங்கோலோச்சி

யிருந்தனன். அந்நிலப் பகுதியின் பெயர் "வக்கைபாகை" இது இப்பொழுது, தென்ஆற்காடு வடஆற்காடு ஜில்லாக்களின் சார்பில் திருவெண்ணெய் நல்லூர், திருக்கோவிலூர், திருவண்ணுமலை முதலிய திருத்தலங்களின் அண்மையில் தென்பெண்ணையாற்றின் கரையில் இருக்கிறது. இவ்வக்கை பாகை, அரசமாற்றத்தாலும் காலம் என்னும் மோசக்கார னது விபரீத செய்கையாலும், உருவிழந்து வேறுபெயரால் வழங்கப்படுகிறது. இக் கொங்கர்கோன், தனது அஞ்சா நெஞ்சத்தாலும், எஞ்சாத வீரத்தாலும், தறுகண் ஆண்மையாலும், பகைவரைப் புறங்கண்டு வாகை சூடி வீறுகொண்டு விளங்கியதாலும், உயிர்க்கு ஊதியம் வேண்டுமானல், ஒருவன் தன்னிடத்துள்ள பொருளைக் கரவாது, பயன் வேண்டாது, அன்புடன் முகமலர்ந்து இரப்பார்க்கீந்து இசைபெறுவது தான் மறவாக்கடமை யென்பதையுணர்ந்து அதன்படி யொழுகியதாலும், இவனது பெரும்புகழ் எங்கும் பரவியது. அறிஞரும், பிறரும் இவ்வேந்தனை வரபதி ஆட்கொண்டான், கோங்கர் குலபதி, சேரர்பூபதி, கோங்கர் கோமான், கோடி மதிற்பாகைவேந்தன், பெண்ணைநாடன், நாகையாப்புகழான், வண்மைக்குரிசில் முதலிய பெயர்களால் போற்றி அழைத்தனர். இவை இவனது சிறப்புப்பெயரும், காரணப்பெயரும், புகழ்ப்பெயருமாம். இவ்வகை இவனது பெயர்ப்பெருக்கத்தால் புகழ்ப்பெருக்கு மிகுதிப்பட்டு அதுயாவர் நினைவிலும், நெஞ்சிலும் இடம்பெற்றிருந்தன. வரபதி ஆட்கொண்டான் மெய்ப்புகழை நன்றாகப்பாராட்டிப் பாடியவர்களுள், இரு பெரும்புலவர்களே இங்கு குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் பெயர்கள் முறையே இரட்டையர், வில்லிபுத்தூரர் என்பன.

இரட்டையர் பாடல்:—

"சாணர்க்கு முன்னிற்கு மாட்கொண்ட நாயன் றமிழ்க் கொங்கர்
பாணுற்ற வரிவண்டு சேர்வக்கை நகராதி பக்கத்திலே [கோன்
ஊணுக்கு வாராதிருப்பாய் விருப்பாகி யுயர்வானிலே
வீணுக்கு நின்ளுக மெலிகின்ற திவ்வாறு வேண்டிங்களே"

என்பது. தமிழ் நாவலர்சரிதை.

வில்லிபுத்தூரர் பாடல்கள், "வில்லிபுத்தூரரும் அவாது நன்றி யறிதலும்" என்ற தலைப்பின் கீழ்க்காட்டப்பட்டுள்ளன. அருமைபெருமைகளும், மெய்ப்புகழும் நிரம்பிய அவ்வினிய செய்யுட்களால் இவனது தமிழ் வளர்ப்பும் புலவர்களைப் போற்றிப் புரந்ததும் ஒருவாறு உணரலாம். இவனது ஆட்சிக்காலத்தில் கொங்குநாடு, சேலத்தின் வடக்கெல்லையைக் கடந்து திருமுனைப்பாடிநாடு, சேதிநாடு, நடுநாடு என்ற மூன்றுநாடுகள்வரையும் வியாபித்துத் தனது பெருமையை விளக்கிக்கொண்டிருந்தது. இவனது பிறப்பகம் "சனியூர்" என முன்னரே கூறியுள்ளோம். வரந்தருவார் தமது பாரதப்பாயிரத்தில் 'ஆட்கொண்டநாயன்' 'மாகதக்கோங்கர்கோன்' என்றுபாடுவது கொண்டு வரபதியின், முன்னோர்கள், கொங்குநாட்டினின்றும், சோழனது சேனாபதிகளாகச்சென்று அரசன் தனது பகைவர்களை எதிர்த்துப் போர் புரிகையில் அவனுக்குறுதுணையாயிருந்து, அஞ்சாது மார்தட்டி நின்று ஆண்மைபல காட்டிப் பகைவர் எஞ்சாவகை எதிர்த்துப்போர் புரிந்து வீரமே விளைத்து வெற்றிகண்டதால், சோழன் அவர்களது போராண்மைக்கு வியந்து புகழ்ந்து, மிகுதியான வெகுமதிகள் பொன்னும், பொருளும், பூமிகளுமாகக் கொடுக்கப், பெற்ற அவற்றை அவர்கள், மேலும் விருத்திசெய்ய நினைந்து அரசப்பிரதிநிதியாக அங்கேயே தங்கியிருக்கவும், அங்ஙனம் தங்குவதற்கு அரசனது அங்கீகாரமும் பெற்றிருக்கலாமென்

றும், அச்சந்ததியின் கால்வழியில் வீரவேந்தனுகப் பாகை வேந்தன் தோன்றியிருக்கலாமென்றும் யூகிக்கவிடமிருக்கிறது.

சோழியர் எந்தநாட்டில் சென்று வசித்தாலும், தொண்டைமண்டலத்தார் எத்தேசத்திலிருப்பினும், சோழியர், தொண்டைமண்டலத்தார் என்று வழங்குதல்போல் தொழில்நோக்கி எந்தநாட்டிலிருப்பினும் கொங்கரைக் "கோங்கர்" என்றே வழங்கலாயினர். அவ்வழக்குப்பற்றியே வரந்தருவாரும் ஆட்கொண்ட நாயனைக் "கொங்கர்கோன்" என்று சிறப்பித்துக் கூறினாராவர். கொங்கர்கோன் சிறப்புக்களைக் காண விரும்புவோர், வரந்தருவார் பாடிய பாயிரம் 18, 19, 20-ஆம் கவிகள் காண்க.

மாகதம் என்பது "மகதம்" என்னும் நாட்டினைக் குறிக்கும் பதம். அது கொங்குநாட்டின் பழைய பெயர்களில் ஒன்று. சாஸனங்களில் "வடகோங்கு-மாகதம்" என்று பயின்றிருப்பது இதற்கு உதாரணமாம். மகதம் என்ற பெயர் கி. பி. 15-ஆம் நூற்றுண்டிலும், அதற்கு முன்னும் சேலத்துக்குக் கிழக்கில் இருபத்தைந்து மைலுக்கப்பாலுள்ள ஏத்தாப்பூர் முதலிய ஊர்களுக்கு வழங்கியதாகத் தெரிகிறது. முன்னரேயே 'மேலைக்கோங்கு', 'கீழைக்கோங்கு', 'தெற்குக் கோங்கு', என்ற பெயர் நிலவிவந்த கொங்குநாட்டிற்கு, வடவெல்லையாக 'வடகோங்கு' என்ற புதியநாடும் சேர, அது 'மாகதம்' என்ற பெயரையேற்று, நிலப்பரப்பும் நீண்டு, திருமுனைப்பாடி நாடுவரை வியாபிப்பதற்குமாயிற்று. இதற்கு ஆராய்ச்சியாளரும், ஆதாரங்காட்டி விவரித்திருக்கின்றனர். அது, "வானிநதியின் வளம்பெற்றுச் சிறப்புற்றிருக்கும் வட

கரை நாடு பவாநிதொடங்கி, திருமுனைப்பாடி நாடுவரை ஒரு காலத்தில் பரவியிருந்ததென்றும், ஆட்கொண்டானாகிய சேரர்பூபதி, சோழர் பாண்டியர்களுடன் போர் புரிந்து வெற்றிபெற்று எல்லையை வரையறுத்து நாட்டை அவர்கட்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டுத் தான், தனது பகுதியை விஸ்தரித்தானென்றும், அதற்கு முன்னர் கொங்கர்கோன் எல்லை கொங்குமண்டலத்தின் அளவிலேயே அடங்கியிருந்ததென்றும், அதன் பின்னரே திருமுனைப்பாடி நாடுவரை வியாபித்து "வடகோங்கு" என்னும் பெயருண்டாயிற்று" என்பது.

வடகொங்கு என்னும் பெயர் அக்காலத்திலேயே வழங்கப்பட்டதென்பதற்கு, இன்னொரு ஆதாரமும் காணப்படுகிறது. அது—"இற்றைக்குச் சுமார் 663 ஆண்டுகளுக்கு முன்னர் காஞ்சிபுரத்தில், செந்தண்மையுடைய அந்தணர் மரபிற் பிறந்து, வடமொழி, தென்மொழிகளில் ஒப்பற்ற புலமையடைந்து, "கவிதார்க்கீக சிங்கம்" என்ற சிறப்புப் பெயர்பெற்ற "வேங்கடநாதாசார்யார்" என்னும் பெரியார் தாம் பாடிய "பரமபத பங்கம்" என்னும் தமிழ் நூலில்,

மாதவனார் வடகொங்கின் வானியாற்றின்
  வண்ணிகைசன் னடங்கண்டு மகிழ்ந்துவாழும்
போதிவை நாம் பொன்னயிந்தைநகரின் முன்னாட்
  புணராத பரமபதப்போர் பூரித்தோமே

என்பது."

இப்பரமபதப்பிரபந்தத்தை வேங்கடநாதாசார்யார் கொங்கு நாட்டின் உண்ணாடாகிய ஒடுவங்கநாட்டுச் 'சத்தியமங்கலம்' என்னும் ஊரிலிருந்து பாடினார் என்றும், இவர்காலம் கலி

4370-ஆம் ஆண்டு சுக்கிலவருடம் (ஆங்கிலம் 1268) என்றும், கொங்குமண்டல சதகமும், பிறவும் சான்றுகூறுகின்றன. அவற்றுள், கொங்குமண்டல சதகச் செய்யுள் அடியில் வருமாறு:—

"படிபுகழ் தேசிகர் கச்சியி னெஞந்து பகரவொண்ணு
வடகொங்கு வாணி நதிதீரச் சத்திய மங்கலத்திற்
குடிபுகுந் தாய்ந்து பரமதபங்கங் குலவுவொண்ணூல்
வடிதமி ழாற்சொலத் தேறிய துங்கொங்கு மண்டலமே" (60)

வடகொங்கும், அதன் எல்லையும், நிலைபெற்றிருந்ததற்கு "வடகோங்குமன்னன்" "வடகோங்குப்பட்டன்" என்ற பெயர்கள், நாட்டில் மக்கட்கு வைத்து வழங்கப்பட்டிருப்பதும் கவனித்தற்குரியது.

இங்ஙனம், பெயர், நாடு, புகழ், பழமை, பண்பு முதலியவற்றால் மிக்குயர்ந்த கொங்கர்கோன், தான் பிறந்த சனியூர், தனது அரசிருக்கைக்குத் தகுதியில்லாதது கண்டு, அதனை விட்டு, வடகொங்கைச் சார்ந்த வக்கைபாகை என்னும் பேரூர்க்குமாற்றி, ஆங்கு அரண், கோட்டை, பருமதில்முதலியன உண்டாக்கி, அதனுள் பெரிய அரண்மனை யொன்று புதுக்கி, ஆங்குத்தன் அரசிருக்கையை மாற்றிக்கொண்டான். அவ் "வக்கைபாகை" இப்பொழுது "வக்கை" எனக்குறுகி வழங்கப்படுகிறது. இவ்வக்கைபாகையைச் சிலர், திருவக்கரை" என்னும் சிவஸ்தலமென்று கூறுகின்றனர். அது தவறு. திருவக்கரை, தொண்டைநாட்டுச் சிவஸ்தலங்களில் ஒன்று. வக்கபாகை நடுநாட்டைச் சார்ந்தது. பாரதம் 17-ஆம் போர்ச்சருக்கம் 33-ஆம் கவிகாண்க.

தமிழ்ச்சுவையை நன்குணர்ந்த இக்கொங்காயன், தனது அரசாட்சியில், தண்டமிழையும், அதனைச் சந்தேக

விபரீதமறக் கற்ற புலவர்களையும், நன்ருகப் பரிபாலிக்கும் எண்ணத்துடன், முன்னர் பாவேய்ந்த செந்தமிழையும், பைந் தமிழ்வாணரையும், போற்றிக் காத்துவந்த தமிழ் நாட்டு மூவேந்தரைப்போல், தானும் தமிழ்பாடும் புலவர்களைச் சபை கூட்டி அதில் கைதேர்ந்த பாவலர்க்கும், நாவலர்க்கும் அவர்கள் விருப்பந்தணியுமட்டும் பொருள் நல்கி, அவர்கள் கவலையுரு வண்ணம் கண்காணித்து, அவர்கள் மூலம் செந் தமிழைச் சிறக்குமாறு செய்துவந்தான். தானும், தண்ட மிழைப் பிழையறக்கற்றுத் தேர்ந்து புலவரொப்பக் கவிபாடும் புலமையும் பெற்றிருந்தானுனதால், எப்பொழுதும், புலவர் களுடன் கூடித் தமிழாராயும் கலாவிநோதனுகத்திகழ்ந்து வந் தான். இவ்வுண்மை, 'நான்காஞ்சங்கமேன முச்சங்கத் தண் டமிழ் நூல் தலைகண்டானே' என்ற பாயிரச் செய்யுளால் தெளிவாம்.

இங்ஙனம் இவ்வரசன் செந்தமிழ் விருப்பும், புலவர் பாமரிப்பும், பெரிதும் உடையான் என்னுஞ் செய்தி, தமிழ் நாடெங்கனும் பரவிப் புகழ் பெருகிற்று. பழுத்த மரம் நாடும் பறவையினங்கள்போல், புலவர், கவிராயர், பாவலர், நாவலர் முதலினோர், ஆட்கொண்டானை அடுத்துத் தமிழ் புனைந்துபாடிப் பொருட்கொடை பெற்று வறுமை நீங்கி வாழ்ந்து வந்தார்கள். செந்தமிழ் மடந்தையும், தனது செவ் விய நலம் விளங்க, மதுரம் பழுத்த இனிய நன்மணத்தை யாவரும் நுகர்ந்தின்புறவீசி முன்னேற்றமடைந்தனள்.

இவ்வாறு பாகைவேந்தன், பாவாணர்களின் பாதுகாப் பாளனுகவும், பசுந்தமிழ் நாளும் பெருகி நலம்பெற்றேங்கு வதில் கண்ணேட்டமுடையவனுயவும் திகழ்ந்தான். அருள்

நிரம்பிய இவனது உள்ளத்தில் பாரதவமிசத்து அரசர்களின் வரலாற்றை விளக்கும் பாரதம் என்னும் வடமொழி இதிகாசத்தை, அழுதொழுகும் இனிய தமிழ்ப்பாக்களில் இயற்றுவிக்கவேண்டுமென்னும் பேரவா நிரம்பிப் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. தனது கருத்தைமுற்றுப்பெறுவிக்குமாறு புலவர் பலரையும், கவிபாடுவதில் கைதேர்ந்த கலாவல்லவர்களையும், பன்முறை பலவாறு வேண்டினன். அவர்கள், தங்களுக்கு அத்தகைய பேராற்றல் இல்லையென்றும், அதனைப் பெரிதாக வுடையவர், கவிதாசார்வ பௌமன் என்னும் வில்லி புத்தூரரே ஆவரென்றும், மேலும், அவர் அட்டாக்கரம் ஓதி, செங்கண்மாலைத் தொழுதேத்தும் செம்மையுடையாரென்றும், பிறப்பொழுக்கமும், அந்தண்மையும், அமைந்தவரென்றும், இலக்கண—இலக்கியம் என்னும் இருபெருங் கடல்களை அருந்திச் சொரியும் காளமேகம் என்றும், பலபடப்பாராட்டிப்புகழ்ந்து கூறினார்கள்.

அதுகேட்ட ஆட்கொண்டநாயன், மிகவும் மகிழ்ந்து அத்தகைய சீரும், சிறப்பும் நிறைந்த புலவர் பெருமான், தனது வேண்டுகோளுக்கு இணங்கிப் பாரதகாவியத்தைப் பாடத்துணிவரோ? வென்றான். புலவர்கள், 'அரசே! தாங்கள் அவ்வாறு நினையற்க. தமிழறிவும், தகைசாலன்பும் மிகுந்த தங்களது விருப்பத்தை மிகவும் மதித்து அப்பாவேந்தர், பாரதகாவியத்தைப்பாடி முடிப்பார்' என்று கூறினார்கள். அரசன், 'அங்ஙனமாயின் மிகநன்று' என்றுசொல்லி, வில்லி புத்தூரரது நல்வரவைப் பேரவாப்பெருக்குடன் வானத்தினின்றும் விழும் மழைத்துளியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சகோரப்புள்ளையொத்திருந்தான்.

## வில்லிபுத்தூரர் சனியூர் வருகையும், பாகைவேந்தன் பாரதம்பாட வேண்டுகையும்.

மேலே விளக்கியவாறு வில்லிபுத்தூரர், தமிழ்வளர்ச்சி பற்றிய தமது தேசயாத்திரையை நடுநாட்டு அண்ணாமலை யுடன் ஒருவாறு முடித்துக்கொண்டு, அடுத்துள்ள தமது பிறப்பகமாகிய சனியூருக்குத்திரும்பினார். புலவர் சனியூர் சேர்ந்தார் என்ற செய்தி, கொங்கர்பூபதிக்குத்தெரிந்தது. அவன் அகமிகமகிழ்ந்து, தனது நெஞ்சில் நெடுநாள் வளர்ந்து கொண்டிருக்கும் பேரவா, விரைவில் முற்றுப்பெருங்காலம் குறுகியதென்று நினைந்து, தக்கார் சிலரைவிடுத்து, வில்லிபுத் தூராரை, வக்கைபாகையிலுள்ள தனது அரண்மனைக்கு எழுந் தருளுமாறு செய்தான். அங்ஙனம் எழுந்த அப்பெரியார்க்கு வந்தனை வழிபாடியற்றி, தான் கொண்டிருந்த எண்ணத்தை அடியில்வருமாறு வெளியிட்டான்.

அது—'அரும் பெரும் புலவீர்! நீவிரும், நானும் பிறந்த நாட்டிற்கு, என்றும் அழியாத கீர்த்தி நின்று நிலவ, வட மொழியில், ஸ்ரீ வேதவியாச முனிவரால் மிகவும் விரித்துரைக் கப்பட்ட மகாபாரதக் கதையை, ஆன்ற புலமைமிக்க சான் றோர் திருச்செவிகட்குத் தெள்ளமுதம் போல் தித்திக்குமாறு சீர்சான்ற செந்தமிழில் பற்பல பாவினங்களில் பெருங்காப் பியமாக இயற்றியருள வேண்டும்' என்பதே.

## பாரதம்பாடியதும், பாடுதற்குரியகாரணங்களும்.

அருந்தமிழுணர்ந்து, அறிவிற்சிறந்து, தமிழ் வளர்ப்பதில் தலையன்புகொண்டு, ஈந்துவக்கும் இன்பத்தை இனிதுணர்ந்த கொடைக்கோர், எல்லையாகவும், புலவர்கட்கு வைப்பு நிதி

*யாகவும் விளங்கிய கொங்கர்கோன், தம்மை மிகநயந்து பாரதத்தைத் தமிழில் காப்பியமாகப் பாடும்படி கேட்டுக்கொண்டதற்கு, வில்லிபுத்தூரார் பேரானந்தமடைந்து, இத்திருப்பணி திருமாலின் திருவுளச்சம்மதம் போலுமென்று கருதினர். இங்ஙனம் கருதியது, பாரதம் பெரும்பாப்பாயுள்ள தென்பதோடு, பலராலும் மிகுதியாகப் போற்றப்படுவதையும் பரிமளங்கமழும் மறைநான்கதனுடன், ஐந்தாம் வேதமெனக் கொண்டாடற்பாலதான ஒப்புயர்வில்லாத தெய்விகத்தன்மை பொருந்தியிருப்பதையும்,*

> *"தாயாய் மகவாய் தனியாய் பலவாய்*
> *நீயா யானாய் நிற்கும் ஒருவன்*
> *வாயா மனனாய் மாய்கைக் கணுகா*
> *வாயாதவன்"*

*திருவாய் மலர்ந்தருளிய பகவத்கீதையைத் தன்னகத்தே கொண்டிருத்தலையும், பரம்பரையாக வழங்கிவரும் முறைப்படி முக்கண் மூர்த்தியின் முதற்புதல்வனாகிய யானைமுகத்தன் தன் கொம்பொன்றை எழுத்தாணியாகவும், மேருமலையை ஏடாகவும் கொண்டு எழுதிய சிறப்பையும்; அறங்களை இனிதுணர்த்துவதில் வேதத்தினும் மிக்க பாரம் உடைத்தாயிருப்பதையும்; நிடதர்கோன் நளன்; வாய்மைகாத்த அரிச்சந்திரன் முதலிய உத்தம அரசர்களின் உயர்ந்த வரலாறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதையும்; இவற்றிற்கு மேலாகத் தமது இருதய பீடத்தில் திருவீற்றிருந்தருளும் செங்கண் மாலின் இனியவரலாறு இடையிடையே விரவியுள்ளதென்னும் இறும்பூதுபற்றியுமாம். இங்ஙனம் வில்லிபுத்தூரார் கருதி, ஆழிவண்ணனின் செம்பொன்னடிகளைப் பற்றுக்கோடாகக்கொண்டும், வரபதி ஆட்கொண்டானின் விருப்பத்தை*

நிறைவேற்றவுமாகப் பாரதர் வரலாற்றை மதுரம்பழுத்த தமிழில் தேனே! செம்பாகோ! திரண்டசெங்கரும்பின் தீஞ்சுவையோ! எனச் சுவைத்தோர் செப்பித் துதிக்கும்வண்ணம் "பாரதம்" என்னும் பெயரில் பாரகாவியமாகவும், சிரஞ்சீவியாயிருக்கவும், ஆறாயிரஞ் செய்யுளில் அழகாகப்பாடி முடித்தார். இவர் பாரத காவியத்தை ஆறாயிரஞ்செய்யுளில் பாடினர் என்பதற்கு அடியில்வரும் செய்யுள் சான்றாகக்காண்கின்றது, அது:-

"கலியுக வியாதன் சொல்லக் கணபதியெழுது பாடல்
பொலிவுறு தமிழி னாறுயிரமென விருத்தம் போற்றிச்
சலிவற வில்லிபுத்தூ ரிறைவனும் சார்வ பூமன்
ஒலிகெழு மறையோர்கோமா னுயர்தவ ருவப்பச் சென்னான் "

என்பது.

மற்றும், இப்பேரிதிகாசத்தில் அமைந்த அதிசயமும், சிறப்பும் யாதெனில், முதன்மையாகச் சொல்லக்கூடியது வடமொழி தென்மொழிக் கலப்பேயாகும். இந்நூலில் உள்ளதைப்போல் மற்றெந்த நூலிலும் இவ்வளவு வடமொழி மாறுபட்ட தமிழ்ச் சொற்கள் கலந்திருப்பதைக் காணுதல் அரிது. சொற்கள் மிகுதியால் மிளிர்வது மாத்திரமன்று. தமிழ்நெறியையும், தமிழ் இலக்கணத்தையும் தழுவித் தற்பவமாகவோ (வடமொழியில் மாறுபட்டசொல்) தற்சமமாகவோ (வடமொழிக்கும், தமிழ்ப்பாஷைக்கும் பொதுச் சொல்) வேறுபுதுச்சொல்லாகவோ செய்திருக்கும்வகை, இவரினும் மேம்பட்ட புலவர் யாருமே இரார். அன்றியும், தமிழ் மொழிப் பெயர்ப்பாகச்செய்த விருத்தப் பாவினத்தில் தமிழ் வகையன்றி வடமொழிக்குரிய (1) உத்தம், (2) அத்யுத்தம்,

(3) பிரகிருதி, (4) விகிருதி, (5) சங்கிருதி முதலிய சந்தங்கள் அமைந்துவந்த விருத்தங்களும், (6) தத்திதாந்தம், (7) கிருதம், (8) அவ்வியயம் முதலிய சொற்களும், வடமொழி (9) சமாஸ ரூபமாகத் தானே வந்தமைந்த பதங்களும், வியாஸ பாரதமாகிய முதநூற் பொருள்கொண்டு விளங்கத்தக்கவைகளும், பண்டைத்தமிழ் நூல்கள் சிலவற்றின் பொருள்கொண்டு உணர்தற்கானவைகளும், பிறவற்றால் உணர்தற்கானவைகளும், நீதிநெறிகளைக்கூறும் செய்யுள்களும், செய்யுள்களும், சொற்களும்பலவாம். தென்னிந்திய பாஷையின் வரலாற்றில் வடமொழி தென்மொழி சம்பந்தக் கலப்புவகையில் இவரே முதன்மை பெற்றவராவர்.

கொங்கர்கோனாகிய வரபதிஆட்கொண்டான், வில்லிபுத்தூரரைக் கொண்டு பாரதம் பாடுவித்தான் என்பதும், கொங்கர்கோனும், அவர் முன்னோரும், ஸ்ரீ வில்லிபுத்தூரரும் கொங்கு நாட்டினர் என்பதும், அம்மண்டல சதகத்தால் அறியப்படுகிறது அது:-

"துன்னு மறைப்பொரு ளெல்லாம் பொதிந்து சுவை முதிர்ந்து
பன்னும் புகழ்பெறைந் தாம்வேத மென்னுமப் பாரதத்தைத்
தென்னன் மொழியிற் சொலச்செய்து கன்னடர்ச் செற்றதமிழ்
மன்னன் வலியனுட் கொண்டான் முனோர்கொங்கு மண்டலமே"

கொங்குமண்டல சதகம் 32.

## பாரதமும்-அதுபற்றிவழங்கும் கதைகளும்.

செந்தமிழ்நாட்டில் நமது வில்லிபுத்தூரார் பாரதம் பாடப்பட்டதுபற்றிப் பல கதைகள் வழங்கப்படுகின்றன. நமது தமிழாசிரியர்கள், பண்டைத்தமிழ்ப்புலவர் வரலாறுகளில்

பொருந்தாப் புனைகதைகளைப் புகுத்தி, அவைகளைக் கன்ன பரம்பரைகளிற்பெருக்கி, அவற்றில் பெருமை யிருப்பதாகக் கருதிமகிழ்ந்து வருவது உண்மையில் வருந்தத்தக்கதே. இது போன்ற இழுக்குடைய செய்கைகளினாலேயே, நமது புலவர் பெருமக்கள் வரலாறுகள் புனைந்துரையும், பொய்யும், நிரம்பிய தெனப்பிறமொழியாளரும், வரலாற்று ஆராய்சியிற் சிறந்த தமிழ் மொழி வல்லாரும் கூறுகின்றார்கள். இத்திய வழக்கம் ஒருங்கே களையப்படவேண்டுமென்ற நன்னோக்கங்கொண்ட தமிழறிஞர்களிற் சிலர், ஆராய்ச்சி வகையில் தாம் எழுதிவரும் தமிழ்ப்புலவர், தனியடியார் வரலாற்றின் மூலம் முயன்றுவருகின்றனர். சிலகாலத்திற்குள், அவர்கள், நன் முயற்சி பெரிதும் பயன்பட்டுப் பழந்தமிழ்வாணர் வரலாறுகளில், புனைந்துரைகள் இடம்பெறுமலே ஒதுக்கப்பட்டு, மெய்வைத்தவரலாறுகவே மிளிருமென்பது ஒருதலை. இது நிற்க.

மேலேகதைகள் வழங்குவதாகக் கூறினோம். அவற்றுள், ஒருகதையாவது:— "வில்லிபுத்தூரர், அருணகிரிநாதரிடம் தோல்வியுற்று, அண்ணாமலையினின்றும் நீங்கும் பொழுது தம்மெதிரிலே ஒரு சிவாலயமிருக்க, அது தமது கண்ணுக்குத் தோன்றாது திரையிட்டு மறைக்கும்படி தன்னுடன்கூட வந்தவர்களுக்கு உத்தரவிட்டுச் சிவநிந்தை செய்ய, அதனை அறிந்த சைவர் சிலர், அருணகிரியாரிடஞ் சென்றுரைப்ப, அவர் முனிந்து, வில்லிபுத்தூரார் கண்கள் இழக்கக் கடவராக என்றுகூறி "புரத்தை நரசிங்கத்தை" என்ற முதலடியுடைய வசைக்கவிபாட, அதனால், வில்லிபுத்தூரார் கண்ணிழந்தன ராம். அச்சாபம் நீங்குதற்குறிய வழியாது? என்று அருணகிரியாரைக் கேட்க, அவர், சிவசம்பந்தமான நூலொன்று

பாடினால் அச்சாபம் நீங்கும் என்றாராம். வில்லிபுத்தூரார் வைணவரானதால், தமது வைணவமதக் கொள்கைக்குப் பங்கம் உண்டாகாமலும் சிவஸ்துதிசிற்சிலவிடத்தில் விரவிவரும் படியாகவும் பாரதத்தைப் பாடித் தமது கண்களைப் பெற்றாரென்பது.

இக்கதை, பாரத காவியத்தின் பாயிரத்தோடு மாறுபடுகின்றதனாலும், வரந்தருவார் பாயிரத்தை மறுக்கக்கூடிய பிரபல ஆதாரமொன்றும் இதுவரை காணப்படாததனாலும், இவர், சிவநிந்தை செய்யும் வீரவைணவர் எனக்கூறுதற்குச் சான்றின்மையாலும், சிவஸ்துதி செய்துள்ளார் என்பதற்குச் சான்றுண்மையாலும் புனைந்துரை யென்றே கூறலாம்.

மற்றும், வில்லிபுத்தூரர்து வைராக்கியத்தை அல்லது உலகவாழ்க்கையை அல்லது ஆத்மபோதக் கொள்கையைக் குறிப்பிட பாரதத்தில் யாதோராதாரமும் இன்மையாலும், அருணகிரியாருடன் இவர் என்றும் மாறுபட்டவாராக இருந்ததால் மகாபாரதம் ஏகதேசமாக வைராக்கிய மின்றி விளங்குவதனாலும், இவர் தமது ஜீவியகால முற்பகுதியில் வைராக்கியமும், பிற்பகுதியில் பேதாபேதமாயும் விளங்கினரெனக் கூறுவதனாலும் இக்கதை புனைந்துரையென்று கூறுவது பொருத்தமானதே.

இரண்டாவது கதை:— "வில்லிபுத்தூராருக்கும், அவரது சகோதாருக்கும், உரிமைப்பொருள் பிரித்தல்பற்றிப் பகையுண்டாகி, அவர் தமையன் மீது ஆட்கொண்டானிடம் பாகவழக்குத் தொடுத்தனர். அரசன் வில்லிபுத்தூராரது புலமைப் பெருக்கை முன்னமே பல்லோரால் கேள்விப்பட்டிருந்தானானதால், புலமையறிவு மிகுந்த இப்போதினுர்க்கு மெய்யறிவு தோன்றுமல் லோபகுணம் படைத்திருக்கின்றாரென்று மிக

வருந்தி அம்மெய்யறிவு அவருக்குத் தோன்றச் செய்வதற்கு ஏற்ற சூழ்ச்சி, (தாயவிபாகங்காரணமாகத் துரியோதனாதியர் மாறுபட்டு அழிந்ததைக் கூறும்) மகாபாரத நூலில் இவரைப் பழகும்படி செய்வதே'' என்று உறுதிசெய்து கொண்டு, அரசன் அவரை நோக்கி, 'நீர் மகாபாரதத்தைத் தமிழில்பாடிக் கொணர்க, உமது வழக்கை முடிக்கிறேன், என்றுகூற, அதன்படியே அவர் பாடத்தொடங்கிப் பாரதத்திலுள்ள நீதிகளில் கருத்தூன்றியவராய், பின்னர், தாமே உரிமைப்பொருள் பிரித்தலில் வெறுப்புற்றுத் தமக்குரிய பாகத்தையும், தமது நம்பிக்கே கொடுத்துவிட்டார் என்பது.

இதுவும் புனைந்துரையே, இது புலவர் லோபகுணத்தால் பேராசை மேற்கொண்டவரென்பதை விளக்க வெழுந்தது இக்கதை.

மூன்றாவது கதை:— வில்லிபுத்தூராரும், அவரது சகோதரரும் உடன் பிறப்பின் உரிமையால், இணைபிரியாராயிருந்தனர். ஆட்கொண்டான் அவர்களை அணுகிப் பாரதம்பாடும்படி வேண்டினன். அவர்கள் அதனைப் பொருட்படுத்தாது வேற்றூர்க்குச் சென்றார்கள். அதுகண்ட கொங்கர்கோன் அவர்களுள் ஏதேனும் ஒரு கலகத்தையுண்டுபண்ணி, அதனை முன்னிட்டுத் தனது கருத்தை நிறைவேற்றிக்கொள்ள நினைந்தவனாய், கபடத்திலும், வஞ்சனையிலும், மிகத்தேர்ந்த விதவையாகிய பார்ப்பனக் கிழவியொருத்தியை அழைத்து அவளுக்குக் கை நிறையப் பொன்னளித்து, வில்லிபுத்தூரார் மனைக்குச்சென்று அவர் மனைவிக்கும், அவர் தம்பி மனைவிக்கும் கலகமூட்டிக் குடும்பக் கலவரமுண்டாக்க வேண்டுமென்று சொல்ல, அவளும் அப்படியே செய்வதாகச் சொல்லிச் சென்றாள்.

அவள், தான்சொன்னபடியே வில்லிபுத்தூரார் வீட்டுக்குச் சென்று அவர் மனைவியிடத்திலும், அவர் சகோதரர் மனைவியிடத்திலும் உறவு கொண்டு இனிமையாகப்பேசி அவ்விருவரும் தன்னை நல்லவள் என்று நம்பும்படி நடந்து கொண்டே அவர்களுள் ஒருத்திமேல் ஒருத்தியிடம் கோட்சொற்களைக் கூறி உட்பகையை விளைவித்து, அவர்கள் ஒருவரோடொருவர் எதிர்த்துப்பேசிக் கலகஞ் செய்யவும், தம்தம் கணவரை தம் தம் வசமாக்கி நடத்தவும் மூட்டிவிட்டுத் தான் ஒன்றும் அறியாதவள்போல் அவர்களுக்குச் சமாதானம் செய்துவந்தாள். அதனால் மாறுபாடு கொண்ட வில்லிபுத்தூரும், அவர் தம்பியரும் தங்கள் பொருளைப் பாகம் செய்து தருதலை விரும்பி ஆட்கொண்டானிடம் சென்று வேண்டினர். அவன் அவர்களை நோக்கி, 'நீங்களிருவரும் பாரதத்தைப் பாடிவந்தால் உங்கள் வழக்கு ஒழுங்கு செய்யப்படும்' என்று கூறினான். அவர்களும் அதற்கிணங்கிப் பாரதம் பாடினார்' என்பது.

கதைப்பகுப்பின் அளவில் புலவருக்கு ஏக குடும்பத்தின் இடையில் தலைமைபெற்று நடாத்த நற்குணமும் மேம்பாடும் இல்லையென்பது விளங்குகிறது. அவர் தம் சுற்றந்தழுவுவதிலும் முற்றுந்தழுவியது புத்தகங்களையே என்றும், தமது அன்பைக் கல்வியின் பலி பீடத்திற்கு ஒப்புக்கொடுத்தனர் என்றும் கூறலாம். இவ்வித தீர்மானத்திற்குக் காரணம், அபூர்வமானதும், சிலர் கட்டுக்கதையென ஒதுக்கக்கூடியதும், தந்தை அன்பு என்பதிலும், புலவன் அன்பைப் பெரிதாகக் கொள்ளுதலுமான ஒரு கதையே யாகும்.

நான்காவது கதை:— இது வியாபாரப்போக்காக நிலவுவது. அஃதாவது—வில்லிபுத்தூரார், வரபதி ஆட்கொண்டா

னிடம் தமது வறுமையை முன்னிட்டுச் சிறுதொகை கட னாகப் பெற்றிருந்தாரென்றும், அதனைத் திருப்பிக்கொடுக்க இயலாதவராயினரென்றும், அதுகண்ட அரசன் அவரைப் பா ர த ம் பாடித்தந்தால் கடன்தொகையைக் கேட்பதில்லை யென்றுகூற, புலவரும் சம்மதித்துப் பாரதத்தைப்பாடி முடித் தாரென்றும், அரசன் பாரதத்தின் ஒவ்வொருகவிக்கும் இவ் வளவுதான் பொருளென்று பங்கிட வில்லிபுத்தூரார் அரச னது லோபகுணத்திற்கு மனம் வெறுத்துப் பாடியபாரத ஏட் டுப்பிரதியின் பிற்பகுதியைத் அரசன் எதிரே கிழித்தெறிந்து விட்டு, எஞ்சிய பகுதியையே நீ தந்த பெருளுக்கு மிகுதியா னது அதனை எடுத்துக்கொள்ளுதி என்று கூறினரென்றும் வருவது.

இது புலவர்கள் இயல்பாக வறுமையுடையார் என்பதை மனதில் வைத்துக்கொண்டு புனைந்ததுபோலும். எனினும், வில்லிபுத்தூரார் கடனாளி என்றும், கடன் கொடுக்க இயலாத தனால் காவியம்பாடிக் கடன்கழிக்க முயன்றாரென்றும் கூறு வது நியாயமாகாது. கோமகன், குடிகளுக்குக் கடன்தரு வதும், அதிலும் இத்தகைய அரும்புலவர்க்குக் கடனாகத்தரு வதும், தரினும் கடன் மீட்பதில் இவ்வளவு லோபத்தனமா யிருப்பதும் நம்பத்தகுந்தனவல்ல. பாரதம் பிற்பகுதி முடிவு பெறாமைக்குக் காரணங்காட்டுவதற்காக எழுந்த புனைக்கதை யென்றே இதனைக் கூறலாம்.

இவ்வளவே, வில்லிபுத்தூரார் பாரதம் பாடியதுபற்றி வழங்கும் கதைகளாம்.

## பாரதத் தமிழ்மொழிபெயர்ப்பும்-அதன் உயர்வும்.

தேவபாஷையெனவும், சம்ஸ்கிருதம் எனவும் புகழப் படும் வடமொழியில் உயர்தனிக்காவியங்களில் முதன்மையு

டையனவென்றும், ஒப்பற்றனவென்றும், காவியலட்சணங் களெல்லாம் தன்னுள் சிறந்து விளங்கப்பெற்றன வென் றும், மற்றும் நீதித்துறைகள், தர்மோபதேசங்கள், நன்னெறி கள், முதலிய ஞானமார்க்கங்களும்; கல்வி, அறிவு, பொறை நிறைகுணம், கற்பு, அரசு, ஆண்மைபோர், புகழ், சீர், சிறப்பு ஆகிய அருஞ்செயல்களும் நிறையப்பெற்றனவென்றும் கூற ப்படுவன இரண்டு. அவை வான்மீக இராமாயணமும், வியாஸபாரதமுமாம். இவைகளைத்தமிழ் மொழியில் காவிய ரூபமாக மொழிபெயர்த்தும், தமிழகத்தில் பரவச்செய்தும் உபகரிப்பதில், பூர்வீகப்புலவரும், மத்தியகாலத்துப்புலவரும் தங்களது கவனத்தை அநேகமாய்ச் செலுத்திவந்தனர்களெ ன்பது தமிழ் பாஷையின் வரலாறுணர்ந்த அறிஞர்களும் தமிழறிவுபடைத்த பாஷாபிமானிகளும் நன்கறிந்த விஷயம். அநேகமாய் ஒவ்வொருவர் முயற்சியிலும், இம்மொழிபெயர் ப்புக்கள் கேவலமாய், அசம்மதமாய் இராமல், தத்தம் திறமை மிகுதியாலும், நேர்மை நலத்தாலும், முதல்நூலின் முடிபுஒரு ங்கமையச் செம்மைபெறச்சிறந்து மாட்சிமை நிறைந்தொளி ரும் பெருந்திறத்தில் அமைந்துள்ளன. இத்தகைய நன் முயற்சியுடையாராய் விளங்கியவர்களில் தலைசிறந்தாராய் கம் பரையும், வில்லிபுத்தூராரையும் குறிப்பிடுவது மிகையாகாது.

கம்பர் கவிக்கடலும், அருட்கவியும் ஆயினும், குறை குணங்களின் அமைப்பும், காட்சியின் மாட்சிமை நலனும், மனோபாவத்தின் செம்மைத்திறனும், கற்பனைப்பொலிவும், விற்பனவிளைவும், ஆகிய இத்தகைய அருமை பெருமைகளில் வில்லிபுத்தூரார் கம்பரிலும் தாழ்ந்தவரல்லர். ஊன்றியுழைத்த மாணவராகவும், பின்னும் உயர்ந்தோராகவும் பெருமைப் படுத்திக் கூறலாம். இராமாயணம் கான் யாறுபோல நீர்

திரண்டு ஒலியுடைத்தாய், வெள்ளம் பெருகும் புனைசுருட்டுப் பெருந்திரைகள் உடையது; மகாபாரதமோ! அழகிய செய் புனலாய் அமைவுடைத்தாய், மெலப்போந்து வழிந்து று வதாய் நன்னலக்காட்சியுடையது. ஒன்று பளபள வென்று கண்கூசுவதாய், நமது உணர்ச்சியைத் திடுக்கிடச் செய்கின்றது; மற்றொன்று நம்மைக் கவர்ந்து மகிழ்வூட்டுகின்றது. ஒன்றில், அருட்கவி யொருவரது மனவொளி நிறைந்துள்ளது; மற்றொன்றில் பயில்மொழிப்புலவரது தனிமொழிப் பெருந்தன்மை விளங்குகிறது. இரு பெரும்புலவரும் தமிழகத்தரால் முன்மாதிரியாகக் கொள்ளக்கூடிய மொழிபெயர்ப் பாசிரியர்களேயாவர். தமிழிலும், தமிழகத்திலும் வடமொழி வாசகத்தை வியாபகப்படுத்தியவர்களில் கம்பர் தமது அபாரமான வல்லமையை வரப்பிரசாதமாகக் கொண்டிருந்தாரென்னில், வில்லிபுத்தூரர் அதனைப் பயிற்சி மிகுதியின் பயனுகக்கொண்டிருந்தார்.

கவியின் திறமையைப்பற்றிக் கூறுவதெனின், சிரஞ்சீவியாகவிருக்கும் தன்மையைப்பெற்று, பயன்கூடியதாய் நிற்பதும், கேவலம் ஒரு மொழி பெயர்ப்பாகவே இராமல், மகாபாரதத்தின் அற்புதச் சுருக்கமெனப் புகழ்ந்து கூறும் பெருமையும் வாய்த்திருப்பதேயாம். அளவிலும், ஒழுங்கிலும், சிறப்பிலும், முதநூலிலும் சிறந்ததென்பதைக் கூசாமலே கூறலாம். ஒருதனி நூலெனவும் தாராளமாகச் சொல்லலாம்.

## வில்லிபுத்தூராரும்—அவரது நன்றியறிதலும்.

பாரதம் என்னும் இவ்வருங்காப்பியத்தில் ஆசிரியர் வில்லிபுத்தூரர் தம்மை ஈடுபடுத்தித்தமக்கும், தமது நூலுக்கும் அழியாப்புகழ் பெருக்கிய மகோபகாரியான கொங்கர்

கோமானைத் தாம்பாடிய பெருநூலில் இடமறிந்து பொருத்திப் புகழ்ந்து கூற மறந்தாரில்லை. இது நன்றி பாராட்டல் என்னும் உயர்ந்த பெருங்குணமாம். இவ்வழக்கம் நமது நாட்டில், முன்னரேயே புலவர் பெருமக்கள் பலர்வழக்கத்தில் கொண்டிருந்தார்களென்பது, பெருந்தேவனார் பல்லவராயனையும், அருந்தமிழ் மூதாட்டி அவ்வையார் 'பந்தன்' எனப்பெரிய உபகாரியையும், கவிச்சக்கரவர்த்தி கம்பர், திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பவள்ளலையும், 'புகழேந்திப் புலவர் மள்ளுவநாட்டு முரணைநகர்ச் சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசனையும், மண்டலபுருடர் விஜயநகரத்து வேந்தன் ஸ்ரீ கிருஷ்ண தேவராயனையும் தத்தம் நூலில் சிறப்பித்துப் பாடியவாற்றால் தெளிவாம்.

இனி, புலவர் உவமை முகத்தால் கொங்கர் பிரானின் வீரம் வெற்றி, புலவர்மானங்காத்தல், பரிசு கொடுத்தல், யாவருக்கும் இல்லையென்னமல் ஈதல், தமிழ் வளர்த்தல், ஆகிய உயர்குணங்களை உலகமறிந்து வியக்கும்படி செய்த பெருங்குணமும், மறவாக்கடமையும், கற்றோரால் பெரிதும் பாராட்டத்தக்கன. அச்செய்யுட்கள் அடியில் வருமாறு:—

தருமபுத்திரரது சேனையிலுள்ள வீரர்கள் வெற்றிமுன்னிட்ட களிப்பின் மிகுதியால் படைவீடுகளுக்குத் திரும்பி வருதலைக் கொங்கர் பிரானிடம் வெகுமதிபெற்றோர், களித்த சித்தையில் தமது வீடுகளுக்குச் செல்லுதலைக் கூறுகையில்:—

''நாகையாப் புகழான் பெண்ணை நதிவளஞ் சுரக்கு நாடன்
வாகையாற் பொலிதிண் டோளான் மாகதக் கோங்கர் கோமான்
பாகை யாட்கொண்டான் செங்கைப் பரிசுபெற்றவர் நெஞ்சென்ன
ஓகையாற் செருக்கி மீண்டா ருதிட்டிரன் சேனை யுள்ளார்''

16-ஆம் போர் சருக்கம் 90.

எனக்குறிப்பிடுவதும்;

காண்டீபன் துரியோதனன் மகுடத்தை ஒரு பாணத்தால் கீழேதள்ளி வடபுலத்திலுள்ள பசுக்களைக் கவர்ந்து செல்வதைத் தடுத்து அவனை மானபங்கஞ் செய்வதைப் பாகை வேந்தனாகிய கொங்கர்கோன், தான் ஏறிப் போர்க்குச் செல்லுகிற குதிரையின் முன் கால்களால் வடக்குத் திக்கிலுள்ள அரசர் மகுட பங்கப்படுவதை போல என்று:—

"கொடிமதிற் பாகை வேந்தன் கொங்கர்கோன் புரவிக் காலால்
வடதிசை யரசர் தங்கள் மாமணிம குடம்போல
அடலுடை விசய னொற்றை யம்பினால் மீண்டுஞ் சென்று
படவர வுயர்த்த கோவைப் பண்ணினான் மகுடபங்கம்"

என்று கூறுவதும்;

போர்க்களம் நாடிச்செல்லுங் கர்னன் நண்பர், பகைவர் என்ற பேதங் கொள்ளாமல் யாவர்க்கும் தானஞ்செய்து வருவதை ஆட்கொண்டானாகிய கொங்கர்கோன் இரவலர்க்கு ஈயும் கொடை நலத்திற்கு ஒப்பிடுகையில்;—

"கோவழ்சூழ் பெண்ணை நாடன் கொங்கர்கோன் பாகைவேந்தன்
பாவலர் மானங் காத்தான் பங்கையச் செங்கை யென்ன
மேவலரெம ரென்னாமல் வெங்களந் தன்னில் நின்ற
காவலன் கன்னன் கையும் பொழிந்தது கனக மாரி.

கன்னபருவம் 17-ஆம் போர்ச்சருக்கம் 33-ஆம் கவி

எனவிளம்புவதும்;

விஜயனது வீரமிக்க அம்புகளின் கூர்மையால் மேகங்கள் சின்னாபின்னப்பட்டுச் சிதறியொழிந்தற்குப் பாகை வேந்தனாகிய கொங்கர் பூபதியின் முன்னிலையில் நிற்பதற்கு ஆற்றாது அவன் பகைவர் பிரிவுபட்டு ஓடுவதை உவமிக்கையில்:—

சொன்மழை பொழிந்து நாடொறுந் தனது
தோள்வலி துதிக்கு காவலர்க்குப்
பொன்மழை பொழியுங் கொங்கர் பூபதியின்
பொற்பதம் பொருந்தலர் போலக்
கன்மழை பொழியுங் காளமா முகிலுங்
கடவுளர்த் தாரந்தவன் காத்தில்
மின்மழை பொழியக் கற்களுந் துகளாய்
மேனியும் வெளிறி மீண்டனவே"

எனப்புகல்வதும் கவனிக்கத்தக்கன.

இங்ஙனம் புகழ்ந்து கூறுந்தன்மை நன்றிபாராட்டுதலின் பாற்பட்டதென்பது அறிஞர்கள் அறிந்ததோருண்மை. சிலர், இதனை நரஸ்துதி யென்றும், "நரகவன" மென்றும், வீண்வாதாடி வழக்குரைத்துவருகின்றனர். ஒரு நன்றி செய்தாரை உள்ளமட்டும் போற்றி வாழ்தலில் புலவர்கள் உத்தமகுணமுடையார்களென்பதும், வாயால் எப்பொழுதும் புகழ்ந்து கூறக்கூடிய சந்தர்ப்பம் வாய்ப்பது கஷ்டமென்பதும் வரிவடிவில் புகழ்வது எப்பொழுதும் நிலைபெற்று அது வழங்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், சென்று பரவிப் பலர்க்கும் அறிவிக்கும் ஆற்றல் வாய்ந்ததென்பதும், அதனை நன்மக்கள் அறிந்து, அப்பேருபகாரிகளின் அரியசெயல்களை வியந்து பாராட்டுவார்களென்பதும் அறிந்தேபுலவர்கள் தீர்க்க சிந்தனையுடன்செய்த இவ்வருஞ்செயலை, புலவர் நரஸ்துதி யென்று பழிக்கத்துணிந்ததற்கு வருந்துகின்றோம்.

தமிழ்ப்புலமையும், தண்ணளியும், கொடைப்பெருக்கும், பாஷாபிமானமும், தமிழ் வளர்ச்சியுமே பெரிதாகக்கொண்ட இக்கொங்கர்கோன் இல்லாதிருப்பின், தமிழிதிகாசமாகிய பாரதத்தை நாமுணர்ந்து மகிழவும், அதனைப்பாராட்டிப் பிறர்

போற்றவும், நமது சிறுவர், சிறுமியர், அதனைக்கற்று அதில் நிறைந்துள்ள நீதித்துறையின் நெறியறிந்து நடக்கவும், சாந்தகுணமும், தர்மசீலமும் அடையக்கூடுமோ? அம்மட்டோ! அறத்தின் வடிவம் போன்ற தர்மனது நிறைகுணமும் பொறைச்செயலும்; வீமனது மற்றிறமும், தோள்வலியும்; விஜயனது விற்றிறமும், வியக்கத்தக்க வெற்றியும்; நகுலனது ஆராய்ந்த அசுவ பரீட்சையும், மேன்மையும்; சகாதேவனது சாத்திர ஞானமும், கடவுட்போன்பும்; பாஞ்சாலியின் வீரச்செயலும், சாகஸமும்; கண்ணபிரானது திருவிளையாடல்களும், சமயோசித தந்திரங்களும்; நாமறிந்து வியந்து மகிழக்கூடுமோ? இவ்வளவு மகிமையும், சிறப்பும் ஒரு கொங்கர் கோனால் விளைந்ததெனில், அவனது பெருமை எத்தகைய மேம்பட்டதென்னலாம்.

## பாரதமும்.—அதன் சொற்பொருளும்.

பாரதம் என்பதற்கு- "தருமம் தலைகாக்கும்" எனக்கருதிய பாண்டவர் ஐவர்களுக்கும், பொறாமை கொண்ட கௌரவர் நூற்றுவருக்கும், இருந்த தத்தம் நாடுகளைத் திரும்பவுங் கொள்ளுவதன் பொருட்டு நிகழ்ந்த பெரும்போர் என்பது பொருள். மற்றொருவகையில், சந்திரவமிசத்துப் பரம்பரையில் தோன்றிய "பரதன்" என்பவனுடைய மரபிற் பிறந்த மன்னர்களைக் காவியத்தின் தலைவர்களாகக் கொண்டு செய்யப்பட்ட நூல் எனவும் பொருள்படும். இத்தகைய பாரதத்திற்கு "மகா" என்ற அடைமொழி கூட்டி ,,மகாபாரதம்' என்று சிறப்பித்துக்கூறுவது ஆன்றோர் மரபு. "பாரத:பஞ்சமோவேத:" என்றும், நீடாழியுலகத்து மறை நாலொடைந்தென்று நிலைநிற்கவே, வாடாத தவவாய்மை முனிராசன்

மாபாரதஞ் சொன்னநாள்'' எனவும் வழங்கப்பட்டு வருவன காண்பதற்குரியவை. அறிஞர்களும், ஆன்றோர்களும், அஞ்சலி செய்து அங்கீகரித்தற்குரிய ஏற்றம் பெற்றதும் தூய்மை வாய்ந்ததுமான புருஷார்த்தங்களைத் (அடையவேண்டுவது) தன்னுட் சிறக்கக் கொண்டுள்ள சீரிய தன்மை பற்றி, "ஐந்தாம் வேதம்'' என, பாரதத்திற்கு மேலான பொருளை வைத்து வழங்கினர் முன்னோர். பாரதமென்பது – ஒரு "தத்திதாந்த பதம்.'' தத்திதாந்தமாவது–ஒருவடசொல் சிறிது மாறித் தன்பொருளை அல்லது தன்னோடு இயைபு பற்றிய பொருளைக் குறிப்பது. மாருதி, தாஸரதி, சாரஸம், என்பனவும், சைவமும், வைணவமும், உதாரணங்களாம். தமிழில் 'பொன்னன்' என்பது முதலாகப் பொருளாதியாறுமடியாகப் பிறக்கும் குறிப்பு வினைப்பெயர்கள், இத்தத்திதத்தை யொப்பனவாம். வேதம் முதலிய சாஸ்திரங்களின் சாரங்களைத் தன்பாலுடைமையால், பாரதம் எனப்பட்டதென்று வேறு பொருள் கூறுவாறுமுண்டு. பரத சம்பந்தம்பற்றிவந்த தத்திதாந்தமாகக் கொள்ளுதலே தக்கதாகும். பரதன் என்னும் பெயரோடு விளங்கிவர் பலர் சந்திரவமிசத்திலே ,,துஷ்டியந்தன்'' என்னும் சக்கிரவர்த்திக்குச் சகுந்தலை என்பவளிடம் பிறந்து, தானும் சக்கிரவர்த்தியாய் மாட்சிமையடைந்து புகழ் சிறக்க விளங்கிய "பரதன்'' என்பவனே இங்கு அங்கீகரிப்பதற்கு உரியவன்.

இது வேதங்களின் மறைபொருள்களையும், எண்ணிலவாகிய புண்ணியக் கதைகளையும், ஆங்காங்கு தன்னுட்கொண்டு, தவத்தாலுயர்ந்த மேலோராகிய வியாஸ முனிவர் பலமாணவர்களுக்கு உபதேசித்தது. அம்முனிவரே பின்னர் யாவருக்கும் பயன்படுமாறு ஏட்டிலே எழுதி நிலைநிறுத்தல்

வேண்டுமென்று கருதி இருக்கும்போது "இதனை எழுதுவ தற்கு வல்லுநராகிய எழுத்தாளர் விநாயகக்கடவுளன்றி வேறில்லை" என்பதைப் பிரமதேவரால் அறிந்து அவ் விநாயகக் கடவுளைப் பிரார்த்தித்து இதனை எழுதுவித்தார்.

"ஏடாக மாமேரு வெற்பாக வங்கூ ரெழுத் தாணிதங்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ"

என்பதும் இவ்வாலாற்றினைப் புலப்படுத்தும்.

இதிகாசங்கள் எல்லாவற்றுள்ளும் இதுவே சிறந்தது. இதிகாஸமாவது தருமம், அர்த்தம், காமம், மோட்சம் என்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும், பழங்கதைகளோடு சேர்த்தறிவிக்கும் சாத்திரம். பாரம் பரியமான உபதேசம் அமைந்திருத்தல் இதிகாஸம் எனப்பட்டது. இதிஹ + ஆசம் = இதிகாசம் எனத்தீர்க்க சந்தியாயிற்று. இதிஹம் = பாரம்பரியோபதேசம். ஆசம் = இருப்பது. இதிகாசம் எனப்படுவது-பாரதம், இராமாயணம் என்னும் இரண்டுமாம். சைமினி முனிவரும், "நானாவித சாஸ்திரங்களாலும், குற்ற மற்ற சொற்களாலும், கோதற்ற பொருள்களாலும், பூர்வ பக்க சித்தாந்த வாக்கியக் கோவைகளாலும், பிறவற்றாலும் சிறந்து விளங்குவது பாரதம்" என்றார். இது வேதப்பொருள்களால் அலங்கரிக்கப்பட்டு விளங்குதலால், "வேதசம்மதம்" என்றும், "ஐந்தாம் வேதமென்றும்" புகழப்படுகின்ற மேன்மையுமுடையது. அறம், பொருள் முதலியவைகளைத் திறம்பட விளக்குஞ் சிறப்புமுடையது. சகல சாஸ்திரங்களுக்கு உபப்பிருங்கணம் எனப்படும் உயர்ச்சியுமுடையது. உபப்பிருங்கணம் = முதனூற் பொருள்களை யாவருக்கும் விளங்கும்படி வேண்டுஞ் சொற்பெய்து விரித்துரைக்கும்

வாக்கியம். படிப்போர் பாவங்களைப் போக்குதலோடு அவர்க்குப் புண்ணியங்களையும் இனிதளிக்கும் இயல்புடையது. சுகர், மனு முதலிய முனிவர்களாலும், தேவர்களாலும், காந்தருவராலும், வேறுபலராலும் விரும்பிப்படிக்கப் பட்ட மேன்மையுமுடையது.

"முன்னு மாமறை முனிவருந் தேவரும் பிறரும்
பன்னுமா மொழிப் பாரதம் பெருமையும் பாரேன்"

என்றது இப்பொருள் நோக்கி என்க.

இத்துணைப் பெருஞ் சிறப்புடைமைபற்றி மஹா என்னும் விசேடணம் முன்வைக்கப்பட்டு மகாபாரதம் என்று யாவராலும் வழங்கப்படுவதற்காயிற்று. "ஜயோ நாம இதிகாசம்" என்றும் வியாசமுனிவர் கூறினர். ஜயோ நாம இதிகாஸம் = ஜயம் * என்னும் பெயருடைய இதிகாசம். மச்சம் கூர்மம், மார்க்கண்டேயம் முதலிய புராணங்களிலும் இவ்வாலாறு கூறப்பட்டிருக்கின்றது. மார்க்கண்டேய புராணத்திலே பாஞ்சாலி ஒருத்தி, பாண்டவர் ஐவருக்கும் பாரியாய் வந்ததற்கும், பாஞ்சாலியின் புத்திரர்களாகிய பாண்டவர் ஐவரும், இளம்பருவத்திற்றுனே இவ்வுலகந்துறந்து போனதற்கும் காரணம் கூறப்பட்டிருக்கின்றது.

மகாபாரதம்—இது இரண்டுசொல் ஒரு தொடராகி வந்தது; அல்வழிப் பண்புத்தொகை நிலைத்தொடர்; மகத்தாகிய பாரதம் என விரியும். மஹா-பாரதம் என்பன இரண்டும் வடசொற்களாதலால், "இடையுரி வடசொலி னியம்பிய

---

* ஜயம் என்பதற்கு—அறம், பொருள், இன்பம், வீடு என்றும் நால் வகைப் பேறுகளை அடையப் பெருவதற்குக் காரணமாகும் நூல் ஜயம் எனப்பொருள் பெறும். இது வடமொழி நிகண்டு.

கொள்ளாதவும்'' என்ற புறனடை சூத்திரப்படி இயல்பாய்ப் புணர்ந்தது. வடமொழியில் ஸ்ரீ வேதவியாசர் செய்தருளிய இதிகாசத்துக்கு அமைந்த “மஹாபாரதம்” என்ற பெயரையே, வில்லிபுத்தூரார், தாம் இயற்றிய இந்நூலுக்கும் பெயராக்கொண்டது, “முதநூல் கருத்தனளவு மிகுதி, பொருள் செய்வித்தோன் றன்மை முதனிமித்தினும் இடுகுறியானு நூற்கெய்தும் பெயரே” என்னும் சூத்திர விதியைத் தழுவியென்க.

இதுகாறுங் கூறியவாற்றால், பாரதத்தின் பெயர்ப் பொருளும், அதன் இலக்கணமும், சிறப்பும், பயனும் ஒருவாறு உணர்தற்காயின.

## பெருங்காப்பியமும்—அதன் முறையும்.

பாரதம்-இதிகாஸம், புராணம், காப்பியம் என்னும் மூவகை நூல்களுள், இதிகாஸத்தின் மேற்சென்ற ஒரு பெருங்காப்பியமாம். இதிகாஸம் லௌகிக, வைதிக கர்மங்களைக் கூறுவதாய், இடையிடையே கிளைக்கதைகளைக் கொண்டு உத்தம குணங்களுடைய தலைவன் வரலாற்றை விரித்துரைக்கும் நூல். இதற்குச் சான்று—இராமயண பாரதங்கள். புரணமாவது, உலகின் படைப்பு முதலியவற்றையும் மநுவின் முடிவு, அரசர், முனிவர், அரசர் வமிசம், அவரது சரிதம் ஆகிய இவற்றையுங் கூறி சர்க்கம் அத்தியாயம் முதலிய பிரிவுகளைக் கொண்டியலும் நூல், இதற்கு உதாரணம் பிரமபுராணம், பத்மபுராணம் முதலிய பதினெண் புராணங்களுமாம். காப்பியமாவது—வாழ்த்து, வணக்கம், தலைமைப் பொருளுரைத்தல், இம் மூன்றனுள் ஒன்றை முதலிற்பெற்று

தன்னிகரில்லாத் தலைவனையுடைத்தாய், நாடு, நகரம், மலை, கடல், பருவம், சூரிய சந்திரர் தோற்றம், மறைவு, மணம், முடிசூடல், பொழில் விளையாட்டு, மதுபானம், கலவியிற் களித்தல், புலவியிற் புலத்தல், மக்கட்பேறு, மந்திரம், தூது, போர், வெற்றி முதலிய பல வருணனைகள் உள்ளதாய், சர்க்கம், இலம்பகம், பரிச்சேதம் முதலான பிரிவுகளைக் கொண்டு செவிக்கினிய ஒரு திறச் செய்யுளாலேனும், பல திறப்பாவினாலேனும், கட்டுரையினாலேனும் அமைக்கப்பட்டு, மெய்ப்பாடும், சுவையுந்தோன்ற விளங்கு நூலாம். இத்தகைய காப்பியம் உத்தமகாப்பியம், மத்திமகாப்பியம், அதமகாப்பியம், என மூவகைப்படும். தொனிப்பொருளைத் தலைமையாகவுடையது உத்தமகாப்பியம், தொனிப்பொருள் தலையின்றி வருவது மத்திமகாப்பியம், தொனிப்பொருளில்லாதது அதமகாப்பியமாம். பாரதம் பெருங்காப்பியம் என்க.

இப் பெருங்காப்பியக் கதைகள், கதையின் அமைப்பினால் இரண்டு வகையாக எழுதப்படுவதுண்டு. தலைவன், தலைவியர், பலவகையான இடரில் மூழ்கி, இறுதியில் நன்னிலையெய்துவது ஒருவகை. தலைவன், உயர்ந்த நிலையிலிருந்து தன்னடைகோணித் தாழ்மையை அடைவது, மற்றொருவகை ஆகும். இளகிய மனத்தினராகிய இந்தியர், துன்பத்தை விளக்கும் இரண்டாவது வகைக் கதையில் அதிகமாய் ஈடுபடுவதில்லை. ஆகையால், நமது கதைகள் யாவும் மனத்திற்கு மகிழ்ச்சியையே விளைவிப்பனவாயிருக்கின்றன. பாரதக் கதைக்குத் தலைவராய் விளங்கும் பாண்டவர் ஐவரும், அவ்வாறே பற்பல இன்னல்களை அடைந்து, தங்கள் கைவன்மையாலும், தலையாற்றலாலும், இடையூறுகளை யெல்லாம்

விலக்கி இன்பப்பேற்றை அடைகின்றனர். எனினும், இதில் இரண்டாவது வகைக் கதையும், பிணைக்கப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். கௌரவர்கள் நல்ல நிலைமையிலிருந்தும், தங்கள் மனத்தே நினைந்து செய்யும் கொடுமையால், தங்கள் நிலை மாறப்பெற்று, கண்டார் இகழத் தங்கள் குலத்தை நிர்மூலப்படுத்தி, இம்மையில் சொல்லொணாத் துயரமே அடைந்தனர். ஆகவே, கதையின் அமைப்பு, வடமொழியில் இயற்றியருளிய வியாசனாரது திறமையை வெளிப்படுத்துகிறது.

வடமொழியில் உள்ளதொரு கதையை, தமிழில் இயற்ற முற்பட்ட ஆசிரியர் வில்லிபுத்தூரார், வடமொழிக் காவியத்தின் சுவைக்குச் சிறிதும், பின்வாங்காமல் முதல்நூல் போல் விளங்குமாறு அழகுபெறப் பாடியிருக்கின்றனர். இராமயணத்திற்கு எவ்வாற்றாலும் பின் வாங்காத பாரதக் கதையின் பண்பும், கவியழகும், திருந்திய முறையும், சொன்னோக்கும். பொருளமைதியும், தமிழறிந்தார் சுவைத்தின்புறக் கூடிய தகுதி வாய்ந்தன. அவற்றை இதன்கீழ் சுருங்கக் கூறுகின்றோம்:

நாம், வில்லிபுத்தூரரது பாரதம், முதலாவது ஆதி பருவம் குரு குலச் சருக்கத்தை வாசிக்கும்போதே வில்லியாரின் கவியின் திறத்தைக் காண்கின்றோம். பழைய நூல்களைப்போல் நாட்டுப்படலம், நகரப்படலம், என்று ஆரம்பிக்காமல், யாதொரு முன்னுரையும் கூறாமல், தொடக்கத்திலேயே கவி, நூலினுள் நுழைந்திருக்கின்றனர். பாரதக்கதையைப்பாகுபடுத்தி வில்லியார் விளம்பும் விதம் கொண்டாடக் கூடியதே. பதினெண் பருவங்கள் அடங்கிய பெரிய சரி

தையை வழக்கம்போல், நாட்டுப்படலம், நகரப்படலம் என்று ஆரம்பித்தால், தாம் எடுத்துக்கொண்ட தமிழ்த் தொண்டு விரைவில் முற்றுப்பெறாது என்று நுனித்தறிந்த நமது பாவலர், அவ்வழக்கத்தை நீக்கி, வாலாற்றை விளக்கத் தொடங்கியிருக்கின்றனர். அதனுடன் சுருங்கச் சொல்வதே அழகினுட் சிறந்த அழகென்பதை ஆய்ந்துணர்ந்து, சரிதையைச் சுருக்கத்திரட்டாகச்சொல்லப் புகுந்தது மிகவும் பாராட்டத் தக்கது. முதற் சருக்கம் முப்பது, முப்பத்தைந்து செய்யுட்களை நாம் படித்து முடிக்கு முன்னரே கதையினுள் நுழைந்து, அதன் இனிமையில் அமிழ்ந்து விடுகின்றோம். பண்டைய பாவாணர்க்கெல்லாம் சரிதத்தைச் சுருக்கிச்சொல்வதில் இம்மியும் விருப்பமில்லை. இயம்புதற்கு எடுத்துக் கொண்ட விஷயத்தை வீண் வருணனைகளைக் கொண்டும், வேற்றுப்பொருள் வைப்பணிகளைக் கொண்டும், இல்பொருளுவமைகளை வலுவில் அமைத்தும், எவ்வளவுக்கெவ்வளவு பெருக்குகின்றார்களோ, அவ்வளவுக்கவ்வளவு பெரியாரென்பது அவர்கள் கொள்கையாய் இருந்து வந்தது. வித்வ சிரேஷ்டர் வில்லியார், அவ்வழியை ஒழித்துத் தமது எண்ணம்போல் வாலாற்று நிகழ்ச்சியை மட்டும் விளக்கிச் சென்றது அவருடைய துணிவையும், அறிவின் கூர்மையையும் விளக்குகிறது. அங்ஙனம் செய்தியை விளம்புவதிலேயே தமது கவனத்தைச் செலுத்தியிருந்ததனால், தமது காவியத்தினிடை மிகுதியான வருணனைகளைக் கூற இடமில்லாமற் போயிற்று.

இவ்வாறு புதிய முறையில் நூல் சமைப்பதில் நுண்ணறிவுடையார் என்று கருதியே, வில்லியாரைப் பிற்காலத்

துப் புலவர்கள் காவியம் பாடவல்ல புலவர் பெருமக்கள் பலரிருப்பினும், கம்பர்பெருமான் ஒருவரைத்தவிர, எஞ்சிய புலவர்களில் வில்லிபுத்தூராரோடு ஒப்பிட்டு உரைக்கச் சிறப்புடையார் யாருமேயில்லை என்றும், தமிழ் நூல்கள் அனைத்தினும், உத்தரவேதம் எனப்படும், திருவள்ளுவனார் "திருக்குறள்" சிறந்ததுபோல், பிற்காலத்துப் புலமை வல்லோர்களில், தலை சிறந்தாராய் விளங்குபவர் வில்லிபுத்தூராரும்; அவரது பாரத நூலுமே எனக்கூறுவது மிகையாகாதென்றும், இவரது செய்யுட்களின் நயமும், சொல்லின்பமும், சந்த நலமும், போர் வருணனையும், வேறு எப்புலவர்களிடத்தும் காண்பதரிது என்றும் வியந்தோதினர்போலும்.

கம்பராமாயணம், வான்மீகியார் வடமொழி நூலின் கதையைமட்டும் தழுவியுள்ளது; வில்லியார் பாரதம், வியாதனார் வடமொழிக் கதையையும், அச்சொற்களையும் உட்கொண்டது; கி, பி, 15 ஆம் நூற்றாண்டு தொடங்கி, தமிழ்ப் பெருங் காப்பியத்தின் உயர்வு குன்றத்தொடங்கியது; எனினும், சொன்னயமுணர்த்தும் கற்பனைகள் மிகுந்தன. தமிழ்ப் பாரதம் வடநாட்டுக் கதையைத் தழுவியதோடு, ஒரு கதையைக் காப்பியமுழுவதினும் கூறும் முறை இவைகளோடு குறைந்தொழிந்தது என்று இக்காலத்து அறிஞரும், ஆராய்ச்சியாளரும் அபிப்பிராயப்படுகின்றனர்.

## வில்லி பாரதமும்—அதன் முதல் நூல்களும்

தொன்மை நிரம்பிய தென்மொழி வடமொழியாகிய இருமொழிகளிலும் நிரம்பிய புலமை பெற்று, பெருங்காப்பியம் இசைக்கவல்ல பேராண்மை சிறந்த வில்லிபுத்தூரார்,

தாம் புனைவதற்கு எடுத்துக்கொண்ட வழி நூலாகிய பாரத காவியத்திற்குத் தமது காலத்தில் விளங்கிய வடமொழி வியாச பாரதம்; அகத்தியபட்டர் பாலபாரதம்; தமிழ்ப் பெருந்தேவனார் பாரதம் முதலியவற்றை முதல் நூல்களாகக் கொண்டு, அவற்றின் சொல், பொருள், கருத்துக்களையும் தழுவி, தமது கருத்தையும் புகுத்தி, அழகுபெறப் பாடியுள்ளாரென்பது யாவரும் அறிந்ததே. இது "முன்னோர் மொழி பொருளேயன்றி, அவர் மொழியும் பொன்னேபோற் போற்றுவம்" என்ற முறையைப் பின்பற்றியதாம், அன்றியும், கவிப்பெருமான் கம்பர், தாம் பாடத்தொடங்கிய இராமாயணத்திற்கு, வான்மீகியாரது வடமொழி நூலைத் தமக்கு முதல் நூலாகக்கொண்டு, அதனை விளக்கும்வாயில்,

"தேவபாடையி னிக்கதை செய்தவர்
மூவரானவர் தம்முளும் முந்திய
நாவினா ருரையின் படிநான் தமிழ்ப்
பாவினா லிஃதுணர்த்திய பண்பரோ"

என்று விவரித்ததுபோல், நமது பாவலர் வில்லியாரும்,

"கன்ன பாகமெய் களிப்பதோ ரளப்பிறுல் கதைமுன்
சொன்ன பாவலன் றுகளறு சுகன்றிருத் தாதை
யன்ன பாரதந் தனையோ ரறிவிலே னுரைப்பது"

எனவும்,

"மண்ணி லாரண நிகரென வியாதனார் வகுத்த
எண்ணி லாநெடுங் காதையை யானறிந் தியம்பல்"

எனவும், தமது பாரத நூலில் விவரித்துள்ளார்.

இவையே யன்றி, தமது காப்பியத்தில் ஆங்காங்கு வியாதனார் முதல்நூலைப்பெரும்பாகம் பின்பற்றி யுள்ளாரென்

ன்பது அப்பாரதப் பாடல்களை ஆராய்வார்க்குத் தெற்றெனப் புலனும். உதாரணத்திற்கு இரண்டுபாடல்களைமட்டும் காட்டி மேற்செல்வாம். அவை:—

வியாசபாரதம், 27-ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளதும், ஏனைய பாரத நூல்களிற் காணப்படாததுமாகிய வசுவின் கதையைச் சுருக்கித் தமது பாரதம் குருகுலச் சருக்கம் 104 -ஆம் கவியில்,

"வாசவ னளித்த விமானமீ தொருவன்
வசுவெனுஞ் சேதிமா மரபோன்
கேசரி னெனப்போம் விசும்பிடை மனையாள்
கிரிகையை நினைந்துடல் கெழுமி
நேசமோ டிதய முருகுமக் கணத்தி
னினைவற விழுந்தவீ ரியமெய்த்
தேசவ னளித்த நதியிடைத் தாளத்
திரளெனச் சிந்திய தொருபால்" *

என்பதொன்று.

"குன்றெனக் குவிந்திலங்கு கொற்றவாகு வீரனே
அன்றெனக்கு நீயிசைந்த வவனிபாதி யமையுமற்
றின்றுனக்கு நின்றபாதி யான் வரைந்து தருகுவன்
உன்றனக்கு வேண்டுமென்ன வுயிரும் வாழ்வு முதவினுன்"

வாரணாவதச் சருக்கம் 82.

என்பது மற்றொன்று.

---

* சேதி-சேதி தேசத்தரசன்; கிரிகை-வசுராசன் மனைவி, கேசரன்-விஞ்சையன்; வீரியம்-சுக்கிலம், தேசவனளித்த நதி-சூரியன் பெற்ற யமுனையாகிய காளிந்திநதி. தாளம்-முத்து.

இவற்றால், இவர் வியாசனார் முதல் நூலைப்பின்பற்றியுள்ளாரென்பது உறுதிப்படுகிறது.

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடர் தம், இராமாயணப் பெருங் காப்பியத்திற்கு வான்மீகி முனிவர் அருளிய வடமொழி இராமயணத்தையே முதல் நூலாகக் கொண்டும், சிற்சில இடங்களில் வடமொழியிலுள்ள வேறு இராமாயணக் கதை கூறும் காவியங்களின் கருத்துக்களையும், தகுதிக்கேற்பத் தழுவித் தம் காப்பியத்தை இயற்றியவாறு போல், நம் கவியரசர் வில்லியார் பெரும்பான்மையும், வியாசபாரதத்தைத் தழுவித் தமது நூலை இயற்றியிருப்பினும், வடமொழியிலே அகத்திய பட்டர் என்பார், இயற்றிய பாலபாரதத்தின் கருத்துக்களையும், ஆங்காங்கு அமைத்து வைத்திருக்கின்றார். சிற்சில இடங்களில், நம் பாவலர் கூறுவது, பாலபாரதத்தின் மொழி பெயர்ப்புத்தானோ என்பதாகவும், தோன்றத்தக்கதாக இருக்கும். அவற்றிற் சில வருமாறு:—

நூலின் தொடக்கத்தில் சந்திரனைக் கூறுமிடத்து பாலபாரதம்:— அத்ரிநேத்ரப்ரவ:

வில்லிபாரதம்:—அத்திரிப் பெயரந்தண னம்பகந்தனில்
..............பிறந்தொளி சிறந்தோன்.

பாலபாரதம்:—நக்ஷத்ரகணஸ்யநாத:

வில்லிபாரதம்:—பொருந்தவானுறை நாள்களை நாடொறும் புணர்வோன்.

பாலபாரதம்:—ஸம்பாவநீயச் சிரஸா சிவேந.

வில்லிபாரதம்:—திருந்த வானவர்க் கரியவன் செஞ்சடைமுடிமே லிருந்தவானவன்,

இனி, வில்லிபுத்தூரார், வடமொழிப் பாரத நூல்களின் கதைப்போக்கையும், கருத்துக்களையும் தழுவியதே யன்றி, தம் காலத்து வழங்கி வந்ததும், பெருந்தேவனார் என்னும், பெரும் புலவரால் பாட்டும், உரையும், கலந்த "சம்பு" என்னும் நடையில் எழுதப்பட்டதுமாகிய பாரத வெண்பாவிற் கண்ட சிறந்த கருத்துக்களையும் தழுவிக்கொண்டாரென்பது பின்வரும் சான்றுக்களால் புலனும்.

"போரின்றிச் சமாதானத்தின் மூலமாக அரசுரிமை கிடைத்தால், அதனைப்பெற்றுக் கொண்டு வாழ விருப்பமா? அல்லது முன்பு பன்னீராண்டு வாசஞ் செய்து பழகிய கொடிய வனத்திற்கே மீண்டும் சென்று, ஆயுள்காறும் அங்கு இன்பமின்றி, வறுமைத் துன்பத்துடனே வசிக்க இட்டமா? இன்றேல், மானத்தையும், வீரத்தையும் பிரதான மாகக்கொண்டு, துணிவாகச் சென்று, துரியோதனனுடியரை எதிர்த்துப் போர் புரிந்து இராச்சியத்தைப்பெற ஆசையா? உங்கள் உள்ளக் கருத்தைத் தெள்ளத் தெளியச் சொல்லுங்கள்" என்று கண்ணபிரான் பாண்டவர்களை நோக்கி வினவினர் என்னும் கருத்தைப் பெருந்தேவனார்,

> "போர் வீரர் தம்மோடும் போந்தரசு கொள்வீரோ
> பார்வீரரென்று பரசியக்கால்—ஓர் வீர் நீர்
> உய்வீராய் முன்னடைந்த வெங்கானம் போவீரோ
> ஐவீரும் சொல்வீ ரமர்ந்து"

எனத்தமது பாரதவெண்பாவிற் பாடியதை, வில்லியார் தமது பாரதத்தில்:—

> "செய்வரா வினமுகளுந் திருநாடுபெற
> கினைவோசென்று மீளப்
> பைவரா யருங்கானிற் பயின்றுதிரி
> தாகினைவோ பகைத்த போரி

லுய்வரா ரெனவிரைவி னுருத்தெழுந்து
பொரகினேவோ வுண்மை யாக
வைவரா மவனிபர்க்கு கினேவேதென்
றருள்புரிந்தா னமரர் கோமான்"

கிருட்டினன் தூது சருக்கம் 5.

எனச்சீர் செய்து கொண்டார்.

"கார்தோற்றுப் போகத் தொடுக்குங் காத்தானே
பார்வேண்டிற் பாம்புயர்த்தோன் தான்மறுத்தால்-ஊர்வேண்டில்
ஆங்கவையுந் தான்மறுத்தா லைந்துமனே தான்வேண்டிப்
பாங்குடன்நீ போதாய் பரிந்து." பாரத வெண்பா.

"மன்னவர்க ளெல்லாருந் தாமறியப் பார்வேண்டி
அன்னவனு மைந்தின் மறுத்தானேல்—பின்னேப்
பொருபடக் கைமாலே நீ போர்வேண்டிப் போதாய்
அரவுயர்த்தோன் தன்பா லகன்று."

பாரத வெண்பா.

எனவரும் வெண்பாக்களின் அடிகளை யொற்றி,

"மூந்தூர்வெம் பணிக்கொடியோன்மூதூரி
னடந்துழவர் மூன்றி றேறு
நந்தூரும் புனனுட்டின் றிறம்வேண்டு
நாடொன்று நல்காணுகி
லைந்தூர்வேண் டவையிலெனி லைந்திலம்வேண்
டவைமறுத்தா லடுபோர்வேண்டு
சிந்தூரத் திலகநுதற் சிந்தூரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே"

கிருட்டினன் தூது சருக்கம் 11.

என்று வில்லிபுத்தூரார் தமது நூலில் செப்பஞ் செய்து கொண்டார்.

இச்செய்புளின் பொருள்:— "துரியோதனன் நமது இராச்சியத்தைக் கேட்குமிடத்துக் கொடுக்கச் சம்மதிக்கானாகில், எங்கள் ஐவர்க்கும் இனத்திற்கு ஓர் ஊராக ஐந்து இல்லத்தையாவது கேட்குதிர்; இங்ஙனம் எங்கள் பொருட்டு நிவிர்தானே நேரிற் சென்று, தாழ்ந்து, யாம் கூறியவாறு இடங்கேட்கவும், அவன் ஐந்து வீடுதானும் கொடேன் என்றால், அப்பொழுது நாம் போர் செய்யக்கடவோம் என்று முடிவுகூறி வருகுதிர்" என்பதாம்.

"ஆற்றுவரேல் தோள்வலியாற் கொள்வதுவும் ஆற்றோரால்
தோற்பதுவும் வேந்தர்க்குச் சொல்லியதே—மேல்தாரோர்
மன்னவரை மன்னவர்கள் மண்ணிரந்தா ரில்லைகாண்
என்னவரா சாள்கை யிது"

என்னும் பாரத வெண்பாவில் கருத்தைத் தழுவி,

"அணிந்துவருஞ் சமரிலெதிர்ந் தாவுயர்த்தோ
னுடனரச ருடல மெல்லாந்
துணிந்திரண்டு படப்பொருது தொல்லையுல
காசாளத் துணிவதல்லாற்
றணிந்தறமுங் கிளையுறவுங் கொண்டாடித்
தானின்னந் தனித்துதேவிப்
பணிந்திரந்து புவிபெற்றுண் டிருப்பதற்கே
துணிகின்றான் பட்ட பாடே"

கிருட்டினன் தூது சருக்கம் 16.

என்று வில்லிபுத்தூரார் சீர்செய்து கொண்டார்.

மேற்காட்டிய செய்யுளின் பொருள்:— "போர் செய்து பகையழித்து வென்று அரசுபெற்று புகழுடன் வாழ்தல்

எளிதாயிருக்க, தாழ்ந்திரந்து, அரசுரிமையடைந்து, மான மின்றி உயிர்வாழக் கருதுதல் மிகுதியான பழிப்புக்கு இடமாகும்'' என்பதாம்.

இவைபோன்று வரும் கவிகள் பலவாம். விரிவஞ்சி விடப்பட்டன.

ஆகவே, மேற்கூறிய மூன்று ஆசிரியர் கூற்றுக்களி லும், சிறந்தவற்றைத் தேர்ந்து வில்லியார், தமது நூலில் ஆங்காங்கு போற்றிக் கொள்ளுகிறார். அவை மூன்றும் இதற்கு முதல் நூல்களாயின.

வில்லியார் பாரதத்திற்கும், இதற்கு முதல் நூலாகிய வியாச பாரத்திற்கும், இடையிடையே கதையமைதிகள் சிற் சில வேறுபடுவது,

''முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி
அழியாமரபினது வழி நூலாகும்''

என்ற வழிநூலின் இலக்கண விதிப்படி வில்லிபுத்தூரரால் பிறநூல் மேற்கோள்கொண்டு அமைக்கப்பட்டதாதல் வேண்டும் என அறிக.

## பாரதமும்—அதன் பாராட்டுதலும்.

விளங்கு புகழ்நிறைந்த வில்லிபுத்தூரர் பாரதத்தைத் தமிழறிமாணவர்களும், தண்டமிழ் வாணர்களும், விரும்பிக் கற்பதற்குரிய காரணம் யாதென ஆராயின், வில்லியாரது இனிய செய்யுட்கள், படிப்போர் யாவரேயாயினும், அவர்

களாது செவிக்கு இன்பம் பயக்குஞ் செஞ்சொற் கவிகளாய்; சொற் சுருக்கமும், பொருட்பெருக்கமும் உடையானவாய்; கற்பனை அலங்காரக் கருவூலமாய்; பெருங்காப்பியத்திற்கு வேண்டிய இலக்கணங்கள் தழுவிதாய்; பொருளுக்கேற்ற சொல்லும், விருத்தமும் உடையனவாய்; சிந்தாமணி முதலிய காப்பிய நடையைத் தழுவாது, ஒருவாறு கம்பர் செய்யுட்களையும், கருத்துக்களையும் தழுவி, இன்னோசையும், முடுகிய நடையுங்கொண்டு, பல காப்பியங்களினும், வெவ்வேறு வகையாய விருத்தங்களை மிகுதியும் பெற்று, கடின நடையின்றி எளிய நடையபின்று திகழ்வதனுலென்பது தெளியப்படும். மற்றும், பாரதகாப்பியத்துள், பல்வேறு விஷயங்களைப்பற்றி வருணித்துள்ள பாகங்கள், படிப்போர் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு பாகுபடுத்தி இனிமைபெற விவரித்திருப்பதும்; போர்ச் செய்திகளை விளக்கு இடமெல்லாம், படிப்போர் நேரிலிருந்து பார்ப்பது போலவும், தாமே போர்செய்வது போலவும், அவ்வளவு சமத்காரமாய், அதற்கேற்ற சொற் சந்தங்களை வீரச்சுவை விரிட்டுத் ததும்பப் பெய்து, கற்போர் காமுறுமாறு காட்டப் பட்டிருப்பதும், அதன் உயர்வுக்கு உரியகாரணமாம் எனக் கூறுவது மிகையாகாது.

இவற்றால், பாரதம் யாவராலும் பாராட்டிப் படிப்பதற்குரிய ஏற்றம்பெற்ற இனிய நூலாக இயங்குவதாயிற்று.

## பாரதப்பாடலின் தொகையும்-பருவங்கள் பத்தும்.

தீம்பாலும், தெள்ளமுதும், தீஞ்சுவைக் கனிரசமும் தெவிட்டும் என்னும்படி செம்பாக மமைந்து, செந்தமிழ்க் கவி

மழையாகியபாரதப் பாடல்களைச் சந்தவின்பம் நிறைந்து, பொருணயம் சிறந்து விளங்குமாறு, ஆறாயிரம் செய்யுட்களில், வில்லியார் பாடினார் எனத் தமிழகத்தில் புலவர்கள் வாயிலும், கன்னபரம்பரையிலும் வழங்கப் பெற்றுவருகிறது. இதற்குச் சான்றாக:—

"கலியுக வியாதன் சொல்லக் கணபதி யெழுது பாடல்
பொலிவுறு தமிழி னாறாயிரமென விருத்தம் போற்றிச்,
சலிவற வில்லிபுத்தூ ரிறைவனும் சார்வ பூமன்
ஒலிகெழு மறையோர் கோமானுயர்ந்தவ ருவப்பச்சொன்னான்"

என்னும் பழம்பாடலொன்றும் காணப்படுகிறது. இப்பாடல், "பாரத ஆதிபருவத்தந்தாதி" என்னும் ஏட்டுப்பிரதியில் உள்ளது. இதனால், வில்லிபுத்தூரார் ஒருவரே, ஆறாயிரம் பாடல்களையும் பாடினாரென்று அறியப்படுகிறது. யாழ்ப்பாணம், மாபெரும்புலவர், ஆறுமுக நாவலரவர்கள், தாம் பதிப்பித்த தமிழ்ப்பாரதத்துள் 4,351 பாடல்கள் மட்டும் காணப்படுகின்றன. எஞ்சிய 1,649- செய்யுள்கள் அச்சுக்கூட வாயிலாக இன்னும் வெளிப்படவில்லை. ஏட்டுப்பிரதி எங்குளதோ! அதுவும் அறியுமாறில்லை. ஒரு சிலர், வில்லியார் புதல்வர் "வருந்தருவார் என்பார், மகாபாரதத்தின் பிற்பகுதியைத் தமிழ்க் கவிகளாகப் பாடியுள்ளாரென்றும், அது, "வரந்தருவார் பாரதம்" என்று வழங்கப்படுகிறதென்றும் கூறுகின்றனர்.

வேறு சிலர், ஆதிபருவத்தில் "சந்தனு" என்னும் பெருவேந்தன் வரலாறு முதல், சௌப்திக பருவத்தில் பதினெட்டாம் நாளிரவில் நிகழ்ந்த போர்வரையிலுள்ள செந்தமிழ்

விருத்தப்பாவினங்களை அச்சேற்றி வழங்கிவருவது தான் "வில்லிபாரதம்" என்றும், இவ்வுண்மைக்கு உதாரணங்கள்— அரங்கநாதக் கவிராயரது பாரதப் பிற்பாதியில்,

"பைந்தமிழி னலஞ்சிறந்த மூனைப்பாடித்
திருநாட்டிற் பாகைவேந்தன்
சுந்தரஞ்சேர் பாரதமாம் வடகலையைத்
தென்கலையாற் சொல்கவென்னச்
சந்தனுவின் சரிதைமுதற் பதினெட்டா
நாட்போரின் சரிதங்காறும்
புந்திமகிழ் தாவில்லி புத்தூராழ்வான்
மூன்பு புகன்றிட் டானே"

என்றுள்ள செய்யுளும்; வில்லிபாரதம் சௌப்திக பருவம் 18-ஆம் போர்ச்சருக்கம் "விளையகற்றும்" என்னும் முதலடி யுடைய 250-ஆம் பாடலுமா மென்றும் புகலுகின்றனர்.

மற்றுஞ் சிலர், பாரதத்தின் பிற்பாதியை, வில்லியார் பாடாததற்குக் காரணம், ஆசிரியர் நூலைப்பாடி முடிப்பதன் முன், மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தினர் எனவும்; இறுதிப் பருவங்கள் மரணச் செய்தியை மிகுதியாயுடைதாய் கற்போர் கேட்போர்கட்குத் துன்பந்தருவனவாய் இருத்த லோடு, பாண்டவர் உள்ளிட்ட பலரது சாவுவகையைத் தமது வாயாற் சொல்லவும் கூசிப் பாடாது விட்டனர் எனவும். வட மொழியிற் பாரதக் கதையைக் கூறும் "பாலபாரதம்" "சம்பு பாரதம்" முதலிய நூல்களில், இறுதிக் கதைகள் காணப் படாமை எத்தகைய காரணம்பற்றியோ, அத்தகைய கார ணம்பற்றியே வில்லியாரது பாரதத்திலும், இறுதிப்பாகம் காரணப்படாதிருத்தல் கூடுமெனவும்; (கம்பர் இராமாயணத்

தில் உத்தரகாண்டம் பாடாமல் விட்டதற்கும், இத்தகைய காரணத்தையே முக்கியமாகக் கொள்ளலாம். இப்பொழுதும் இராமாயணபாராயணஞ் செய்பவர்கள் உத்தரகாண்டம் படிப்பதில்லை யன்றோ ?) இந் நெறியைப் பின்பற்றியே வில்லியாரும் பின்னைய வரலாற்றைப் பாடாமல்,

"வினையகற்றும் பசுந்துளவோன் றுவரைநகர்த்
திசைநோக்கி மீண்டான் சீர்த்திக்
கனைகடற்பா ரளித்து அவரு மந்நகரி
லறநெறியைக் கருதி வாழ்ந்தார்"

என்றுகூறி, நாம் அப்பருவத்தோடு நிற்கின்றோமென்று அறுதியிடுவது கவனித்தற்குரியது என்றும் குறிப்பிடுகின்றனர்.

இங்ஙனம் கூறிய மூவகையார் கூற்றிலும், முதல்வர் கூற்று, வரந்தருவார் பாரதப்பாடல்கள், முற்றும் அச்சேறி வெளிவந்தாலன்றி உண்மையெனக் கொள்வதற்கில்லை.

இரண்டாவது, மூன்றாவது தரப்பினர்களால் கூறப்படுபவை, வரலாற்றிற்கும், முன்பின் தொடர்பிற்கும் மாறுபாடின்றி ஒருவாறு பொருந்துவன வாயிருப்பதால், அவற்றை நாம் தழுவிக்கொண்டு, வில்லிபுத்தூரார் பாடியன பத்து பருவங்களேயென்றும், அவைகள், ஆதிபருவம், சபாபருவம், ஆரண்யபருவம், விராடபருவம், உத்தியோகபருவம், வீட்டுமபருவம், துரோணபருவம், கன்னபருவம், சல்லியபருவம், சௌப்திகபருவம், எனப்பெயர் பெறுமென்று விளக்கியும்;

பாரதத்தைத் தமிழில் இயற்றியவர், நமது புலவர்

பெருந்தகை வில்லியரேயன்றி, தமக்கு முன்னிருந்த கடைச்சங்கப் புலவரான பெருந்தேவனாரும்; பின்னிருந்த முதலம்பேடு நல்லாப்பிள்ளையவர்களும், அட்டாவதானம் அரங்கநாதக் கவிராயருமே ஆவரென்றும், இம் மூவருள், பெருந்தேவனார் பாரதம், இடையிடையே அகவற்பாக்களும், கட்டுரைகளும் விரவிய வெண்பாக்களுடையதென்றும், நல்லாப்பிள்ளையவர்கள், வில்லிபாரதத்திலே சுருக்கமாகக் கதையைத்தொகுத்துக் கூறுவனவும், முந்நூறு, நானூறு செய்யுட்கள் தவிர, மற்றைய நாலாயிரஞ் செய்யுட்களை எடுத்துக்கொண்டு, தாம் புதிதாகப் பதினோராயிரஞ் செய்யுட்களைப் பாடி இடையிற்கோத்தும், இறுதியிற் சேர்த்தும் பாரதம் பதினெட்டுப் பருவங்களையும் முற்றுப்பெறுவித்தனர். அது, "நல்லாப்பிள்ளை பாரதம்" என வழங்கப்படுகிறது, அந்நூலாசிரியர் இற்றைக்கு 120 ஆண்டுகளுக்கு முன்னிருந்தனர்.

சுமார் 170 ஆண்டுகளுக்கு முன்னிருந்த அரங்கநாதக் கவிராயவர்கள், பாரதத்தின் பிற்பகுதியைச் சொர்க்காரோகணச் சருக்கம் சேர்ந்த 46 சருக்கங்களாக 2477 செய்யுட்கள் பாடினர். அது, 1902–ஆம் ஆண்டில் சென்னையில் பண்டிதமித்திர அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

## பாரதமும்—அது புகட்டும் நீதிகளும்.

பாரத நூல், பாண்டவ துரியோதனாதியாது வரலாற்றைக் கூறும்வகையில், மக்களால் நீக்கப்படவேண்டிய தீயவொழுக்கங்களும், கைகொள்ளற்குரிய நல்லொழுக்கங்களும் கூறுவதாய், பிறன் பொருளைக் கவருதல் அடாதென்பதும்;

குடும்ப ஒற்றுமை இன்றியமையாதென்பதும்; கற்பின் சிறப்பும், தெய்வபலமே சிறந்த பலமென்பதும்; மழை முதலிய நன்மையுண்டாதல் அறம் பெருகியவிடத்தே யென்பதும்; வஞ்சனை செய்வோர் அவ்வஞ்சனையாலே அழிவரென்பதும்; செய்ந்நன்றி மறக்கற்பாலதன்றென்பதும்; பெரியோர் சொல்லை பேணுதல் பேறுதருமென்பதும்; சத்தியமே தலைகாக்குமென்பதும்; பொறுத்தார் பூமியாள்வாரென்பதும்; ஆசிரியர் மாணவர் ஒழுக்கமும்; அடாது செய்வோர் படாது படுவரென்பதும்; சூது முதலியன துன்பந்தரும் என்பதும்; காலத்துக்குத்தக்க கோலம் கொண்டொழுக வேண்டுமென்பதும்; கருமப்பயனை அனுபவித்தொழிக்கவேண்டுமென்பதும்; இன்னும் இவைபோல்வன வேறு பலநீதிகளும் உண்மைப் பொருளாகவும், கருத்துப் பொருளாகவும், இதனுள் கூறப்பட்டுள்ளன. பாண்டவ துரியோதனாதியர் வரலாறுகளைக் கூறுதல் இதன் வெளிப்படைப்பொருள். இவ் வெளிப்படைப் பொருளை "அந்யாபதேசம்" என்பர். அதாவது சப்தசக்தியால் தோன்றும் பொருள். இப்பாரதத்தைத் தொடர்புருவமாகக் கொண்டு ஓர் உள்ளுறை பொருளுங்கூறுவர். உள்ளுறைபொருளை, 'ஸ்பாவ தேசம்' என்பர்.

## வில்லியாரும்— அவர் இயற்றிய நூல்களும்.

பாவாணர்களில் தலைமைசிறந்த நமது பாவேந்தர், தமது வாழ்நாளில், செந்தமிழரசிக்கு ஆற்றிய திருப்பணிகளில், பக்திச்சுவையும், பாச்சுவையும், நிரம்பியத் தமது பெயர் விளங்கப்பாடிய தமிழ்ப் பாரத காவியத்தைத் தவிர, வேறு பிரபந்தங்கள் இயற்றியதாகப் புலப்படவில்லை. திருப்புகழ்ப் பாடிய செந்தமிழ்ச் செல்வர், ஸ்ரீ அருணகிரிநாதர் பாடிய

கந்தரந்தாதியின் அரிய உரை இவராற் செய்யப்பட்டது. இவர் தமிழ்வளர்ச்சிக்குரித்தான சிறு நூல்களும், தனி நிலைக்கவிகளும், பல பாடியிருககலாம். ஆயின், அவற்றை அருமை யறிந்து தொகுத்தும், சேமித்தும், தமிழ்மக்கள் வைக்கத்தவறியதால், அவை அழிந்தனபோலும், இது போன்ற அரும்பெரும் பிரபந்தங்கள் நம்மவாது கவனக் குறைவாற் செல்லுக்கும், சிதலைக்கும், நீருக்கும், நெருப்புக் கும் இரையாவது தமிழர்களது துரதிஷ்டமென்பதன்றி வேறு புகல்வது யாதுளது.

## பாரதகாலமும்—ஆராய்ச்சியும்.

பாரதப்போர் நிகழ்ந்த சில ஆண்டுகளில், அதனைப் பற்றியும்; அதில் விளக்கமடைந்து புகழ்படைத்த வீரர்களைப் பற்றியும், பாட்டுக்கள் இயற்றப்பட்டுச் சூதர், மாகதர் முதலிய புகழ்வோரால் அரசமன்றங்களிலும், பிறவிடங்களி லும், எடுத்துக் கூறப்பட்டுக் கன்னபரம்பரையாய் உலகத்தில் பயின்றுவந்தன. அவைகளையெல்லாம் ஒருங்குசேர்த்துப் பிற்காலத்தில் "கிருஷ்ணதுவைபாயனர்" என்னும் புலவர், ஒரு பேரிதிகாசமாக இயற்றினர். அவர் காலத்திலேயே பாரதப்போரைப்பற்றிய உண்மை வரலாறுகளெல்லாம் மறைந்துபோய், மெய்மை வீரர்கள் அல்லாதவர்களே போரில் விளக்கமுற்றவர்களாய்த் தோன்ற, தீயோர் அழிய, நல்லோர் சிறப்படைதலாகிய அறநூற் கொள்கையை எடுத்து ரைக்கும் செய்யுளாய் விட்டது. மகாபாரதம் காளிதாசன், "இரகுவமிசத்தை" இயற்றினது போலாக; வான்மீகி "இராமயாணத்தை" யாத்ததுபோலாக; கிருஷ்ணதுவை பாயனர் மகாபாரதத்தைப் புனைந்தவரல்லர். பாரதப்போரின்

மேற்சென்ற பழைய சிற்றிதிகாசங்களை யெல்லாம் ஒருங்கே திரட்டி ஒரு பேரிதிகாஸமாகச் செய்தனர் என்க. வியாசர் என்னும் அவருடைய காரணப்பெயரும் இதனையே தெரிவிக்கும். அப்பதத்திற்குத் தொகுத்தோர் என்பது பொருளாகலின்.

இங்ஙனமாகக் கிருஷ்ண துவைபாயனர் மகாபாரதத்தை இயற்றியது இன்ன காலத்தில் என்று உறுதியாகக் கூறுதல் இயலாது; இற்றைக்கு இரண்டாயிரத்தைந்நூறு * (2,500) ஆண்டுகளுக்கு முன்னரே செய்தனரென்றே கூறலாம். கிறிஸ்து பிறக்க ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் புத்தமதம் உண்டாயிற்று. அங்ஙனம் புத்தமதந் தோன்றியகாலத்து வழங்கிவந்த "ஆஸ்வலாயன சூத்திரத்தில்" பாரதம் அல்லது மகாபாரதம் என்று ஒரு நூல் கூறப்பட்டுள்ளது. ஆகவே, அக்காலத்திற்கு முன்னரேயே பாரதக்கதை மேற்சென்ற சிறு செய்யுட்களெல்லாம் ஒருங்கு சேர்க்கப்பட்டு ஒரு நூலாகச் செய்யப்பட்டு விட்டனவென்பது தெளியப்படும்.

இவ்வாறு இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கிருஷ்ண துவைபாயனரால் இயற்றப்பட்டபடியே மகாபாரதம் இப்போதிருக்கவில்லை. காலஞ் செல்லச்செல்ல அது வளர்ந்து கொண்டே வந்துவிட்டது. மகாபாரதத்தில் இப்போது தொண்ணூறாயிரம் சுலோகங்களுக்கு மேலுள்ளன. அதற்கு ஓர் அநுபந்தமாய் வழங்கும் "அரிவமிசம்" என்னும் நூலையும் சேர்த்தால் சுலோகத்தின் தொகை, லக்ஷத்திற்கு மேற்படும். இவற்றுள், இருபதினாயிரம் சுலோகமே பாரதக்கதையைக் கூறுகின்றன. ஆதலால், கிருஷ்ண துவைபாயனரால் இயற்றப்பட்டபோது, மகாபாரதத்தின்

சுலோகத்தொகை இருபதினாயிரம் என்றே கொள்ளல்அமையும். மகாபாரதத்தின் முகவுரையில் கிளைக்கதைகள் சேர்க்கப்படு முன்னர், வியாசர் மகாபாரதத்தை இருபத்துநாலாயிரம் (24,000) சுலோகங்களால் இயற்றினர் என்றும், புலவர்கள் அதனையே பாரதம் என்று கொள்வார்களென்றும் கூறப்பட்டுள்ளது. இக்கூற்று, மேல் எடுத்துரைத்த கொள்கையை நன்குவலியுறுத்துகிறது. மகாபாரதம் கிருஷ்ணதுவைபாயனரால் இயற்றப்பட்டபின், பாரத கண்டத்தில் தோன்றிய புலவர்கள், ஒவ்வொருவரும் அதனைச் சிறிது சிறிதாக வளர்த்துக்கொண்டே வந்தார்கள். வடநாட்டிலுள்ள ஒவ்வொரு சாதியாரும், தங்கள் தங்கள் வரலாறுகளும், அதனுட் கூறப்படவேண்டுமென்று விரும்பினார்கள். புது மதங்களை நிலைபடச்செய்யவந்த மதத்தலைவர்கள் ஒவ்வொருவரும், தங்கள் கொள்கைகளெல்லாம் அதனுள் எடுத்தாளப்படவேண்டுமென்று கருதினார்கள். கற்றறிவில்லாத மாக்களுக்கு அறிவுபுகட்டவேண்டுமென்ற நோக்கத்தோடு அறநூல் மொழிகளும், நீதிநூல் பனுவல்களும், அதனோடு சேர்க்கப்பட்டன. சாதி ஒழுக்கங்களும், ஆசிரம நீதிகளும், அக்கருத்துடனேயே அதனோடு இசைக்கப்பட்டன. இங்ஙனமாகப் பண்டைக் காலத்தில் இப்பாரதகண்டத்தில் வழங்கி வந்தனவான தேவர்களையும், முனிவர்களையும், அரசர்களையும் பற்றிய பலவித கதைகளும், அதனோடு சேர்க்கப்பட்டன. புத்த மதம் வீழ்ந்து ஸ்ரீ கிருஷ்ணனைத் தெய்வமாகக் கொண்டாடுதலே பாரத கண்டத்தில் பரவியபோது, மகாபாரதமும் காலத்துக்கிணங்கக் கோலங்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனுக்குக் கடவுட்டன்மை கூறும் நூலாய் மாறிற்று. இவ்வாறாகவே, மகாபாரதம் காலம் வளர வளர்ந்து வந்தது. தனது இதிகாசத்தன்மை கெட்டு,

இப்போது சமயக்கொள்கைகளுக்கும், தர்ம உபதேசங் களுக்கும், வெறுங் கட்டுக்கதைகட்கும் ஓர் இருப்பிடமாய் இருக்கின்றது.

மகாபாரதம் இப்படி அதிகமாக வளர்ந்ததன் பின், அதனை மேலும் வளரவொட்டாமல் தடுத்தற்காக இற்றை க்கு ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஓர் உபாயம் செய்யப்பட்டது. "பர்வசங்கிரகம்" என முகவுரை ஒன்றி யற்றி, அதனுள், மகாபாரதத்துட் கூறப்படும் விஷயங்கள் ஒவ்வொன்றையும் எடுத்துக்காட்டிப் பர்வங்கள் ஒவ்வொன் றிலும், உள்ள சுலோகங்கள் இத்தனையென்று கணக்கேற் படுத்தப்பட்டது. இந்தக் கணக்கின்படி மகாபாரதத்துச் சுலோகத் தொகை எண்பதினாயிரத்து நானூற்றெண்பத்தைந் து, (80485) இங்ஙனம் எண்ணிக்கை ஏற்பட்டதன் பின்னும் மகாபாரதம் வளராமல் இருந்ததோ வென்றால், இல்லை. காலாந்தரத்தில் புது விஷயங்களும், புதுச் சுலோகங்களும், இடையிடையே சேர்க்கப்பட்டு இப்போது அது தொண் ணூறாயிரம் (90000) சுலோகங்கள் உள்ளதாயிருக்கின்றது. இது மேற்கூறியபடி அரிவமிசம் என்னும் அநுபந்தத்தை நீக்கிக் கண்ட கணக்கென்றறிக

இவ்விதமாகப் பழைய நூல்களின் இடையில் புதுச் செய்திகளையும், புதுச் செய்யுள்களையும் நுழைப்பது வட மொழியில் மாத்திரம் நிகழ்ந்ததன்று. அது செந்தமிழ் நூல் களிலும், ஏறக்குறைய ஒவ்வொன்றிலும் காணப்படுகின்றது. அவை விரிக்கிற் பெருகும்.

மகாபாரதத்தின் பாகங்கள் ஒவ்வொன்றும் மேலே விளக்கியபடி வெவ்வேறு காலத்தில் இயற்றிச் சேர்க்கப் பட்டவைகளாயிருத்தலின், அதனுட் கூறப்படும். ஒழுக்கங்

களும், வழக்காறுகளும் இப்பரதகண்டத்தில் ஒரே காலத்தில் நிகழ்ந்து வந்தன வென்று கொள்ளமுடியாது; அதுவுமன்றி இன்ன பாகத்தில் கூறப்படும் ஒழுக்கங்கள், இன்ன காலத்தினவென்று கூறுதலும் இயலாது; இதனை ஆய்ந்தறிய வல்லரல்லாதார் மகாபாரதத்துட் கூறப்படும் ஒழுக்க வழக்கங்கள் யாவற்றையும் ஒரே காலத்தன வெனக்கொண்டு பேரிடப் படுவரென்க. உதாரணமாக மகாபாரதத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பரத்துவங் கூறப்படுவதனால், அது பாரதப்போர் நிகழ்ந்த காலத்திலாக, மகாபாரதந்தோன்றிய காலத்திலாக, பரதகண்டத்தில் நிகழ்ந்து விளங்கிற்றென்று கொள்ளற்க, மகாபாரதம் இறுதியாகத் தொகுக்கப்பட்டபோது நிலவிய தொன்றென்றே கொள்க. ஸ்ரீ கிருஷ்ணனுக்குக் கடவுட்டன்மை கற்பிக்கப்பட்டது. புத்தமதம் பரதகண்டத்தில் நின்று நீங்கியபோதென்றே கொள்ளப்படுகின்றது. அது கிறிஸ்து பிறந்த நான்காம் நூற்றாண்டிலென்று சொல்லுப. இதுபோல்வன இன்னும் பல உள. இவைகள் யாவும் விறு நிகழ்வதற்கு இடமில்லாதபடி மெய்ப்பிக்கப்படவில்லை. அதனால், மகாபாரதம் கடைசியாகத் தொகுக்கப்பட்ட காலம் நான்காம் நூற்றாண்டென்றே உறுதியாகக் கொள்ளற்கிடமில்லை. இவ்வாறே மற்ற நூல்களின் காலமும் இன்னும் ஒன்றேனும் செவ்வனே வரையறுக்கப்படாமல் இருக்கின்றது. இதற்குக் காரணம் அந்நூல்களில் அவை தோற்றிய காலம் சொல்லப்படாமையும், அவை காலந்தோறும் மாறுபாடு அடைந்தமையுமாம்.

கிளைக்கதைகள் யாவற்றையும் நீக்கிவிட்டால், மகாபாரதம் தமிழிலுள்ள வில்லிபுத்தூரர் பாரதத்தைப் பெரிதும்

பாரதத்திற் காணப்படும் மா பெரும் போர் நிகழ்ந்த காலத்தைத் துணிந்து கூற இயலாவிடினும், இற்றைக்கு மூவாயிரம் ஆண்டு கட்கு முன்னர் என்பதே பல அறிஞரது கொள்கை.

1 யாழ்ப்பாணம் திரு. ஆ. முத்துத் தம்பிபிள்ளை அவர்கள் பாரதப் போர்க்காலம் துவாபர கலியுக சந்தியென்றும், அதாவது 4,500 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றும், மதுரைச் சங்கத்துச் செந் தமிழ்ப் பத்திரிகை மூன்றாந்தொகுதி, பகுதி பத்தில், பக்கம் 471-ல் கூறியிருக்கின்றனர்.

2 திரு. ஆ. முத்துத் தம்பி பிள்ளை அவர்கள் கூறியதைமறுத்து, செந்தமிழ் மாஜிப் பத்திராசியர் திரு. மு. இராகவையங்காரவர் அவர்கள், செந்தமிழ்ப் பத்திரிகை தொகுதி 3, பகுதி 10, பக்கம் 377 ல் உதிட்டிரர் காலம் 3068 ஆண்டு என்று, தக்க ஆதாரத்துடன் கூறியிருக்கின்றனர்.

3 சித்தூர் வாசியும், ஆராய்ச்சியிலும், ஆங்கிலத்திலும், தமிழிலும் வல்லாராகிய வேலந்தை, திரு. வி. கோபால அய்யரவர்கள் பாரதப்போர் நிகழ்ந்த காலம், கி. மு. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அதாவது இற்றைக்கு 3098 ஆண்டில் என்று முக்கிய மான பதினொரு தக்க ஆதாரங்கள் காட்டி நிர்ணயம் செய்திருக்கின்றனர். இதனை அறிஞரும் ஆராய்ச்சியாளரும் படித்தின்புறும் பொருட்டு, சென்னை "இந்தியன் ரிவியூ" (Indian Review) ஆங்கில மாதப்பத்திரிகையிலும், "இந்தியாவின் பூர்வீக பரம்பரை" (Chronology of Ancient India) என்ற பெயரில், ஆங்கிலத்தில் தனிப் புத்தகமாகவும், அச்சிட்டுத் தமது சித்தாந்தத்தை நிலைநாட்டியிருக்கின்றனர். இப்பெரியாரது கொள்கையை, வரலாற்று ஆராய்ச்சியாளர் பலர் உண்மையுடைய தென்று ஒப்பியிருக்கின்றனர்.

ஒவ்வொருவர் கூற்றினும் சிறிது சிறிது மாறுபட்டிருப்பினும், அப்போர் மூவாயிரம், ஆண்டுகட்கு முன் நிகழ்ந்தது என்பதில் யாதொருதடையுமில்லை.

ஒக்கும். ஆகவே வில்லிபுத்தூரார் பாரதத்தைப் படிப்பதினால் ஒருவர் முதன் முதலில் கிருஷ்ணதுவைபாயனரால் இயற்றப் பட்டபோது மகாபாரதம் இவ்வாறிருந்ததென்பதை ஒரு வாறு அறிந்துகொள்ளலாம். வில்லிபுத்தூரார் பாரதம், தமிழ் நாட்டில் மிகவும் ஒலிக்க முந்தியதற்கும், நல்லாப்பிள்ளை பாரதம் ஒலிக்காமல் பிந்தியதற்கும் காரணம், முன்னது, கிளைக் கதைகளால் கதைத் தொடர்ச்சி இடையீடின்றி ஆற்றொழுக்குப்போல் சென்றினிது முடிதலும், பின்னது கிளைக் கதைகள் மிகுந்து கதைத் தொடர்ச்சி யாண்டும் இடையீடு பட்டுக் கிடைத்தலுமே போலும். கிளைக்கதைகள் யாவற்றையும் கதைக்கு வேண்டாதனவென்று கொண்டு, வில்லி புத்தூரார் நீக்கிவிட்டது அவைகள் பிற்காலத்தன வென்பதே அவரது கொள்கை யென்பதைக் காட்டாதுபோயினும், அவர் ஓர் மெய்ப்புலவர் என்பதை நன்கு விளக்குகிறது.

## வில்லியார் காலமும்—நிர்ணயமும்.

சீர் சிறந்த செந்தமிழகத்தில், பாச்சுவை நிரம்பிய பாரதம் பாடி, ஆட்கொண்டானாகிய கொங்கர் கோனால் பெரிதும் மதிக்கப்பட்டு, திக்கெட்டினும் புகழ்பெற விளங்கிய புலவர் கோமான், வில்லிபுத்தூராரது ஜீவிய காலத்தை, காலஞ்சென்ற தில்லையம்பூர், பண்டித வேங்கடராமையர் என்பவரால் 1914-ஆம் ஆண்டில் இயற்றி வெளியிட்ட “வில்லித்தூரார் சரித்திரச் சுருக்கம்” என்னும் சிறு நூலில், வில்லியார் காலம் 650 ஆண்டென்றும்; காலஞ்சென்ற திவான் பகதூர், கிருஷ்ணமாசாரியவர்களால் 1919-ஆம் ஆண்டில் எழுதிப் பிரசுரித்த “பன்னிரு புலவர் சரித்திரப் புத்தகத்தில் புலவர் காலம்

700- ஆண்டென்றும் கூறியுள்ளார்கள். இவ்விருவர்கள் குறித்த காலங்கள் தவறுதல்களுடையனவும், அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் அங்கீகரிக்கத் தகாதனவுமாயுள்ளன. இவ்வற்றை வில்லியார் காலத்தை தக்க ஆதாரங்காட்டி நிர்ணயிக்கு முகத்தால் அன்பர்கள் உண்மை காண்பாராக.

இனிப்புலவர் கால நிர்ணயம் வருமாறு:—

வில்லிபுத்தூரர், தமது தமிழ் நாட்டு யாத்திரையில் அருணகிரிநாதருடன், அண்ணாமலையில் கல்விப்போர் நிகழ்த்தி ஞரென்பதை, ":அருணகிரி நாதரும், வில்லிபுத்தூரரும் என்னும் தலைப்பின் கீழ் நாம் முன்னரே கூறியுள்ளோம். அருணகிரியார் கி. பி. 15-ஆம் நூற்றூண்டில், விஜயநகரத்து அரச வமிசத்துப் பிரபுட தேவராயன் காலத்தவரென்பதும்; அவன்து ஆதீனத்திருந்த அண்ணாமலையைப் பிறப்பகமாகக் கொண்டவரென்பதும், தமிழகம் அறிந்த செய்தி.

பிரபுடதேவராயனது அருமை பெருமைகளும், அவனது கல்வியறிவும் கற்றோரைப்பேணும் தன்மையும், தெய்வ சிந்தனையும், அன்பர்கள் அறிய இங்குச் சிறிது விவரிப்பது மிகையாகாது. மொழிப்பற்றும், அதன் முன்னேற்றத்தில் முயற்சி மிக்கானுமாகிய இச்சிற்றரசனது சீரிய செய்தி வாசக நண்பர்கள் அறிந்து இன்புறக்கூடியதாம்.

விஜயநகரத்து வேந்தர்களில் வமிசத்தானாகிய இச்சீமந்தன், "ப்ரௌடராயன்" ப்ரௌடப்பிரதாபராயன், தேவராயன், இம்முடிப்ரௌடராயன் என்றப் பட்டப்பெயர்களால் வழங்கப்படுகின்றனன். ப்ரௌடம் என்னும் சொல்லுக்கு

கந்தருவன், அழியாதரூப சம்பன்னன், என்பன பொருள். இவனது வரலாற்றில், இவன், அழகு, செல்வம், சீர், சிறப்பு முதலியவற்றால் மிக்குயர்ந்தானென்று கூறப்பட்டிருக்கிறது.

பிரபுடதேவராயன், வீரசைவ மதாபிமானியாய் அம் மதத்தைப் பரவச் செய்த பெரியார்களைப் பெரிதும் ஆதரித் தவன் என்பது, இவன் காலத்தில் எழுதப்பட்ட நூல்களா லும், சாஸனங்களாலும், அறியப்படுகின்றன. இவன் சைவ மதத்தில் கொண்டிருந்த அபிமானத்தைப்போலவே வைணவ மதத்திலும், அபிமானங்கொண்டிருந்தான். அதனால், அம் மதத்தின் பெரியர்ாகிய 'கந்தாளபெத்தி' என்பவரை ஆசா ரியராகக் கொண்டு, அவர் இராமாயணப் பிரசங்கத்தை அக மிக மகிழ்ந்து கேட்டு அவருக்கு வெகுமதி யளித்தது மன்றி ஹம்பியிலுள்ள ஹஜாா இராமபிரான தேவலாயத்தையும் ஜீர்ணோத்தாரணம் செய்தானென்றும், மற்றோர் சாஸனம் கூறுகின்றது. அல்லாமல், இவன் தனது சமஸ்தானத்தில் வீர சைவப் பெரியார் பலரையுங் கூட்டிச் சைவம் பெருக்கி, அம்மதத்தின் பெருமையை விளக்கும் பல பிரபந்தங்கள் இயற்றச் செய்தானென்றும், அப்பெரியார்களில் முதன்மை யாக விளங்கியவர் மகாலிங்க தேவர், தோண்டத சித்திலிங் கர், லக்கண்ண தண்டநாதர், ஜக்கண்ணர், குமாரபங்கநாதர் சாமரசர், கல்லுமடம் பிரபுதேவர், கரஸ்தல வீரண்ணர், கரஸ்தலநாக தேவர், ஸ்ரீ கிரிந்தீரர், மக்கைய மாயிதேவர், குருபசவர், பத்திலேய்வரர் முதலானோர்களென்றும் அறியப் படுகின்றது.

பிரபுட தேவராயனது சைவாசாரியர், காஷ்மீரதேசத்து "சந்திரபூஷனி கிரியா சக்தி" ஆவரென்றுஒரு சாஸனமும்,

தீக்ஷாகுரு "சக்கண்ணுசாரியாரேன்றும்," இவரே பிரபுட தேவராயனுக்கு வீரசைவ மதோபதேசஞ் செய்து லிங்க தாரணத்தையும், சிவபூஜை எழுந்தருள்விக்கும் முறையையும், போதித்தாரென்றும் பிரபுடதேவ காவியமும் கூறுகின்றன.

இவ்வரசனது ஆஸ்தானத்துப் புலவர்களில் "அன்னியமத கோலாகலன்," "வீரசைவாசார ஸாரோத்தாரகன்" என்ற விருதுப்பெயர்கள்பெற்ற "சாமண்ண ஆமாத்யாயன்" (சாமரசன்) என்னும் பெரியார், "பிரபுலிங்க லீலையை" முதன் முதலாகக் கன்னட பாஷையில் இயற்றிப் புகழ்சிறந்தனர். இப்பிரபந்தத்தினது அருமை பெருமைகட்கு உவகையடைந்த பிரபுட தேவராயன், அப்புலவர் சிகாமணிக்கு இரத்தினாபரணங்களையும், ருத்திராக்கங்கணத்தையும்சன்மானஞ் செய்து பெருமைப்படுத்தினன். அதனுடன், அவருக்குத் தமது ஆஸ்தானத்திலேயே அமைச்சர் பதவியும் அளித்து ஆதரவு செய்தான். இதன் பின்னரே, பிரபுலிங்க லீலை, தெலுங்கு மொழியில், "பீடுபர்த்தி சோமகவி" என்பவராலும், தமிழில் சிவப்பிரகாசதேவராலும் மொழிபெயர்க்கப் பட்டது.

இதுபோலவே "முகுந்தப் பேரியார்" என்பவர் தமது முன்னிலையில் செய்த பாரதப் பிரசங்கத்தின் அருமைக்கும், அவரது அபாரப் புலமைக்கும் அதிசயித்து, அப்பெரியாரை அரச மரியாதையுடன் விஜயநகரத்துத் தெருக்களில் பல்லக்கில் எழுந்தருள்வித்து ஊர்வலம் செய்வித்துப் பொன்னாலும் பட்டாலும், பொருளாலும் போதிய பரிசளித்ததும்; கன்னடபாஷையில் பாரத காவியத்தைக் கவியழகு சிறக்க, காவியமணம் பெருக, இலக்கியம் இனிது பொலிய, ஏற்றமுடன்

இயற்றிய "குமாரவியாசர்" என்னும் புலவர்க்குக் கனகாபிஷேகஞ் செய்வித்ததும்; இவன் புலவர்பெருமக்களின் புலமையறிந்து, அவர் தந் தகுதிக்கேற்பப் பரிசளிப்பதில் மிக்கானென்பதை உணர்த்துகின்றது.

பிரபுடதேவராயன், புலவர்களிற் புலவனாக விளங்கினானென்பதற்கு, இவனால் இயற்றப்பட்ட "மஹாநாடக சுதாநிதி" என்ற நூலே போதிய சான்றாம். காவியத்தின் சுவையறிபவன்தான், கவிகளின் தகுதியறிந்து சன்மானிக்க வல்லவனாவன்.

புலவர்களின் வைப்புநிதியாக விளங்கிய இவ்வரசன், தனது ஆட்சிக்காலத்தில், தேச பாஷைகள் செவ்வனம் முன்னேற்றமடைந்து சிறப்பதற்கான முயற்சியில் மிகுதியும் ஈடுபட்டு, புலமை வல்லார்களைத் தக்கபடி உபசரித்து, அவர்களுக்கு வேண்டிய உண்டி, உணவாதிகளுக்கு உறுதுணையாயிருந்து உதவி, அவர்களைக்கொண்டு அரும் பெரும் பிரபந்தங்களை இயற்றும்படி செய்து, அவைகளின் தன்மைக்கேற்றவாறு வெகுமதியளித்துப் பெருமைப்படுத்தினான். இதனாலும்; தேச பாஷைகளில் அன்பும், அறிவும், புலமையும் உடையவனாயிருந்ததனாலும்; இவனது ஆதிக்கத்தில் திருவண்ணாமலை அடங்கியிருந்ததனாலும்; இவன் அண்ணாமலையைக் காண அடுத்தடுத்து வரவும், அங்குச் சிலகாலம் அமர்ந்திருக்கவும் அவகாசம் ஏற்பட்டது. இதனால், பிரபுடதேவராயன் அயிற்வேற் கடவுளின் அருந்தொண்டராகிய அருணகிரி நாதரைக் காணவும், அவரது அருட்புலமையையும், பக்திப்பெருக்கையும், திருப்புகழ்ப் பாடல்களின் சந்தஇன்பத்தையும்

அறிந்து இன்புறவும் ஆயிற்று. அருணகிரியாரும், அரச னது அவையின் அருமைக்கும், கவியுணர் தன்மைக்கும், தெய்வ சிந்தைக்கும் அதிசயித்து, இராயனைத் திருப்புகழில்,

"உதயதாம மார்பான ப்ரபுடதேவ மாராச
னுளமுமாட வாழ்தேவர்—பெருமாளே"

திருச்செந்தூர்த் திருப்புகழ், 88.

என்று புகழ்ந்து பாடினார்.

கல்வி, அறிவு, திரு, செல்வம், சீலம், அன்பு, அரசு, ஆண்மை முதலியவற்றால் பிரபுடதேவராயன் சிறந்து விளங் கியதே அவன், அருணகிரியார்-வில்லிபுத்தூரார் கல்விப்போ ரின் பேரவையில் தலைமை வகிக்கத் தகுதியுடையானானன். பேறுபெற்ற தமிழ்ப் பெரியாரிருவர் நிகழ்த்திய தமிழ்போ ருக்கு, அவைத்தலைமை வகிக்கும் ஆற்றல் பிரபுடதேவராயன் பெற்றிருந்தானென்றால், அவன் பெருமை எத்தகைய உயர் வுடையதெனலாம். இதனை அன்பர் நினைவிற்குக் கொணர் வதற்கே ஈண்டு இத்துணையும் விவரிக்க நேர்ந்தது.

இப்பிரபுட தேவராயனது காலம், சாஸனபரிசோதகர் ஆராய்ச்சிப்படியும், கல்வெட்டு, தாம்பிர சாஸனங்களின் கணக்குப்படியும், கி. பி. 1419—1446-ஆம் ஆண்டுகளுக்கு இற்றைக்கு 487-ஆண்டுகள் ஆகின்றது. இக்காலமே அரு ணகிரிநாதர் காலமும் ஆம். அருணகிரிநாதர் காலம் 487-ஆம்போது, அவருடன் வாது புரிந்த நமது வில்லிபுத்தூரார் காலமும் அதுவே யென்பது கூறுமலே அமையும். இவரை அன்புடன் ஆதரித்துப் பாரதம் பாடுப்படி வேண்டிய வக் கைபாகை வரபதி ஆட்கொண்டான் காலமும் இக்காலமே

யாம். ஆகவே, வில்லிபுத்தூரர் காலம், கி. பி. (15-ஆம்) பதி னைந்தாம் நூற்றூண்டின் நடுவிலாம். இக்காலத்தில் தமிழ் பார தம் பாடிய வில்லியார், தமிழகத்தில் சீர் சிறக்க விளங்கினர்.

இவர் சமகாலத்து விளங்கிய புலவர்கள்.

"சாணர்க்கு முன்னிற்கு மாட்கொண்டநாயன்
றமிழ்க்கொங்கர்கோன்
பாணுற்ற வரிவண்டு சேர்வக்கை நகராதி
பக்கத்திலே
ஊணுக்கு வாரா திருப்பாய் விருப்பாகி
யுயர் வானிலே
வீணுக்கு நின்னுக மெலிகின்ற திவ்வாறு
வெண்டிங்களே"

தமிழ் நாவலர் சரிதை, 107.

என்று பாகைவேந்தன் ஆட்கொண்ட நாயனைப் பாடியவரும், ஏகாம்பர நாதர் உலாப்பாடி தெய்வ கவிப்புலவர்கள் என்று விதந்தோதப்பட்டவருமான இரட்டையர்களும்; ஆசு கவி யால் அகிலமெங்கும் வீசுபுகழ்பெற்ற வித்தகர் காளமேகப் புலவரும் ஆவர். இவர் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள நாத்ன்கோயில் என்னும் நந்திபுர விண்ணகரத்துத் தோன்றி ஸ்ரீரங்கத்துச் சுயம்பாகியாயிருந்து, ஆனைக்கா அகிலாண்ட ஈசுவரியின் ஆரருளால், கவிபாடும் திருவருள் பெற்று, வை ணவம் நீத்து சைவம் தழுவிய பெரியாராய் விளங்கினர். இப்பெரியாரை, இரட்டையர் ஆனைக்காவில்,

''வாசவைய னந்தி வாதா திசையனைத்தும்
வீசு கவிகாளமேகமே—பூசானே!
விண்டின்ற வெவ்வழலில் வேவதோ பாவியேன்
மண்டின்ற பாண மென்ற வாய்''

தமிழ் நாவலர் சரிதை (222.)

என்று கையறு நிலைக் கவிபாடினர். இதனல் காளமேகரும், இரட்டையர்களும் ஒருகாலத்தவரென்று உறுதிப்படுகின்றது.

ஆகவே, அருணகிரிநாதர், வில்லிபுத்தூரார், இரட்டையர், காளமேகப் புலவர், வாபதி ஆட்கொண்டான் முதலியோர், ஒரே காலத்தில் தமிழகம் புகழ விளங்கிய நல்லோர்களென்ப.

## வில்லிபாரதமும்-வடசொல்லாட்சியும்.

வில்லிபுத்தூரார், தாம் பாடிய பாரத காப்பியத்துள் வடமொழிகளைத் தனிமொழியாகவும், தொடர்மொழியாகவும், இன்னமொழியின் சம்பந்தமானதென்று எளிதில் அறிய முடியாதவாறு வேறுபடுத்தியும், மொழிபெயர்த்தும் மிகுதியாக உபயோகித்திருக்கின்றனர். இவற்றல், இவர் வடமொழியிலும் மிகச் சமர்த்தரென்பது நன்கு அறியப்படுகின்றது. அதற்குச் சான்றுகள் வருமாறு:-

### திரித்த (வேறுபடுத்திய) சொற்கள்.

1 ஓசம் 2 பற்பவனம் 3 வித்தாம் 4 தனிதம் 5 நானம் 6 தௌத்யம் 7 வர்ணம் 8 கர்ணன் 9 பிதிட்டிதம் 10 ஆசுகக்கனி 11 தார்த்தராட்டிரர் 12 சென்மதேயம் 13 பங்கத்துவசன் 14 அக்குரோணி 15 வீடுமன் 16 கிருபன் முதலியன.

### திரிக்காத (வேறுபடுத்தாத) வடசொற்கள்

1 சாரஸநம், 2 சதுரங்கயாநம், 3 ஆசுகம் 4 ஆதிதேயம், 5 வருநிதி, 6 ஆகர்ணம், 7 அவநிபர், 8 நீபம், அநீகிநி, போதகம், முதலியன.

## மொழிபெயர்ப்புகள்.

1 பிருகத்ரதன்—பாரதப்பெயரோன். 2 சேஷாசலம்—அரவக்கிரி. 3 கமலீநாயகன் – நளினவெம்பதி. 4 காளிந்தி-வெற்பளித்த நங்கை. 5 க்ருபீடயோநீ:— அம்மனை அம்—நீர்; மனை-இடம். அது நெருப்பு. 6 ஆகாஸவாயு-வான்மைந்தன். 7 மனோரதம்—உள்ளமானதேர் 8 கோள்-கிரகம்.

## தத்திதாந்தச் சொற்கள்.

தத்திதம் = பிராதி பதிகத்தின் மேல் வரும் பெயர் விகுதி, பிராதிபதிகம் = பெயர்ப்பகுதி.

1 ஆதிதேயர்-அதிதிகளை உபசரிப்போர், "செந்தழல் வேள்வி கூராதிதேயரே" (வேத்ரகீயச்சருக்கம்) 2 அம்பிகேயன்-திருதராட்டிரன் பெயர்களுள் ஒன்று. "அம்பிகேயன் அமைச்சரோ டெண்ணினன்" (திரௌபதிமாலையிட்ட சருக்கம் 107) 3 தார்த்தராட்டிரர்-திருதராட்டிரன் புத்திரர், "தாண்டு வெம்பரித்தேர்த் தார்த்தராட்டிரர்" (திரௌபதி மாலையிட்ட சருக்கம் 98) 4 சௌபலன் சுபலன் மகன். 5 சௌபலேயர்-சௌபலையின் புத்திரர் 6 காந்தாரேயர்-காந்தாரியின் புத்திரர். 7 வைநதேயன்-விநதையின் மகன். 8 காத்திரவேயர்-கத்திருவின் பிள்ளைகள் விநதையும், கத்திருவும், தக்கன் புதல்விகள். வைநதேயன் என்றது-கருடனை. காத்திரவேயர் என்றது பாம்புகளை. "வைநதேயனைக் காத்திர வேயரை" (சம்பவச் சருக்கம் 119) 9 மாதவி-மதுவின் மரபிற் பிறந்தவள். 10 சாத்தகிரி-சத்தியகன் மகன்; இவனுக்கு யுயுதானன் என்னும் பெயர். 11 ராவணி-இராவணன் மகன். 12

ஆநிலி-அநிலன் மகன் 13 கௌந்தேயர்-குந்திபுத்திரர், 14 மாருதி-மருத்தின் மகன் 15 ஆநிலன்-அநிலன் மைந்தன் 16 பாகசாசநி -பாகசாசன் மகன் 17 வாசவன்-வாசவன் மகன் 18 பாஞ்சாலி-பாஞ்சால தேசராசன் மகள் 19 யாஞ் ஞசேநி-யாஞ்ஞசேநன் மகள் 20 பார்ஷதி-பார்ஷதன் மகள் 21 திரௌபதேயர்-திரௌபதியின் புத்திரர் 22 சௌபத்திரே யன்-சுபத்திரையின் மகன் முதலியன.

## கிருதந்தச் சொற்கள்.

கிருதந்தமாவது-கிருத்தினை இறுதியிலுடைய சொற்கள். கிருத்து, வினைப்பகுதியின் மேல் வரும் பெயர் விகுதி.

1 காயநம்-பாடுதல். 2 யாநம்-ஊர்தி. 3 யாமசரி-யாமத்திற் சரிப்போன், 4 சாதர்-பிறந்தோர். 5 நித்திராலு—நித்திரை செய்வோன். 6 விசயம்-வெற்றி 7 நிருபன்-மனிதரைக் காப்போன். 8 ஆசுகன்-விரைந்து செல்வோன் 9 சாரி-செல்வோன் 10 காரியம்-செயல் 11 விசாரம்-ஆராய்வு 12 பாவி-வாற்பாலது 13 விதூடகர்-கோமாளிகள் 14 வாகம்-சுமப்பது 15 விதுரன்-அறிஞன் 16 துரோகி—துரோகஞ் செய்வோன் 17 தனுசர்-தானவர் முதலியன.

## அவ்வியயப் பதங்கள்,

1 ஆபாதசூடம் — பாதந்தொடங்கிச் சிரம்வரைக்கும், "ஆபாத சூடங்கருதித் தொழுதார் சில மாதர்" (இராசசூயச் சருக்கம் 78) இங்கே ஆ என்பது அவ்வியயம்-அதுவரைக்கும் எனப்பொருள்படும். 2 ஆகன்னம்-காதளவும் 'ஆகன்னமுறச் செம்பொன் வரைவில் வாங்கி" (அருச்சுனன் தீர்த்தயாத்

திரைச்சருக்கம் 49) 3 அவிதா-யாதேனும் ஓராபத்தின் கண் கூறும் ஒரு குறிப்புமொழி, "அவிதா வென்றணங்கனையாள ழுதபொழுதே" (சூதுபோர்ச்சருக்கம் 259) 4 அதவா-அன்றேல். 'அதவாமுரட்போர் தனக்கஞ்சுமோ' (17ஆம் போர்ச்சருக்கம் 232) 5 நாராயணாயநம-நாராயணனுக்கு வணக்கம், இங்கே நம என்பது அவ்வியயம். "நானுவிதங்கொள் பரியாளக நின்றருளும் நாராயணாயநமவே" (18-ஆம் போர்ச்சருக்கம் 1) 6 அதியாதரம்-மிக்கவிருப்பம். இங்கே அதியென்பது அவ்வியயம். "சல்லியனை யதியாதரத் தோடழையா" (18-ஆம் போர்ச்சருக்கம் 4) ஓம் உடன்பாட்டை யுணர்த்தும் ஓர் அவ்வியயம் 'ஒன்றுங்கதிர் முடியாற்கோ மென்றுரைத்தருளி' (கிருஷ்ணன் தூது 40) 8 இதரம்—அன்னியமானது "இதரங் கடந்தா னுஇட்டனென்று" (துருவாச 12) முதலியன.

## வட சொல்லடியாகப் பிறந்த வினைச் சொற்கள்.

மோகித்தல்-மயங்கல். வேகித்தல்-வேகங்கொள்ளல். சோகித்தல்-துயிருறல். கம்பித்தல்-நடுங்கல். தம்பித்தல்-நிறுத்துதல். கதித்தல்-சொல்லல். சதித்தல்-அழித்தல். கோபித்தல்-செற்றங்கொள்ளல். சிந்தித்தல்-நினைத்தல். சுகித்தல்-சுகமுறல். சரித்தல்-போதல். சலித்தல்-அசைதல். வரித்தல்-வேண்டுதல். அங்குரித்தல்-முளைத்தல். புளகித்தல்-மயிர் சிலிர்த்தல். சாதித்தல்-கொல்லுதல். காமித்தல்—இச்சித்தல் முதலியன.

### சமாசம்.

சமாசமாவது:- இரண்டுமூன்று முதலியனவாகச் சேர்க்கப்பட்டு ஒன்றுபோல நிற்குந் தன்மையுடைய சொல். சமாசம்-தொகை, சமூகம் முதலியன.

## இருமொழிச் சமாசம்.

நளினபதி, மாரகாகளம், தாரகாயநம், பரிமளபுளகம், பந்நகத்துவசன், தாரதிபர், கரிநிகரம், யவநஜவனம், பவந கதி, மூாஜ ஜாலம், கிரிநிகரம் முதலியன.

## மூ:ம்மொழிச் சமாசம்.

இமநாகபவநம், பங்கசாதபரிமளம், கம்பநிகள மதா சலம், பாநுராச சூநு, கீதநாத பண்டிதன், ஆதிவராக கேது, காரணசித்குண ரூப, முக்திவிசாலதலம், செம்பற்ப ராக பதி, முதலியன.

## நான்மொழிச் சமாசம்.

அதிதவள மதவாரணம், துருபதயாக சேன நிருபன், சததளபங்கய முகுளசாலம், மாதவயாதவ வாசவகேசவ முதலியன.

## ஐம்மொழிச் சமாசம்.

முககாகபோத மதகரி; சடாதுங்க மௌலிப்புர சூத னன், மானகவச வாராச துரியோதனன், நவரத்னகண கிர ணவுடு, புராதநாகம வேதகீத புராணரூபம். பரதநாத வேதப ரத்வாசன், கபோல விகடகட கரிதுரகம் பதாதியிரதம் முத லியன. தனிமொழியாக உபயோகித்திருப்பதற்கு உதாரணம் எண்ணற்றனவாம்.

தமிழில் நூலாசிரியரொவரும் வடமொழிகளை வில்லிபுத் தூாரைப்போல் எடுத்துக்கொள்ளவில்லை. வடமொழிக் காவியத்தில் நுழைக்கிற வழக்கம் இவர் காலம் தொடங்கித் தான் அதிகமானது. சங்கத்தார் காலத்துப் பழைய நூல்க

ளில் அத்துணையாக வடமொழிச் சொற்களில்லை, தனித் தமிழ்ப்பதங்களே மிகுதியாய் இடம் பெற்றிருக்கின்றன. மற்றும்,

வில்லியார் பாரதப் பாடல்களில் உவமை, உருவகம் எடுத்துக்காட்டுவமை, தற்குறிப்பேற்றம், வேற்றுப்பொருள் வைப்பு, பிறிது மொழிதல், உயர்வு நவிற்சி முதலிய பொரு ளணிகள் அமைந்திருப்பது மாத்திரமேயன்றி, மடக்கு, (யமகம்) திரிபு, பிராசம், முதலிய சொல்லணிகளும் ஆங் காங்கு விரவியுள்ளன. அவைகளில் சில செய்யுட்களைமட் டும், உரையின்றி, மாதிரிக்காகக் காட்டியிருக்கின்றோம். அவை கீழ் வருமாறு:—

### உவமை.

"கொட்பனற்சுடவிறந்தமைகேட்டலுங்குருக்க
டொட்பதத்துட னெழுதிடுஞ்சுயோதனன்முதலோ
ருட்பனித்துமேல் வெயிலுறவெதும்பு நீரொத்தார்
பெட்புறப்புவிமுழுவதும் பெறுங்கருத்துடையோர்".

வாரணுவதச்சருக்கம் (135)

### உருவகம்.

"கொண்டலெழுமின்னுடங்கக் கொடுஞ்சாபம் வளைவுறச்
செங்கோபந்தான்ற
வண்டளவு நறுங்குமிழும் வண்டணி காந்தளு மலர
மலைகடோறுந்
தண்டரள வருவிவிழத் தையலார் வடிவுதொறுஞ்
சாயற்றோகை
கண்டு நமக்கிளவேனில் கார்காலமானதெனக்
களிக்குமாலோ"

காண்டவதகனச் சருக்கம், (5)

### எடுத்துக்காட்டுவமை.

"வீரற்புனை கோதை வல்வில்லின் வல்லவர்
குரற்படச் சேவகங் கூறுகிற் பரோ
வுரற்புரை நீடடி யோடையா னையாய்
சரற்புயலானது தனிதஞ் செய்யுமோ"

13-ஆம் போர்ச் சருக்கம், (250)

### தற்குறிப்பேற்றம்.

"அரக்கர்க்கு முதல்வான ளித்தோரு
மெமரின்று மவர்போலுமைத்
துரக்கைக்கு நின்றேனெ னத்தெவ்வர்
தம்மோடு சொல்லிற்றெனக்
குரக்குக்கொ டித்தேரின் மிசையோடி
விசையோடு கூத்தாடவே
புரக்கைக்கு நின்றேனு டன்செங்கண்
விசையன்பு றப்பட்டான்"

5-ஆம் போர்ச்சருக்கம், (4)

### வேற்றுப்பொருள் வைப்பு.

"ஒருதனுவினு விதயமகிழ் குருவினுக்கிவனு
முயிருதவினு னுதவலுங்
குருவுமிவனுக்கு நிலையாலு மறையாலும்
வலிகூர்பகழி யொன்றுதவினு
னிருவருநயந்தருளும் வினயமு மிகுந்தனர்க
ளின்னுயிரு மனமுமெனமேன்
மருவிவரு நல்வினைவயத்தின் வழிவந்தபயன்
மற்றொருவருக்கு வருமோ"

வாரணாவதச் சருக்கம், (53)

## பிறிது மொழிதல்.

“படைகொடுத்தானிவனிழந்தபார்கொடுத்தா
னரசாளப் பண்டுபோல்வெண்
குடைகொடுத்தான் குருகுலத்தே குலங்கொடுத்தா
னெவருக்குங் குலத்தேகொண்ட
தடைகொடுத்தா னகப்பட்டுந் தலையழிக்க
நினையாமற் றனையம்ம
விடைகொடுத்தா னினிவிடுமோ வயப்புலியை
வாலுருவி விடுகின்றீரே”

சூதுபோர்ச் சருக்கம், (265)

## உயர்வு நவிற்சி.

“ஆலையிற் கரும்பின் கண்களிற்றெறித்த
வாரமும் வயற்புறத்தடுத்த
சோலையிற் பயிலுங்குயிலையுஞ் சுருதிச்
சுரும்பையு நிரைநிரை துரப்ப
வேலையிற் குதித்தவாளை யேறும்பர்
வியனதிகலக்கி வெண்டிங்கண்
மாலையிற் பரவும்வான மீன்கொடிபோல்
வாவியிற் குளிக்குமாமருதம்”

இந்திரபிரஸ்தச் சருக்கம், (20)

## மடக்கு அல்லது யமகம்.

“மண்டலம்பயி லுரகர்பே ருயிர்ப்பினுன் மயங்கி
மண்டலம்பொர வருந்திய பெருந்துயர் மாற
மண்ட லந்தனை நிழலெனு மாபினுற் றனது
மண்ட லம்பொழி யமிழ்தின்மெய் குளிரவே வைத்தோன்”

"கந்தா வகன்மொய்ம் புறுகா ளைபுயக்
கந்தா லமர்செய் துகலக் குதலின்
கந்தா வளசே னைதரிப் பறவே
கந்தா வளமுற் றனசா யுறவே"

## திரிபு.

"வெங்கலங்கற் கடுங்குருதி வெள்ளத்துக்
கொடியிடையே மிதக்குந்தோற்றம்
"செங்கலங்கற் புதுப்புனலில் விளையாடித்
திரிகின்ற சேல்கள்போலும்
பொங்கலங்க ளிருபர்தலை புனைமகுடத்
துடன்கிடப்பப் பொறியார்வண்டு
தங்கலங்கல் வண்கனக சததளபங்
கயமுகுள சாலம்போலும்"

## பிராசம்.

"அடாதுசெய்ச டாசுரன தாவியையு மம்பொற்
படாமுலைக டாமுடைய பைந்தொடியையும் போய்த்
தடாவமர்வி விடாதுடைய தம்பியரை யுங்கொண்
டிடாவிறல் கொண்மாருதியி ருக்கும் வனமுற்றான்"

இன்னும் இவைபோல் வருவன மிகப்பல. அவை விரிவும், மிகையுமாமென்றஞ்சி இத்துடன் நிறுத்தப்பட்டது.

நமது புலவர் பெருந்தகையார், தேசாபிமானத்திலும், மொழிப்பற்றிலும் மிகுதியான அன்புடையாரென்பதற்கும், இரண்டொரு உதாரணங்களைக் காட்டி இவ்விஷயத்தை முடிக்கின்றோம். அவைகள் அடியில் வருமாறு.

"அண்டர்குலபதியாம்விடைவாகனன்
அம்பொன்முடிமலர்நாறிடுதாளினன்
எண்டிசையுமனுநீதிசெய்கோலினன்
எங்குமொருகுடையாலிடுநீழலன்
மண்டுகிரணசிகாமணிமோலியன்
வண்டுமதுநுகர்தாதகிமாலையன்
மிண்டுமுதுபுலியேறுபதாகையன்
வென்றிவளவனையார் நிகர்வீரரே"

என்பது சோழனையும்,

"மீனவன் வழுதிமாறன் வெண்மதி மரபில் வந்தோன்
வானவர் முதல்வன் சென்னி வரிவளை யுடைத்து மீண்டோன்"

என்பது, பாண்டியன், தேவர்கோனாகிய இந்திரனை மகுட பங்கம் செய்த செய்கையையும்,

"காலினாற் றுகைத்து வேலைக் கனைகட லேழு முன்னாள்
வேலினாற் சுவற்றுங் கொற்ற வெங்கயல் விலோத வீரன்"

என்பது, பாண்டியன் ஒரு காலத்தில் தனது மதுரைமாநகர் மீது பொங்கியெழுந்த கடலின்மீது கோபித்து அதனை வேலி னால் வற்றச்செய்து, தன் காலில் விழுந்து வணங்கச் செய்த வரலாற்றையும்,

"முழுதுணர்ந்தருள் முனிவரன்புகல் மும்மைவண்ட மிழும்
பழுதறும்படி தெளிஞரேறிய பலகையொன் றுடையான்"

என்பது, வழுதியர்கோன் தமிழ்ச்சங்கத்தை யுடையானும், தமிழ் வளர்க்குந் தகுதியானுமா மென்பதையும்,

"கூறிய செஞ்சேலோடு குறித்தெதிர் கொண்டவைவை
யாறுடையான்"

என்பது, பாண்டிய நாட்டிலோடும் வையைநதி, தண்டமிழ்ப் பாடல்களின் தெய்வத் தன்மையையும், சைவமதத்தில் மெய் வைத்த உயர்வையும் தெரிவிப்பதனால், பாண்டியனையும்;

"பாரவுபேருடைச்சேர செம்பியருடன்
பாண்டியன் முதலோரும்"

எனச் சேரனையும் புகழ்ந்தவாறும். இவை புலவரது தேசாபிமானத்தையும்;

"காவிரியென்னத் தப்பாக் கருணையான்" என, நிடத நாட்டு "நளன்" என்னும் நாம வேந்தனது கருணைக்கு, தமிழ்நாட்டுக் கீர்த்தி மல்கிய காவிரி நதியை, குளிர்ச்சிக்கும், தவறாமைக்கும் உவமை கூறியதும்;

"தங்கள்மால் வரையில் வைகுந் தமிழ்முனி தன்னைப்போல
பொங்குவெ ண்டாசங்க முந்நீர்ப் புணரிக ளேழுஞ் சேர
வெங்கையால் வாருங் கொற்ற வெழமா மேற் காண்டானே"

என்று இவர் பாடுவதனால், செந்தமிழுக்குத் தொன்மையில் இலக்கணத்திற்குப் பேராசிரியாக விளங்கிய அகத்தியர் கடலைக்குடித்தருளிய கதையைக் குறிப்பித்ததும்;

"தங்கள்தமிழ்க்குழலிசையைத் தன் செவிக்குவிடம்"

என்றதனால், வேய்ங்குழலின் இசைப்பாட்டின் இனிமைக்குத் தமிழ் மொழியை உவமித்ததும்;

"தங்கள்மூவகைத் தமிழும்போலச் சிந்தையிற்
குளிக்குமாறு சிலிமுக மூன்று விட்டான்"

என்றதில், அம்புகள் நன்ருகப் பகைவர் நெஞ்சிற் பதிந்திடு தற்குத் தமிழ் பாஷை, கற்றவர் மனதில் பதிதலே உவமையாக்கியதும், வில்லியாருக்குள்ள தமிழபிமானத்தையும் நன்கு விளக்குகின்றது. மற்றும், இவர்:—

"உருகுங்கமழ் நெய்பாலிருபாலுங் கரையொத்துப்
பெருகுந்துறை யேழேழுபிறப்புங் கெடமூழ்கி
கருகுங்கருமுகின் மேனியர் கவிஞானியர் கண்ணிற்
பருகுஞ்சுவையமுதானவர் பாதந்தலைவைத்தான்"

என்ற தமது செய்யுளில், தமிழ்க்குரவரும், கவி ஞானியருமாகிய திருஞான சம்பந்தப் பெருமானையும்;

"ஐயானனனியல் வாணனையடிமைக் கொளமெய்யே
பொய்யாவண மெழுதும்பதி பொற்போடு வணங்கா
மெய்யாகம வதிகைத் திருவீரட்டமுநேமிக்
கையானனகீந்திர புரமுங்கைதொழுதான்"

என்று சிவபிரான் ஸ்ரீ சுந்தரமூர்த்திகளைத் தாம் அடிமை கொள்ள ஆவணம், (முறிச்சீட்டு) எழுதிய விவரத்தையும்;

"வளவன்பதிமுதலாக வயங்கும்பதிதோறுந்
துளவங்கமழதி சீதளதோயங்கள் படிந்தே
யிளவண்டமிழெழுதேடு முன்னெதிரேறிய துறைசூழ்
தளவங்கமழ்புறவஞ் செறிதண்கூடல் புகுந்தான்"

என்றது ஞானசம்பந்தப் பெருந்தகையார் பாடிய தேவாரப் பதிகச் சுவடி வையை வெள்ளத்தின் எதிர் சென்ற அதிசயத் தன்மையையும் அறிவிப்பதனுல், தமிழ்ப் பெரியார்களிடத்தும், அவர்கள் தமிழகத்திற் செய்துகாட்டிய அற்புதத்

திறமையினிடத்தும் தமக்குள்ள மதிப்பை வெளிப்படுத்திக் கொண்டனர்.

## இறுவாய்.

இவ்வளவே, வில்லிபுத்தூரார் வரலாறாகத் தெரிந்தவை. இச்செய்திகளால், வில்லியார் தமிழ்மொழி வாணர்களில் கி. பி. (15-ஆம்) நூற்றாண்டின் காலத்தில், தலைசிறந்தாராய் விளங்கிய புலவர் பெருமக்களுள், முதன்மையுடையாரென்பதும்; வடமொழியிலுள்ள சொல் பொருள் கருத்துக்களைத் தமிழ்மொழியில் காப்பியத்துள், இடமறிந்து பொருத்தித் தமது அரும்பெருந்திறமையை விளக்கிய அருந்தமிழ் வாணரென்பதும்; மொழிப்பற்றிலும், அதன் வளர்ச்சியிலும் மிக்காரென்பதும்; தெய்வபக்தியிலும், சீரிய ஒழுக்கத்திலும் மேலோரென்பதும்; மற்றும், இவரது உத்தமகுண விசேடங்களும் நன்கு விளங்கும். இத்தகைய செந்தமிழ்ப் பேராசிரியர் புகழ்பெற விளங்கிக் கீர்த்திபடைத்தது நமது கொங்கு நாடெனின், அதற்கு இதனினும் சிறந்த பெருமையாதுளது.

நலம்! நலம்!! நலம்!!!

முற்றிற்று.

ஸ்டார் பிரஸ், தாமஸ் வீதி, கோயமுத்தூர்.

# விளம்பரம்.

## 'கொங்குமண்டல சதகம்.

### (மூலமும் - உரையும்)

### புதிய பதிப்பு.

இச்சதகம் நீண்ட நாள் முயற்சியின் பயனாய் அரிதில் கிடைக்கப் பெற்றது. இது இதுவரையில் வெளிவராமல், முன்னர் வெளிவந்துள்ள கொங்கு மண்டல சதகத்தில் காணப்படாத புதிய கருத்துக் களும் கவிச்சுவையும் வாய்ந்து அரிய இனிய விஷயங்களைத் தன்னுட்கொண்டது.

இதற்குப் புதிதாகப் பொழிப்புரையும், இலக்கணக் குறிப்பும், சரிதவிளக்கமும், தமிழில் புலமையும் அநுபவமும், ஆராய்ச்சியும் பெற்ற அறிஞர்களைக்கொண்டு எழுதப்பட்டு அச்சேறும் பருவத்திலிருக்கிறது.

ஆப்டோன் படங்கள் பல, சதகத்துட் போதிந்துள்ள வரலாறுகளின் கருத்துக்களை விளக்குவனவாய் அமைக்கப் பெற்றுள்ளன.

கொங்கு நாட்டு அரும்பெரும் வரலாற்றை உள்ளபடி விவரிக்கும் இச் சதகத்தைக் கொங்கு நாட்டினரும், பிற தமிழ் மக்களும் ஆதரிக்குமாறு கோருகிறோம்.

பிரதிகளை விரும்புவோர் முன்னடியே தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்வாராக.

விலாசம்

சி. கு. நாராயணசாமி முதலியார்,

Coimbatore. 22-8-33 } கலைமகள் தமிழகம், 139, தாமஸ்வீதி, கோயமுத்தூர்.